பக்கம் 15

# உதயன்

24
பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 231 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 31, செவ்வாய் 15.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கம் 03


32°C

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



காஸாவில் தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள் 7



மன்மோகன் சிங் மீது சி.பி.ஐ.விசாரணை ? 8



வெற்றிக்கிண்ணம் உருத்திரபுரம் வசம் 17



தலையீடுகள் 14

# பல்கலை. விரிவுரையாளர் நியமனம் முறைகேட்டை எதிர்த்து மனு தாக்கல்

## உயர்நீதிமன்றில் இன்று விசாரணைக்கு வருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட உதவி விரிவுரையாளர் நியமனத்தை இடைநிறுத்தக் கோரியும், இரத்துச் செய்யக் கோரியும், உயர்நீதிமன்றில் அடிப்படை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிவர்களில் தகுதியும் திறமையும் கூடியவர் இருந்தபோதும், அவரை நிராகரித்து வேறொருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதை எதிர்த்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீடத்துக்கு உதவி விரிவுரை யாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சையிலேயே இந்த ஊழல் இடம்பெற்றது என்று அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பல்கலைக் கழகப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும், மற்றும் துணைவேந்தர் வசந்தி அரசரத்தினமும் இந்த மனுவில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகத்தில் முதற் தரத்தில் சித்தி பெற்றதுடன் ஏற்கனவே தற்காலிக உதவி விரிவுரையாளராக கடமையாற்றிய மூப்பு நிலை அடிப்படையிலும் தான் முதல் நிலையில் இருந்தபோதும் தன்னை நிராகரித்து, இரண்டாம் மேற் தரத்தில் சித்திபெற்றவரும், உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியதிலும் இளநிலையில் உள்ளவருமான ஒருவரை நியமனம் செய்திருப்பது தன்னுடைய அடிப்படை உரிமையை மீறும் செயல் என்றும் எனவே அந்த நியமனத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் ரவிவதனி துரைசிங்கம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவை ஏற்றுக் கொண்டுள்ள உயர்நீதிமன்றம், இன்று அதன் மீது விசாரணை நடத்தவுள்ளது. (உ)

## "நாய் குரைத்து மலை இறங்காது"

### வடக்கு ஆளுநர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பினை பெரிதாக பொருட்படுத்தப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் வட மாகாண ஆளுநராக மீண்டும் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி. அரச ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கூட்டமைப்பினரின் எதிர்ப்பும் வட மாகாண சபையின் புறக்கணிப்பும் எனக்கொன்றும் புதிதல்ல. நாய் குரைப்பதற்காக மலை இறங்காது என்பது அனைவரும் அறிந்த உண்மை. வட மாகாண ஆளுநராக மீண்டும் பதவியேற்றமையை கூட்டமைப்பின் உறுப்பினர்களும், வட மாகாண முதலமைச்சரும் புறக்கணித்திருந்தாலும் அவர்களுக்கு எனது அன்பையும் காருண்யத்தையுமே வெளிப்படுத்த விரும்புகின்றேன். வட மாகாண சபையின் கீழ் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்ட 13 அபிவிருத்தித் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு உறுதி பூண்டுள்ளேன்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## இலங்கையின் அபிவிருத்தி கண்டு பொறாமையாம்



கொழும்பு, ஜூலை 15

நெதர்லாந்து பிரதி வர்த்தக அமைச்சர் சிமொன் இம்டஸ் மற்றும் அவரது வர்த்தக குழுவினர் இலங்கையுடனான வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபட விருப்பம் தெரிவித்ததுடன், இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை கண்டு பொறாமையடைகின்றோம்என்றும்தெரிவித்துள்ளனர்.

மூன்று நாள்கள் உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்தஅமைச்சர்சிமொன் இம்டஸ் மற்றும் அவரது வர்த்தகக் குழுவினர் கிங்ஸ்பெறி விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சிமொன் இம்டஸ்,

"இலங்கையின் துரித அபிவிருத்தியின் பொருட்டு எமது நாட்டால் முடிந்த முதலீட்டு வசதிகளை வழங்கவுள்ளோம். அதனால் இலங்கை மட்டுமல்லாது நெதர்லாந்தும் பல நன்மைகளை பெற்றுக்கொள்ளும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மீனவர் பேரணிக்கு நீதிமன்று தடை

யாழ்ப்பாணம், ஜூலை 15

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், காணாமற் போனோர் பிரச்சினை, மீள்குடியமர்வு, மீனவர்கள் பிரச்சினை என்பவற்றை முன்னிறுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிக்கு யாழ்.நீதிமன்று தடை விதித்துள்ளது.

குறித்த பேரணி நடத்தப்பட்டால், அதில் முறுகல் நிலைமைகள் ஏற்படும் என்றும், அதனால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தெரிவிக் கப்பட்டதை அடுத்தே, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த வழக்கில் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகிய யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ்அத்தியட்சகர் நிஹால் பெரேரா மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அமரசேகர ஆகியோர் "பேரணி நடத்தப்பட்டால் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து 12 பேர் பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் அளித்துள்ளனர்"- என்று தெரிவித்தனர்.

அவற்றையெல்லாம் பரிசீலித்த நீதிமன்றம், "யாழ்.நகரிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்.கச்சேரி வரை ஆர்ப்பாட்டம் அல்லது ஊர்வலம் நடத்துவதாக இருந்தால் அது பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதுடன் அதற்கு அனுமதியளித்தால் கலவரம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று நீதிமன்று கருதுகின்றது. பொதுமக்களுக்கும் அவர்களது சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதனால் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை யாழ். நகரிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்.கச்சேரி வரை வீதியில் ஊர்வலம் நடத்த குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 106(1) இன் கீழ் நீதிமன்று தடைவிதிக்கிறது"- என்று தீர்ப்பு வழங்கியது.(ற-4)



சுமார் 250 வருட வரலாற்றைக் கொண்ட இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தலைமையகமான சுங்க மாளிகை நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவைக்கப்பட்டது.

# திட்டமிட்டவாறு பேரணி நடக்கும்

## ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

உயிர் அச்சுறுத்தல்களோ அல்லது வேறு எதிர்ப்புகள் காணப்பட்டாலும் திட்டமிட்டபடி நாளை (இன்று) யாழ்ப்பாணத்தில் பேரணி நடத்தப்படும். இலங்கையில் சட்டத்தின் ஆட்சி முழுமையாக இல்லாது போயுள்ள நிலை மையில் போராட்டத்துக்கு ஆத ரவாக நீதியான தீர்ப்பை நீதி மன்று வழங்கவேண்டும் - இவ்வாறு தெரிவித்துள் ளார் தேசிய மீனவர் ஒத்து ழைப்பு இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் அன்டனி யேசு தாசன்.

யாழ்பாடி விடுதியில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை முழுவதும் பரவலாக சில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தினோம். அவற்றில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும், இந்திய இழுவைப் படகுகளுக்கு தீர்வு வேண்டும், எண்ணெய் மானியம் வழங்க வேண்டும் என்பன முக்கியமானவை. அவற்றுக்கு 3 மாதங்களுக்குள் தீர்வு பெறப்படும் என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்கள் முடிந்துள்ள நிலையில், உறுதிமொழி நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் மீண்டும் போராட்டம் நடத்தவுள்ளோம்.

> இந்தப் பேரணி யாழ். பஸ் நிலையத்தில் ஆரம்பித்து, யாழ். மாவட்ட செயலகத்தில் மனுக் கையளிப்புடன் நிறைவுறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மக்கள் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உள்ளனர்.


22 ஆம் பக்கம் பார்க்க


# காணி சுவீகரிப்பை எதிர்த்து 18ஆம் திகதி வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வலி.வடக்கில் தற்போது நில அளவை மேற்கொள்ளப்பட்டு காணிகளை சுவீகரிக்க முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக எதிர்வரும் 18 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

"வலி.வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக 2003 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் இடைக் கால தீர்ப்பில் கூட மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையும் மீறி மீளவும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வலி.வடக்கில் கீரிமலை மற்றும் நகுலேஸ்வரம் பகுதியில்


22 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு



கரணவாய், ஜூலை 15

தரம் 5 புலமைப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், கம்பர்மலை அ.த.க. பாடசாலை, கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயம், வல்வை சிதம்பராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 5 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-108)



இப்தார் நோன்பு தினத்தில் யாழ்ப்பாணம் மொகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் தினமும் காலையில் நோன்பு திறப்பதற்காக சிறுவர்களுக்கு கஞ்சி வழங்கப்படுகிறது. நேற்று கஞ்சி வழங்கும் போது எடுக்கப்பட்ட காட்சி இது. (ஜ-21)

## விபத்தில் சிறுவன் உயிரிழப்பு விமானப்படைச் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூலை 15

மொரட்டுவ சாந்த மைக்கல் வீதிக்கு அருகாமையில் விமானப்படைச் சிப் பாய்க்குச் சொந்தமான காரொன்று, ஏழு வயதான சிறுவன் மீது மோதியதில் அச்சிறுவன் மரணமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்துள்ளார் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து விமானப்படைச் சிப்பாயை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் சீனி வாங்குவதற்காக கடைக்குச் சென்று திரும்பும்போதே இந்த விபத்தில் சிக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனாதிபதியின் நடவடிக்கை கேவலமானது; அசிங்கமானது

### சந்திரசிறி நியமனம் குறித்து சம்பந்தன் சீற்றம்

"வடக்கு மக்களின் இறைமைக்கு மதிப்பளிக்காமல், மக்களின் அமோக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு முதலமைச்சரிடம் நேரில் அளித்த வாக்குறுதியை உதாசீனம் செய்து மீண்டும் ஆளுநராக முன்னாள் இராணுவத் தளபதி சந்திரசிறியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். ஜனாதிபதியின் இந்தத் தான்தோன்றித்தனமான நடவடிக்கை கேவலமானது; அசிங்கமானது."

- இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

"மக்களின் இறைமையையும், மக்களின் பிரதிநிதிக்கு அளித்த வாக்குறுதியையும் அசிங்கப்படுத்திய ஜனாதிபதியையும், அவரால் நியமிக்கப்பட்ட புதிய ஆளுநரையும் இனிமேல் நாம் எப்படி மதிப்பது" என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

"வடக்கு மாகாண ஆளுநராக சந்திரசிறியின் மீள் நியமனம், வடக்கு மாகாண சபைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருடன் எதிர்வரும் 9ஆம் திகதி மாலை யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்த பின்னர் மறுநாள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் 34ஆவது மாநாட்டில் விசேட உரையாற்றவுள்ளேன்" என்றும் சம்பந்தன் எம்.பி. கூறினார்.

இது தொடர்பில் அவர் நேற்று 'உதயனி'டம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"முன்னாள் இராணுவத் தளபதியான சந்திரசிறியை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கி அவரின் இடத்திற்கு சிவில் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மக்கள் சரித்திர வெற்றியடைய வைத்தனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வடக்கு மாகாண சபை வந்த பின்னர் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் மாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சந்திரசிறியை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கி அவரின் இடத்திற்கு சிவில் பிரதிநிதி ஒருவரை நியமிக்கவேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதுமட்டுமன்றி, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில், முன்னாள் இராணுவத் தளபதியான ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக் காலம் முடிவடைந்ததும், அவருக்கு எதுவித பதவி நீடிப்பும் வழங்கப்படாது என்றும், சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதலமைச்சரிடம் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

ஆனால், வடக்கு மக்களின் இறைமைக்கு மதிப்பளிக்காமல், மக்களின் அமோக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு முதலமைச்சரிடம் நேரில் அளித்த வாக்குறுதியை உதாசீனம் செய்து மீண்டும் ஆளுநராக முன்னாள் இராணுவத் தளபதி சந்திரசிறியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.



ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குத்தான் இருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், மக்களின் இறைமையையும், மக்களின் பிரதிநிதிக்கு அளித்த வாக்குறுதியையும் ஜனாதிபதி அசிங்கப்படுத்தியுள்ளார். இவ்வாறான ஜனாதிபதியையும், அவரால் நியமிக்கப்பட்ட புதிய ஆளுநரையும் இனிமேல் நாம் எப்படி மதிப்பது?

ஜனாதிபதியின் இந்தத் தான்தோன்றித்தனமான நடவடிக்கை கேவலமானது; அசிங்கமானது. இதனைவிட வேறு எதனையும் நாம் கூற விரும்பவில்லை. அவ்வாறு கூறுவது எமக்கே வெட்கக்கேடானது" - என்று கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி.

## விசாரணை அறிக்கையைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடுப்பு

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அதன் விசாரணைக் குழு 2015 மார்ச்சில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் ஆபத்து இருக்கின்றது எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டினார்.

"குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் ஆபத்து இருக்கின்றது எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் அமைச்சரிடம் நேற்று 'உதயன்' வினவியபோதே அவரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இவை தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச விசாரணையானது பக்கச்சார்பற்றதாகவும், சுயாதீனமாகவும் இடம்பெறாது என்பதாலேயே அரசு அதனை நிராகரித்துள்ளது.

ஐ.நா.விசாரணைக்குழுவுக்கு இலங்கைக்குள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டாலும், விசாரணை இடம்பெறும் என்பது உறுதி. ஒருவேளை, இப்போதே சர்வதேச மத்தியில் இலங்கைக்கு எதிராக ஆதாரம் திரட்டும் பணியில் அவர்கள் இறங்கியிருக்கக் கூடும். இறுதி அறிக்கைகூட தயாரிக்கப்பட்டிருக்கலாம்.

அதேவேளை, இலங்கையை பிரித்துவிட வேண்டும் என்பதே மேற்குலகின் நிகழ்ச்சி நிரலாகும். ஆனால், நாம் அதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் வழிவகுத்துவிடக் கூடாது. அதே நேரம், ஐ.நா. குழு முன்னெடுக்கும் விசாரணையின் அறிக்கையை அது அடுத்த வருட மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவா மாநாட்டின் போது சமர்ப்பித்தால் நாட்டுக்கு ஆபத்து வரக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

ஏனெனில், அது சமர்ப்பிக்கும் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படலாம். அவ்வாறு தொடுக்கப்பட்ட பின்னர் உரியவர்களை ஒப்படைக்குமாறு பிடியாணை பிறப்பிக்கப்படலாம். இவ்வாறு பிறப்பிக்கப்பட்டாலும் இலங்கை அரசு எவரையும் ஒப்படைக்காது. எனவே, உரியவர்களை ஒப்படைக்கும் அரசொன்றை அமைக்கும் முயற்சியிலேயே அவை ஈடுபட்டுவருகின்றன. கூடும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவே மாட்டோம்." என்றார்.

# காணாமல்போனோர் பற்றிய இடைக்கால அறிக்கை ஒகஸ்ட் முதல் வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

### ஆணைக்குழுவின் அடுத்த அமர்வு மன்னாரில் 4 நாள்கள்

கொழும்பு, ஜூலை 15

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு, தனது இடைக்கால விசாரணை அறிக்கையை ஒகஸ்ட் முதல் வாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கவுள்ளது. இந்தத் தகவலை ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் நேற்று 'உதயனி'டம் உறுதிப்படுத்தினார்.

அறிக்கையை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும், இது தொடர்பில் இவ் வாரம் முக்கிய கூட்டமொன்று நடைபெறவுள்ளதாகவும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஒகஸ்ட் மாதத்தில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும், இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்குரிய காலவரையறை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே பெரும்பாலும் விசாரணைகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காணாமற்போனோரின் உறவினர்களுக்காக அரசு செய்ய வேண்டிய நடவடிக்கைகள், தாம் யார் யாரை இன்னும் விசாரிக்கவேண்டும் என்பவை உட்பட மேலும் சில முக்கிய விடயங்கள் இடைக்கால விசாரணை அறிக்கையில் முன் வைக்கப்படலாம் எனவும், சிபாரிசுகள் சில முன்வைக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்தகட்ட அமர்வை மன்னாரில் நடத்தவுள்ளது. நான்கு நாள்கள் இந்த அமர்வு இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் குறித்த குழு மீண்டும் முல்லைத்தீவு செல்லும் என அறிய முடிகின்றது. காணாமற்போனோர் தொடர்பில் குறித்த ஆணைக்குழுவுக்கு இதுவரையில் சுமார் 19,000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 31 செவ்வாய்க்கிழமை (15.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 231

# காணிகளை துப்புரவு செய்து நாமாகவே குடியேறுவோம்

## கீரிமலை மக்கள் படையினரிடம் நேற்று உறுதியாகத் தெரிவித்தனர்

**யாழ்ப்பாணம், ஜூலை 15**

**கடற்படைத் தேவைக்காக சுவீகரிப்புச் செய்யப்படவுள்ள தமது காணிகளை துப்புரவுசெய்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு தாம் குடியமரப் போகின்றோம் என்று காணி உரிமையாளர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.**

**அத்துடன் காணி உரிமையாளர்கள் தமது காணிகளை துப்புரவு செய்து குடியமர்வதற்கு, வலி.வடக்குப் பிரதேச சபை முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.**

கடற்படையினரின் தேவைக்காக நகுலேஸ்வரத்தில் பொது மக்களின் 183 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவற்றை சுவீகரிப்பதற்கு முன்னோடியாக காணிகளை அளவீடு செய்வதற்கு நிலஅளவைத் திணைக்களத்தினர் நேற்று அந்தப் பகுதிக்கு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையறிந்து காணி உரிமையாளர்கள் அந்தப் பகுதியில் கூடினர். அந்தப் பகுதியில் கடற்படை முகாமுக்கு முன்னால் ஒன்றுகூடி படையினருடன் கலந்துரையாடினர். இதன் போது உயர்பாதுகாப்புக்கு வெளியே உள்ள தமது காணிகளை துப்புரவு செய்யப் போவ தாகவும் அவர்கள் கடற்படையினரிடம் தெரிவித்தனர். எனினும் இதனை ஏற்க மறுத்த கடற்படை அதிகாரி 'இது தொடர்பில் மேலிடத்தில் கேட்டே பதில் சொல்ல முடியும்' என்று மக்களுக்கு பதில் அளித்தார். இதனை மறுதளித்த மக்கள் தாம் காணிகளை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை துப்புரவு செய்கின்றோம். நீங்கள் எம்மை அடித்து விரட்டக் கூடாது என்று கடற்படையினரிடம் தெரிவித்திருந்தனர். எனினும் கடற்படையினர் மக்கள் கருத்துக்கு எந்தப் பதிலும் வழங்கவில்லை. இந்த நிலையில், உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலுள்ள தமது காணிகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை துப்புரவு செய்வதென்று தீர்க்கமாக மக்கள் முடிவெடுத்தனர். அத்துடன் மக்களினால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு தமது முழுமையான ஆதரவை பிரதேச சபை வழங்கும் என்று தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். (ஐ-5)

## 27 பேருக்கு நாளை நியமன கடிதங்கள்

தென்மராட்சி, ஜூலை 15

சாவகச்சேரி நகரசபையில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 27 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக நகர சபை செயலாளர் கா.சண்முகதாஸன் அறிவித்துள்ளார்.

கடந்த ஜூன் 5,6,7 ஆகிய திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மாகாண ஆளுநர் ஆகியோரின் அங்கீகாரத்தின் பின்னர் ஆட்சேபனைகளுக்காக விளம்பரம் செய்யப்பட்ட பின்னர் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## மக்களின் எதிர்ப்பையும் மீறி வலி.வடக்கில் காணி அளவீடு?



யாழ்ப்பாணம், ஜூலை 15

கீரிமலை, நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக பொதுமக்களின் காணியை சுவீகரிக்கும் நோக்குடன் அளவீட்டு நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், காணி உரிமையாளர்கள் அங்கு திரண்டனர்.

எனினும் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் பொலிஸாரின் உதவியுடன் நில அளவை அதிகாரிகள் சென்று அந்தப் பணிகளை முன்னெடுத்தனர் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

கீரிமலை, நகுலேஸ்வரம் (ஜே/226) கிராமசேவையாளர் பிரிவில் கடற்படையினரின் தேவைக்கு என்று 183 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படப் போவதாக சுவீகரிப்பு அறிவித்தல் கடந்த ஏப்ரல் மாதம் ஒட்டப்பட்டிருந்தது.

இதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதனையும் மீறி கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பகுதி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கு ஆளுநர் ஒருவர் தேவையை ஆராய வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை.15

அரசின் கைப்பொம்மையாக, தமிழ் மக்களுக்கு விரோதமாக செயற்படும் ஆளுநர் ஒருவர் வடக்கில் தேவை தானா? என்பது குறித்து நாம் ஆராய வேண்டும். ஏனென்றால் சிவில் நிர்வாகி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டாலும் அரசின் ஏவல்களையே நிறைவேற்றுவார். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் ஆளுநர் பதவியில் இருப்பவர், கொழும்பில் உள்ள அரசின் கட்டளையின் பிரகாரமே செயற்படுகின்றனர்.

கடந்த 65 வருடங்களாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். அரசியல் ரீதியாகவும் உரிமைகள் விடயத்திலும் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு கடும்போக்கு சிந்தனையையே கொண்டுள்ளது. தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெறுவதையும் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்வதையும் விரும்பாததன் காரணத்தினாலேயே காலத்துக்குக் காலம் தென்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஆளுநரான சந்திரசிறி; வாழ்த்தி வரவேற்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்.மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளமையை தான் வரவேற்கிறார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இராணுவப் பின்னணி கொண்ட ஒருவரை ஆளுநராக மீளவும் பதவி நீடிப்புச் செய்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சில தமிழ்க் கட்சிகளும் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள வேளையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திரசிறியின் நியமனத்தை வரவேற்றுள்ளார்.

இதேவேளை, பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ள வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை, பத்தரமுல்லவிலுள்ள அவரது அலுவலகத்தில் நேரில் சென்றும் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் வாழ்த்தியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காக வழங்கிய சிறப்பான பணியைப் போன்று எதிர்காலத்திலும் பணியாற்ற வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பும் வகையில் என்னோடு இணைந்து பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களுக்கு செயலமர்வு

உள்ளூராட்சி மன்றங்களில், மக்கள் பங்களிப்புடனான ஆட்சி முறை தொடர்பிலான தெளிவூட்டல் செயலமர்வு ஒன்று வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ரில்கோ விடுதியில் இடம்பெறவுள்ளது.

பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையம், இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பன

(22 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி உதவியாளர்கள் சங்கம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜூலை.15

பதவியுர்வு மற்றும் வெளிக்களக்கடமைகள் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அபிவிருத்தி உதவியாளர்களுக்கென சங்கம் ஒன்று அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் கடந்த 12 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை சந்தித்து இந்தத் தீர்மானத்தை தாம் எடுத்தனர் என்றும் அவர்கள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு மாகாண சபை கடமைகளை முடக்கும் வகையில் தொடர்ந்தும் வடக்கில் இராணுவ சர்வாதிகாரம் திணிப்பு

## மேஜர் ஜெனரல் சந்திரசிறி மீண்டும் ஆளுநராக நியமிக்கப்பட்டது குறித்து சரவணபவன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாண சபையின் கடமைகளைத் தொடர்ந்து முடக்கும் நோக்குடன் இராணுவ சர்வாதிகாரம் திணிக்கப்படுகிறது.

மீண்டும் ஐந்து வருட காலத்துக்கு வடக்கின் ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நியமிக்கப்பட்டமையானது ஜனநாயகவிரோதச்செயல் மட்டுமன்றி, அராஜகப் போக்கும் கூட. இந்த நியமனத்தை வடக்கு வாழ் தமிழர்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்.

வடக்கின் ஆளுநராக மீண்டும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி நியமித்திருப்பதை ஆட்சேபித்து சரவணபவன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண ஆளுநராகப் பதவி வகித்த மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பதவிக்காலம் நிறைவடைந்துவிட்ட நிலையில் அவர் மீண்டும் அதே பதவிக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்குக் கடமையாற்றும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த நியமனமானது தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் விதத்திலும், அவர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்யும் வகையிலும் அமைந்துள்ளது.

வடமாகாண மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் உட்பட மாகாணசபை உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநராக வடமாகாண சபையுடன் இணக்கப்பாட்டுடன் பணியாற்றக்கூடிய ஒரு சிவில் அதிகாரியைநியமிக்குமாறு தொடர்ந்து கோரிவந்தனர். வடமாகாண முதலமைச்சர் அரசுடன் இணைந்து வடபகுதியின் அபிவிருத்திகளையும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற விடயங்களிலும் செயற்படத் தயாராகவுள்ளதாக பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் பல முயற்சிகளையும் மேற்கொண்டார். மீண்டும் மீண்டும் ஜனாதிபதியுடன் சந்திப்புகளை நடத்தி அதற்கான முயற்சிகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டார். அதன் ஒரு பகுதியாக அவர் வட மாகாண ஆளுநராக ஒரு சிவில் அதிகாரியை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்தார். மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பதவிக்காலம் நிறைவடையச் சில நாள்களே இருப்பதால் அவரது பதவிக்காலம் முடிந்த பின்பு அந்தப் பதவிக்கு ஒரு சிவில் அதிகாரியை நியமனம் செய்வது பற்றி கவனம் எடுக்கப்படும் என முதலமைச்சரிடம் ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி தனது வாக்குறுதியைத் தானே மீறியது மட்டுமன்றி வடமாகாண முதலமைச்சரையும் வடமாகாணசபையையும் உதாசீனம் செய்யும்வகையிலும் அவமதிக்கும் வகையிலும் மீண்டும் மேஜர் ஜெனரல் சந்திரசிறியை ஆளுநராக நியமித்துள்ளார்.



### வடக்கில் இன்று இரு நிர்வாகங்கள்

இன்று வடக்கில் இரு நிர்வாகங்கள் இயங்கி வருகின்றன. வடமாகாண ஆளுநர் அதிகாரிகள் மூலம் வடமாகாண நிர்வாகத்தைத் தனது கைகளில் வைத்துக்கொண்டுதானே நடத்தி வருகின்றார். வட மாகாண சபை திட்டமிட்ட வகையில் செயலிழக்கச்செய்யப்பட்டுள்ளது. அதாவது வடமாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு அவற்றைச் செயற்படுத்த முடியாத இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள அதேவேளையில் வடமாகாண முதலமைச்சருக்கோ அமைச்சர்களுக்கோ எந்தவித பங்கும் இல்லாமல் பல விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடமாகாண சபையின் முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் சில வாக்குறுதிகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்கள் அனைவரும் தம்மைத் தெரிவு செய்த மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள். மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமையைக் கொண்டவர்கள். ஆனால் ஓர் இராணுவ அதிகாரியின் நிலை அதுவல்ல. அவர் மேலிடத்தின் கட்டளைகளைக் கேள்விக்கு இடமின்றி நிறைவேற்ற வேண்டியவர். அவர் தனது மேலாளர்களுக்கு மட்டுமே பதில் கூறக் கடமைப்பட்டவர். அதேபோன்று அவர்கள் தங்கள் கட்டளைகளைத் தமது அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள், கேள்விக்கு இடமின்றி நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள்.

### நிதி நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம் வழங்காது இழுத்தடிப்பு

இந்த இரண்டு எதிரெதிரான போக்குகளுக்கு இடையே மாகாணசபை சிக்கியுள்ளது. இன்னும் சொல்லப்போனால் மாகாணசபையின் கடமைகளை முடக்கும் வகையில் ஒரு ஜனநாயக விரோத இராணுவ சர்வாதிகாரம் திணிக்கப்படுகின்றது என்றே கூற வேண்டும். மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நியதிச்சட்டம்கூடதிட்டமிட்டவகையில் மாதக் கணக்கில் அங்கீகாரம் வழங்கப்படாமல் ஆளுநரால் இழுத்தடிக்கப்படுவதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக, முத்திரைவரி கைமாற்றல் நியதிச்சட்டம் இன்னமும் அங்கீகரிக்கப்படாமையால் மாகாண சபை அமைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் முத்திரைவரி மூலமான நிதி மாகாண சபைக்கு கிடைக்கப்பெறவில்லை.

கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களுக்கு மாகாண அமைச்சர்கள் இருந்தபோதும் அவற்றுக்கு ஆளணியினரின் அதிகாரம் வலிந்து புகுத்தப்பட்டு அங்கும் குழப்பமான நிலைமைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இப்படியான ஒரு ஜனநாயக விரோத சூழ் நிலையில் மீண்டும் அதே இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சந்திரசிறி நியமிக்கப்பட்டுள்ளமை மாகாணசபையின் இயக்கத்துக்கு முட்டுக்கட்டை போடும் ஒரு முறையற்ற சர்வாதிகார நடைமுறையென்றே நாம் கருதுகின் றோம்.

அந்த வகையில் மேஜர் ஜெனரல் சந்திரசிறி வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்த நியமனத்தை மீள் பரிசீலனை செய்து ஒரு பொறுப்பு வாய்ந்த சிவில் அதிகாரியைஆளுநராகநியமிக்கும்படி கேட்டுக்கொள் கின்றோம். ஜனநாயக ஆட்சி என்பது ஒரு பிரிவினரால் மற்றவர் மீது அதிகாரம் செலுத்துவது அல்ல என்பதையும் அது மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஒரு ஆட்சி என்பதையும் இங்கு நினைவூட்டி வைக்க விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# தரம் 5 மாணவருக்கு விசேட மாதிரிப் பரீட்சை

தென்மராட்சி, ஜூலை 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட மாதிரிப் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமை அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

செலான் வங்கியின் சாவகச்சேரிக் கிளையும், சாவகச்சேரி டிபிஎம்எஸ் கணினி நிறுவனமும், தென்மராட்சி கல்வி வலயமும் இணைந்து இந்தப் பரீட்சையை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம் கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரியம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளைய தினம் 16ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை 30ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

# மீளாய்வு அறிக்கை வெளியீடு

ஆடிப்பிறப்புத் தினமான நாளை மறுதினம் 17ஆம் திகதி வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு அறிக்கை வெளியிடப்படவுள்ளது. காலை 9.30 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெறவிருக்கும் நிகழ்வின்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மேற்படி அறிக்கையை வெளியிட்டு வைப்பார். (க)


## மரண அறிவித்தல்

### சபாபதி மகாலிங்கம் பரமநாதன்



யாழ்.கைதடியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா Brisbaneஐ வதிவிடமாகவும் கொண்ட சபாபதி மகாலிங்கம் பரமநாதன் 11.07.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம்-செல்வரத்தினம் (ஆசிரியர்கள்-கைதடி) தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னதம்பி (ஆசிரியர்)- முத்துப்பிள்ளை (கைதடி) தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் (ராணி- ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும், Dr. சுதர்ஷினி (தர்ஷி), Dr.நிரோஷா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.நிமலனின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமனாரும், சஹானா ஹரனின் அருமைத் தாத்தாவும், பரமானந்ததேவி (கைதடி), பரமானந்தராசா (கொழும்பு), காலஞ்சென்ற பரமநாயகம் (நெடுங்கேணி), கிருஷ்ணதாசன் (கொழும்பு), கணேஸ்வரன் (கொழும்பு), சுத்தானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மயில்வாகனம் (கைதடி), திலகவதி (கொழும்பு), நவமணி (நெடுங்கேணி), ஈஸ்வரகுமாரி (கொழும்பு), நாகேஸ்வரி (கொழும்பு), சுபாசினி (கனடா), கந்தராஜா (ஆஸ்திரேலியா), நாகேஸ்வரி திருஞானமூர்த்தி (கொழும்பு), இராஜேஸ்வரி ஆறுமுகராஜா (கைதடி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.7.2014 சனிக்கிழமை 10 மணிக்கு பிறிஸ்பேன், ஆஸ்திரேலியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு : தகவல்: சுத்தானந்தன்

ராணி (மனைவி) ஆஸ்திரேலியா - 61448746529
சுதர்ஷினி (மகள்) - ஆஸ்திரேலியா - 61434245849
நிரோஷா (மகள்) - ஆஸ்திரேலியா - 61403160843
பரமானந்ததேவி - இலங்கை
பரமானந்தராசா - இலங்கை
கிருஷ்ணதாசன் - இலங்கை
கணேஸ்வரன் - இலங்கை
கந்தராஜா - ஆஸ்திரேலியா - 61469849125
ஆறுமுகராஜா - இலங்கை
நாகேஸ்வரி திருஞானமூர்த்தி - இலங்கை - 94779906485
சுத்தானந்தன் - கனடா - 16477104590 (சி/14671) (7.6.3)

## வெளிவந்துவிட்டது

ஆடிமாதச் சிறப்புக்கள்

ஆசிரியர் தி.தவரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'ஆடிமாதச் சிறப்புக்கள்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்து புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(49936)(5.8.3)

தொடர்பு: 077 887 5357 /077 153 8126

## காணி விற்பனை

கோப்பாய் வடக்கு, இராசபாதை சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் (கிருஷ்ணன் கோயில் வீதியில்) தோட்டம் செய்யக்கூடிய குடியிருப்புக் காணி 12 பரப்பு விற்பனைக்குண்டு.

(சி/14670)(4.8.3)

தொடர்பு: 077 495 5593 (சுதா)

## பிரிவுத்துயர் பகிர்வு

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ஸ்ரீசாந்தினி மனோகரதாஸ் அவர்களின் அன்பு மாமியார்

**றெஜினா கனகம்மா பரஞ்சோதி**

அவர்கள் கடந்த (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்

யாழ். மத்திய கல்லூரி. (49935)(4.6.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும்,
மன்ற சேமிப்புத் திட்டத்தின் உறுப்பினருமான

**நாகரத்தினம் பார்த்தீபன்**

(உரிமையாளர்-இலட்சுமி வைண்டிங் வேக்ஸ் மற்றும் இலட்சுமி வாகன சுத்திகரிப்பு நிலையம், சாவகச்சேரி)

அவர்கள் 12.07.2014ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் (C/7721) (7.6.3)

## மரண அறிவித்தல்

### கந்தையா விஜயரட்ணம்



(Executive Officer, FrankFurt Main Airport, Germany)

39/4 ஏ, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிராங்பேட், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஜயரட்ணம் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பூலோகரட்ணம், குணரட்ணம், கனகரட்ணம்(கனடா), கமல வதனி, இராஜரட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதிவதனி, சியாமினி, றொவேனா, ஜெயக்குமாரன், லதா ஆகியோரின் மைத்துனரும், அபிராம், நிஸ்மதா, வெங்ஹா, றக்சிகா, மலோஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று(14.07.2014) திங்கட்கிழமை ஜேர்மனியில் உள்ள Hauptfriedh of Eckenheimer Land straBe 194 60 320 FrankFurt am Main Germany இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 16.07.2014 புதன்கிழமை இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24, அச்சுக்கட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (49927) (5.6.3)

தகவல்:க.பூலோகரட்ணம் J.P (சகோதரன்) 021 222 3868

# சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

பண்டத்தரிப்பு,ஜூலை 15
சாதனை படைத்த பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த 34 மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.
வடமாகாண மட்ட புத்தாக்கப் போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மேரிஜெரோனா, பட்டிமண்டபத்தில் சிறந்து விளங்கிய சாம்பவி, 3 ஆம் இடத்தைப் பெற்ற 19 வயது பெண்கள் ஹொக்கி அணி, 15 வயது பூப்பந்தாட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்ற பெண்கள் அணி என 34 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில்நடைபெற்றது. (க-422)



கௌரவிக்கப்பட்ட மாணவர்கள்

## ஆலயப் பொருளாளரை தாக்கியவரை கண்டுபிடிக்குக

*வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் மக்கள் வேண்டுகோள்*

உடுப்பிட்டி,ஜூலை 15
உடுப்பிட்டி நாவலடி பத்திர காளி அம்மன் ஆலயத்தின் பொருளாளரை தாக்கியவர்களை கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்துமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம்அந்தப்பகுதிமக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை பத்திர காளி அம்மன் ஆலயத்தின் திருவிழா வேலைகளை முடித்து விட்டு இரவு 10 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இனந்தெரியாத நபர்களால் ஆலயத்தின் பொருளாளர் தாக்கப்பட்டுள்ளார்.
இதில் உடுப்பிட்டி, நாவலடியைச்சேர்ந்ததங்கராசாதினேஸ் (வயது-29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஆலயப் பொருளாளர் தாக்கப்பட்டதுக்கு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு, தாக்கியவர்களை உடனடியாக சட்டத்தின்முன் நிறுத்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(வ-422)

## குளத்தைப் புனரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 15
ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட சிறு குளமான சின்னக்குளத்தை இந்த வருட கால போகச் செய்கைக்கு முன்பாகப் புனரமைத்து வழங்குமாறு அதன் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சின்னக்குளம் கடந்த நான்கு வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் நீரைத் தேக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்த இயலாத நிலையில் காணப்படுகின்றது. விவசாய விளைச்சலும் குறைவடைந்துள்ளது. எனவே விவசாயிகளின் நலன்கருதி இந்தக் குளத்தைப் புனரமைத்து வழங்குமாறு விவசாயிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க-500)

## வவுனியாவில் வீரமக்கள் தினம்

தமிழீழ மக்கள் கழகத்தின் 25 ஆவது வீரமக்கள் தின ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் இடம்பெற்றன.
ஆரம்ப நிகழ்வாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்டின்) கொடியை கழகத்தின் முக்கியஸ்தரும் வவுனியா நகரசபை உபநகரபிதாவுமாகிய க.சந்திரகுலசிங்கம் அரைக் கம்பத்தில் பறக்க விட்டார்.
தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கத்தின் திருவுருவப் படத்துக்கும், உமா மகேஸ்வரனின் திருவுருவப் படத்துக்கும்புளொட்டின்வன்னி மாவட்ட அமைப்பாளர் கந்தையா சிவநேசன் (பவான்) மலர் மாலை அணிவித்தார்.
தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.
(வ-108-421)

## பாடசாலை மட்ட திறந்த பிரிவு போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 15
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தால் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட பாடசாலை மட்டம் மற்றும் திறந்த பிரிவுகளுக்கான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**பாலர் பிரிவு - கையெழுத்துப் போட்டி**
முதலாம் இடம் - பி.அபிநயா (புற்றளை மகா வித்தி.), இரண்டாம் இடம் - ச.கிஷானன் (புலோலி மெ.மி.த.க.பாடசாலை), மூன்றாம் இடம் சி.சாருணியா - (புற்றளை மகா வித்தி.)

**கனிஷ்ட பிரிவு - கவிதை எழுதுதல்**
முதலாம் இடம் - கு.துஷ்யந்தி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - சி.கம்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - இ.கிருத்திகா (புற்றளை மகா வித்தி.), சி.அஜீபா (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.)

**கட்டுரை**
முதலாம் இடம் - சு.காருண்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - விறதன் (புலோலி மெ.மி.த.க.பாடசாலை), மூன்றாம் இடம் - ஸ்ரீ.வேணுஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**கவிதை பாடல்**
முதலாம் இடம்- கெ.வினிதா, இரண்டாம் இடம் சு.ரவீனா, மூன்றாம் இடம் - நி.கீர்த்தனா (வட இந்து மகளிர் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு - கவிதை எழுதுதல்**
முதலாம் இடம் - சு.துஷாந்தி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - இ.சுஜிதா (வட இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - கோ.மயூரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**கவிதை பாடல்**
முதலாம் இடம் -வ.மாதுமை (வட இந்து மகளிர் கல்லூரி).
இரண்டாம் இடம் - இ.நிவேஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**திறந்த பிரிவுப் போட்டிகள் - பாடலாக்கம்**
முதலாம் இடம் - பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை), இரண்டாம் இடம் - இ.திருத்துவராஜா ('றோஸ்பவனம்',அல்வாய் வடமேற்கு), மூன்றாம் இடம் -இ.சச்சிதானந்தம் (எல்லை ஒழுங்கை, தும்பளை)

**நாட்டார் கலை கற்றல் போட்டி**
முதலாம் இடம் - இ.சச்சிதானந்தம் (எல்லை ஒழுங்கை, தும்பளை),இரண்டாம் இடம் -மு.தணிகாசலம் (கற்கோவளம், பருத்தித்துறை), மூன்றாம் இடம் - இ.திருத்துவராஜா ('றோஸ்பவனம்', அல்வாய் வடமேற்கு)

**விவரணப் போட்டி**
முதலாம் இடம் - இ.திருத்துவராஜா ('றோஸ்பவனம்' அல்வாய் வடமேற்கு). இரண்டாம் இடம் -பா.மதனரூபி (மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு), மூன்றாம் இடம் - ஆ.முல்லைத் திவ்யன் (கொற்றன்தறை, பொலிகண்டி)

**சிறுகதை**
முதலாம் இடம் - இ.சச்சிதானந்தம் (எல்லை ஒழுங்கை தும்பளை), இரண்டாம் இடம் - சி.மார்க்கண்டு (தும்பளை தெற்கு, பருத்தித்துறை), பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**கவிதை**
முதலாம் இடம் - இ.சச்சிதானந்தம் (எல்லை ஒழுங்கை தும்பளை), இரண்டாம் இடம் - க.முருகதாஸ் (ஆலடி பொலிகண்டி), மூன்றாம் இடம் -பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**சிறுவர் கதை**
முதலாம் இடம்- .வேதநாயகம் (தும்பளை தெற்கு பருத்தித்துறை). இரண்டாம் இடம் - பா.மதனரூபி (மகாத்மா வீதி அல்வாய், வடக்கு), இ.திருத்துவராஜா ('றோஸ்பவனம்', அல்வாய் வடமேற்கு). (வ)

## வறட்சியால் பாதிப்பு

முல்லைத்தீவுஜூலை15
முல்லை மாவட்டம் விசுவமடுப் பகுதியில் தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாக ஏராளமான வாழை மற்றும் கமுகுச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
மழையில்லாததால் வாழை மற்றும் கமுகுப் பயிர்கள் பாதிப்புக்களைஎதிர்கொண்டுள்ளன. இன்னமும் சில தினங்களில் மழை பெய்யாது விட்டால் இந்தப் பயிர்கள் முழுமையாக அழிந்து விடுமெனவும் கூறப்படுகின்றது.
இதேவேளை முத்து ஐயன்கட்டு, கற்சிலைமடு, பண்டாரவன்னி ஆகிய கிராமங்களிலும் வாழைச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
(க-500)

பதின்நான்காம் ஆண்டு நினைவு நாள்
செல்வன்
பாலசுப்பிரமணியம் கோபிநாத்
(முன்னாள் விஞ்ஞானப் பிரிவு மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)
திதி : சதுர்த்தி 15.07.2014



இலங்கையில் மலர்வு
05.12.1980

இந்தியாவில் உதிர்வு
20.06.2000

அன்பு மகனே அழகுக் குஞ்சே
வட்டம் போல் தங்கள் முகம்
வடிவாகத் தெரியுதையா
கல்விக் கனவே கனவாகிப் போனதும்
குஞ்சா நெஞ்சிற்குள்ளே
நினைவிழந்து போனோமே.
நெஞ்சிருக்கும் வரை உன் நினைவுகள் தொடரும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஐ.பாலசுப்பிரமணியம்
வேலணை - 4.
குடும்பத்தினர்
(49906)(7.6.3)

மரண அறிவித்தல்
செல்லையா அமிர்தலிங்கம்



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அமிர்தலிங்கம் 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இலட்சுமி தம்பதியரின் மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், சச்சிதானந்தம், சறோஜினிதேவி, விஜய பாலன், கௌரி, விஜயராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சந்திரவதனா, தருமரெத்தினம், ஞானாம்பிகை, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் சிவலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, புவனேஸ்வரி மற்றும் மனோன்மணி, தனலட்சுமி, மனோகரன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், சீவரத்தினம், பத்மாவதி, சுபத்திராதேவி மற்றும் சரஸ்வதி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சாந்தன், ரூபன், திலீபன், ரேகா, தர்ஜினி, சுதர்சன், தமயந்தி, தவரூபன், ஞானபாலன், சசீலன், துஷ்யந்தி, பிருந்தா, கீர்த்தனன், நர்மதன், சபிதரா, கேதாஸ்ரீ, கௌசி, ரசிகா, மதுசிகா, கஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
2ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (49970) (7.6.3) 077 318 5936, 077 989 8098



சுதுமலை

# ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தான இரண்டாம் வருட கைலாய வாகனத்திருவிழா சிறப்புமலர் 15.07.2014



### கைலாயத்தைப் பிரதிபலிக்கும் கைலாய வாகனம்

சிவபெருமானுடைய வாசஸ் தலம் கைலாயம். அது ஒரு பர்வதம் அது சில சமயத்தில் பொன்வர்ணமாகவும். சில சமயங்களில் வெள்ளிமயமாகவும் ஒளி வீசும். அங்கே இருளிகளின் தவக்கோலக்காட்சி எல்லா மிருகங்களின் வாசஸ்தலமாகவும் இருக்கும். தெளிந்த நீரோடையை அங்கே காணலாம். கைலாயத்தை ஆகமம் சிறப்பாக வர்ணிக்கிறது.

*கைலாய சிகரே ரம்யே*
*சங்கரஸ்ய சிவாலயே*
*தேவதாஸ்தத்ர மோதந்தே*
*தன்மே மன சிவ சங்கல்பமஸ்துவ*

கைலாய மலை அழகானது. அது இறைவனின் உறைவிடம். அங்கே தேவர்களெல்லாம் சந்தோஷமாக வசிக்கிறார்கள். அதே சிவபெருமானின் பெருவிருப்பு. இப்படி உயர்ந்த பண்புகளை சித்திரிக்கும் கைலாய வாகனத்தில் அது மலை ஈஞ்சடி சேஷ்ரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஞானவைரவப் பெருமான் இராண்டாவது வருஷமாக திருவுலா வர இருக்கின்றார். இத்திருவிழா பக்தர்களுக்கு பிரசாதமாக அமைய வைரவப் பெருமான் திருவருள் புரிவராக.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்.**
**காயத்திரிபீடம் தர்ம சாஸ்தா குருகுலம்**
**இணுவில்.**

### இணையில்லா ஈஞ்சடியான் திருவருள் காண வாரீர்

மிகப் பழமை வாய்ந்த வைரவர் கேயில்களில் சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயில் காலத்தால் முந்தியது. பலவூர் மக்களும் பொங்கிப் படைத்து தம் காவல் தெய்வமாக வழிபடும் மரபு இவ்வாலயத்தில் இருந்து வந்தது. இக்கோயிலை காலத்துக்குக் காலம் புனருத்தாரணம் செய்து அடியார்களாகிய நாம் காத்து வருகின்றோம் ஈஞ்சடி வைரவப் பெருமானுக்கு பக்தர்கள் தாமாகவே முன் வந்து பல திருப்பணிகளை நிறைவேற்றி வருகின்றார்கள். அவ் வகையில் எட்டாம் திருவிழா உபயகாரர்கள் கைலாய வாகனத்தை பல லட்சம் ரூபா செலவு செய்து உருவாக்கியுள்ளார்கள்.

அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. கைலாய வாகனத்தில் ஈஞ்சடியான் வரும் காட்சியை காண்பதற்கு பலவூர் மக்களும் திரண்டு வருவார்கள். வைரவப் பெருமானின் திருவருளால் யாவும் நல்ல வண்ணம் அமைய வைரவப் பெருமானை மன்றாடி அழைக் கின்றோம்.

**தர்மகர்த்தா சபையினர்.**

### ஆசியுரை



ஈஞ்சடி ஞானவைரவர் திருவிழாவில் 8 ஆம் திருவிழா கைலாய வாகனம் ஆகும். கைலாய வாகனமானது 2013 ஆம் ஆண்டு 8 ஆம் திருவிழா உபயகாரரால் உருவாக்கப்பட்டு ஓடியது எல்லோரும் அறிந்ததே. இரண்டாவது ஆண்டான இவ் ஆண்டில் இன்று மீண்டும் கைலாயவாகனத் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்நாளில் திருவிழா உபயகாரரும், கோயில் அடியார்களும், தொண்டர்களும் ஞானவைரவப் பெருமானின் அருளைப் பெற்று வளம் பெற வாழ்த்தி ஆசி கூறி பிரார்த்திக்கின்றேன்.

**இணுவில் கந்தசாமி கோயில்**
**பிரதமகுரு**
**ஸ்ரீலஸ்ரீ உருத்திரமூர்த்தி குருக்கள்.**



### சிற்ப ஆச்சாரியாரின் உள்ளத்திலிருந்து

முக்கனியில் சிறந்த கனியாம் மாங்கனி. அந்த மாங்கனி வடிவுடைய இலங்கைத் தீவில் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாண நகரின் மத்தியில் அமையப் பெற்ற சுதுமலைப்பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்திற்கு ஒரு அழகிய நடமாடும் உலகப்பெரும் கைலாயவாகனம் ஒன்றினை உருவமைப்பதற்கு எம்பெருமான் திருவருள் கடாட்சம் கிடைத்ததை எண்ணி மிகவும் பெருமிதம் அடைகிறேன். அத்துடன் இந்த கலைப் படைப்புக்களை அமைப்பதற்குரிய கலை, ஞனாக என்னை உருவாக்கிய எனது மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் இராசரத்தினம் ஆச்சாரியர் (விநாயகர் சிற்பாலயம்) அவர்களை முதற்கண் வணங்கிக் கொண்டு எனது இரண்டாவது ஆசானாக உள்ள மேகலா சிற்பாலய உரிமையாளர் முருகேசு மேகநாதன் அவர்களையும் இவ்வேளையில் சிரம் தாழ்த்திக் கொண்டு எனது கோகிலா சிற்பாலயக் கலைஞர்கள் மற்றும் வர்ணக் கலைஞர் காமாட்சி அம்பாள் கலைக்கூடம் செல்லையா செல்வதாஸ் மற்றும் கைலாய வாகன உபயகாரர் அனைவருக்கும் எம் பெருமானின் ஆசிகள் கிடைக்க வேண்டுகிறேன்.

**ஸ்தபதி**
**சிற்ப நுண்கலைச் செம்மல்**
**விஸ்வப்பிரம்மஸ்ரீ**
**கதிர்காமநாதன் கதிர்றஞ்சன்**
**கோகிலா சிற்பாலயம்**
**அம்மன் வீதி, பண்டத்தரிப்பு**



### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

அருள் நிறைந்த சுதுமலை ஈஞ்சடி திருக்கோயிலின் பெருமை அறியாதவர்களில்லை. புதுமை நிறைந்த வைரவப் பெருமானின் கைலாய வாகனத்திருவிழா சிறக்க வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறேன். கைலைக் காட்சியை மண்ணுலகில் காண வைப்பது கைலாய வாகனத்திருவிழா. புராணங்கள் கூறிய தெய்வீகங்களை மக்கள் உணர்வதற்கு இத்தகைய திருவிழாக்கள் பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை. கோயில் திருவிழாக் காலத்தில் அனைவரும் குடும்பம் குடும்பமாகச் சென்று ஆன்மீகத்துடன் கூடிய மகிழ்வைச் சந்திக்கவேண்டும். திருவிழாக்கள் மனங்களை ஆற்றுப்படுத்தும் உன்னத நாள்கள். ஈஞ்சடியான் திருவிழாக்காலம் சுதுமலை வாழ் மக்களை மட்டுமல்ல அயலூர் மக்களையும் பக்தியோடு சிந்திக்கவைக்கும் திருநாள்கள் என்றால் மிகையாகாது. ஈஞ்சடியான் திருவிழாச் சிறக்க வாழ்த்தி அடியார்களுக்கு நல்லாசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன் - தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

**ஈஞ்சடிவைரவர் கோயிலடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**கைலாய வாகனத்திருவிழா உபயகாரர்கள்.**

**வேலுப்பிள்ளை குடும்பத்தினர்.**



இஸ்ரேல் விடுத்த தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து, காஸாவின் வட பிராந்தியத்தில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஹமாஸ் இயக்கம் நடத்தும் ரொக்கெட் தாக்குதல்களை நிறுத்தும் வகையில், காஸாவின் பல பகுதிகளில் இஸ்ரேல் விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இஸ்ரேலின் விமானத் தாக்குதல்கள் ஆறாவது நாளாக தொடர்ந்துள்ள நிலையில் 17 ஆயிரம் பேர் வரை இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (த)

# காஸாவில் தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள்

## ஐ.நா. செயலர் இஸ்ரேலிடம் கோரிக்கை

நியூயோர்க், ஜூலை 15

காஸா பகுதியில் நிலவும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருமாறு இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளிடமும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'இரு தரப்பின் நலனையும் கருத்தில் கொண்டு, தற்போது நிலவும் அபாயகரமான சூழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடித் தீர்வு காணப்பட வேண்டும். தாக்குதல்களால், இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளிலும் அப்பாவி பொது மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிராந்திய அமைதிக்கும், பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் இத்தகைய தாக்குதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என பான் கி மூன் வலியுறுத்தியுள்ளார்' என சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேல் தாக்குதலில் பொதுமக்களே பெருமளவில் உயிரிழந்துள்ளதற்கு பான் கீ - மூன் வருத்தம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள வான்வழித் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 170 ஆக அதிகரித்துள்ளது.

எட்டாவது நாளை எட்டியுள்ள வான்வழித் தாக்குதல் ஏற்படுத்தியுள்ள சேதம் குறித்து காஸா சுகாதாரத்துறை செய்தித் தொடர்பாளர் கூறும்போது, தெற்கு காஸா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் தந்தை, மகன் உட்பட 4 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். ரபான், கான் யூனிஸ் நகரங்களை குறிவைத்து இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 10 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.



கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேலியப் படைகள் காஸா மீது வான்வழி தாக்குதல் நடத்தத் தொடங்கியதில் இருந்து இதுவரை 170 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 80 பேர் அப்பாவி பொதுமக்கள். இவர்களில் 36 பேர் குழந்தைகள், 32 பேர் பெண்கள் ஆவர். 1,154 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 350 பேர் குழந்தைகள், 460 பேர் பெண்கள் என்றார்.

இதற்கிடையில், இஸ்ரேலின் வடக்கு, தெற்கு மற்றும் மத்திய நகரங்களில் நடத்தப்பட்ட ராக்கெட் தாக்குதலுக்கு ஹமாஸ் ஆதரவு பெற்ற அல் கசாம் படையினர் பொறுப்பேற்றுள்ளனர். காஸா பகுதியில் இருந்து 700 ரொக்கெட்டுகளை இஸ்ரேல் மீது ஏவி தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேபோல், கடந்த 7 நாள்களில் இஸ்ரேல் 1000 முறை வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிகிறது. ஞாயிறன்று கூடிய இஸ்ரேல் அமைச்சரவை கூட்டத்தில் காஸா பகுதியில் தாக்குதலை தொடர முடிவு எட்டப்பட்டுள்ளது. (த)

### இஸ்ரேல் தூதரகம் முன்னால் அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

வாஷிங்ரன், ஜூலை 15

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலைக் கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன்பு பலஸ்தீன ஆதரவாளர் ஏராளமானோர் திரண்டு இஸ்ரேலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இஸ்ரேலுக்கு உதவிகளை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கையில் ஏந்தியிருந்தனர்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள இஸ்ரேல் தூதரகம் எதிரில் ஆயிரக்கணக்கான பலஸ்தீன ஆதரவாளர்கள் திரண்டு இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பிரான்ஸ் தலைநகர் பாரீஸிலும் பலஸ்தீன ஆதரவாளர்கள் கூடி இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். (த)

### அமெரிக்காவில் மர்ம நபர் சுட்டதில் மூன்று பேர் சாவு

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 15

அமெரிக்காவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் ஒரு பெண் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பாஸடீனா நகரில் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி உள்ளது. இங்கு வீட்டு உரிமையாளர் ஒருவருக்கும், குடியிருந்தவர்களுக்கும் பிரச்சினை இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் அந்தக் குடியிருப்பைச் சேர்ந்த ஒரு நபர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். இதில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

அவர்களுக்கு உதவுவதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் விரைந்து வந்தபோது, துப்பாக்கியால் சுட்ட நபர் ஓடிச் சென்று அருகில் உள்ள ஒரு வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டார். அங்கிருந்தபடி மீண்டும் சுட்டார். எனினும், அந்த நபர் அவசரத் தொலைபேசி எண்ணான 911இல் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதன்பின் மத்தியஸ்தம் செய்யும் அதிகாரியை பொலிஸார் வரவழைத்து அந்த நபருடன் பேச வைத்தனர். அப்போது அந்த நபர் சரணடைய ஒப்புக் கொண்டார். இத்தகவலை பாஸடீனா பொலிஸ் தலைவர் பிலிப் சான்செஸ் தெரிவித்தார். (த)

### தீவிரவாதிகளின் அச்சுறுத்தலால் தரையிறக்கப்பட்ட விமானம்

இஸ்ரேலிருந்து நியூயோர்க் நோக்கி புறப்பட்ட அமெரிக்க பயணிகள் விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் டெல் அலிவ் நகரிலிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானத்தில் 370 பயணிகள் மற்றும் 17 விமானச் சிப்பந்திகள் இருந்தனர்.

புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானம் மீண்டும் டெல் அவிவ் நகருக்கு திரும்பியது. பின்னர் அது அங்கு அவசரமாக தரை இறக்கப்பட்டது. இயந்திரக் கோளாறு காரணமாக மீண்டும் விமானம் தரை இறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் பலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசிக் கொண்டிருந்தனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது. எனவே, பாதுகாப்புக் காரணம் கருதி விமானம் தரை இறக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (த)

# அல்கெய்தாவுக்கு உதவியதாக அமெரிக்க இந்தியர் வாக்குமூலம்

## 15 ஆண்டுகள் சிறை கிடைக்க வாய்ப்பு

நியூயோர்க், ஜூலை 15

அல் கெய்தாவுக்கு நிதி உதவியும், ஆள்களைத் திரட்டிக் கொடுக்கும் பணியையும் மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அமெரிக்க வாழ் இந்தியர் குப்ரான் அகமது கவுசர் முகமது நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து அவருக்கு அதிகபட்சமாக 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது. அமெரிக்க வாழ் இந்தியர் குப்ரான் அகமது கவுசர் முகமது (31), அமெரிக்க குடியுரிமையை பெற்றுள்ள அவர், சவூதி அரேபியாவின் தம்மாம் நகரில் வசித்து வந்தார். அப்போது அல் கெய்தாவுக்கும், அதைச் சார்ந்த அமைப்புகளான சோமாலியாவில் செயல்படும் ஷெபாப் தீவிரவாதிகளுக்கும், சிரியாவில் செயல்படும் அல் நஸ்ரா என்ற தீவிரவாத அமைப்பினருக்கும் அவர் உதவி வந்ததாக அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது.

அல் கெய்தா தீவிரவாத அமைப்புக்குப் பணம் கொடுக்குமாறு 96 ஆயிரம் அமெரிக்க டொலரை கென்யா நாட்டைச் சேர்ந்த முகமது ஹூசைன் சேத் (வயது-25) என்பவருக்கு குப்ரான் அகமது கவுசர் அனுப்பியுள்ளார். இருவரும் தீவிரவாத அமைப்புகளுக்குப் பணப் பரிமாற்றம் செய்ய உதவியதுடன், புதிய ஆள்களை சேர்த்து விடும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் மீதும் கடந்த ஓகஸ்ட் மாதம் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அப்போது, நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது தனது குற்றச்சாட்டை குப்ரான் அகமது கவுசர் மறுத்தார். இந்த நிலையில், இந்த வழக்கின் விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை மியாமி நீதிமன்றத்தில் நீதிபதி அர்சுலா அங்காரோ தலைமையில் நடைபெற்றது. அப்போது நீதிமன்றத்தில் குப்ரான் அகமது கவுசர், அல் கெய்தாவுடன் தொடர்புடைய சிரியாவில் செயல்படும் அல் நஸ்ராவுக்கும், சோமாலியாவில் செயல்படும் ஷெபாப் அமைப்புக்கும் பணம் மற்றும் பொருள்களை வழங்கி வந்ததாகவும், அந்த அமைப்புகளில் புதிதாக ஆள்களை சேர்த்துவிட்டதாகவும் ஒப்புக்கொண்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு ஒக்ரோபர் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார். (த)

# மன்மோகன் சிங் மீது சி.பி.ஐ.விசாரணை ?

## சூடு பிடிக்கும் ஊழல் விவகாரம்

புதுடில்லி, ஜூலை 15
காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட நிலக்கரி ஊழல் விவகாரத்தில், சி.பி.ஐ. மன்மோகன் சிங்கை விசாரிக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2004ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், நிலக்கரி அமைச்சகப் பணிகளை கவனித்தபோது, நிலக்கரி சுரங்கங்கள் தனியாருக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

அப்போது, நிலக்கரி சுரங்கங்களைத் தனியார்களுக்கு ஒதுக்கீடு செய்ததில் முறைகேடுகள் நடந்து இருப்பதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இந்த முறைப்பாட்டையடுத்து, இது பற்றி ஆய்வு செய்த மத்திய கணக்குத் தணிக்கைத் துறையினர் நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த ஊழலால் மத்திய அரசுக்கு ரூபா1.86 லட்சம் கோடிக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக கடந்த 2012ஆம் ஆண்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதையடுத்து, இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் நேரடி மேற்பார்வையில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு ஊழல் விசாரணையை விரைந்து முடிக்க சி.பி.ஐ. கடும் முயற்சிகள் எடுத்தபோது, முன்னாள் பிரதமராக இருந்த மன்மோகன் சிங் நிலக்கரி அமைச்சகத்துக்குப் பொறுப்பு வகித்ததால் அவரிடம் விசாரணையை நடத்த முடியவில்லை.



மன்மோகன் சிங்

இந்நிலையில் தற்போது மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் மீண் டும் சூடுபிடித்துள்ளது.

மேலும், இதுவரை நடத்தப்பட்டுள்ள விசாரணை அனைத்திலும் நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததில் மன்மோகன்சிங்கே இறுதி முடிவு எடுத்ததாக தெரியவந்துள்ளது.

எனவே இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை விசாரிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று சி.பி.ஐ. அதிகாரிகள் கருதுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# தமிழ்நாட்டு பா.ஜ.கவுக்கு இவ்வாரம் புதிய தலைவர்

## தீவிர ஆலோசனையில் டில்லி தலைமை

புதுடில்லி, ஜூலை 15
தமிழக பா.ஜ.கவுக்கு இன்னும் ஒரு வாரத்துக்குள் புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் இதற்காக பா.ஜ.க. தேசிய தலைமை தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பா.ஜ.க. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தற்போது மத்திய கனரக மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கான இணை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

பா.ஜ.கவின் விதிமுறைகளின்படி ஒரே நபர் 2 பதவிகளில் இருக்கக் கூடாது என்பதால் தமிழக பா.ஜ.கவுக்கு விரைவில் புதிய தலைவர் அறிவிக்கப்படுவார் என்று கடந்த இரு மாதங்களாகவே தகவல் கசிந்த வண்ணம் இருந்தது.

இதனைத் தொடர்ந்து தலைவர் பதவியைப் பெறுவதற்காக தமிழக பா.ஜ.க மூத்த நிர்வாகிகளிடம் ஓசையில்லாமல் போட்டாபோட்டியும் உருவானது.

பா.ஜ.க. தேசிய தலைவராக இருந்த ராஜ்நாத் சிங் உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளதால், தேசிய அளவிலும் பா.ஜ.கவுக்கு புதிய தலைவர் அறிவிக்கப்பட்ட பின்னரே தமிழகத்துக்கு புதிய மாநிலத் தலைவர் நியமிக்கப்படுவார் என்றும் சொல்லப்பட்டது. இந்நிலையில் பா.ஜ.கவின் தேசிய தலைவராக அமித் ஷா கடந்த வாரம் தேர்வு செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து தமிழக பா.ஜ.கவுக்கான தலைவர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் பா.ஜ.கவின் புதிய தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள அமித் ஷா தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களுக்குப் புதிய தலைவரை நியமிப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. (த)

# ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் 18 இந்தியர்கள்

புதுடில்லி, ஜூலை 15
ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற தீவிரவாத அமைப்பில் 18 இந்தியர்கள் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மராட்டிய மாநிலம் புனேயில் கடந்த 10ஆம் திகதி பரஸ்கானா பொலிஸ் நிலையத்தையொட்டி உள்ள சாலையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருந்த இடத்தில், ஒரு மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்ட குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இதில் பொலிஸ் அதிகாரி குலாப் கேடேகர் உட்பட 3 பேர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மராட்டிய தீவிரவாதத் தடுப்புப் படையினர் உள்ளூர் பொலிஸாருடன் இணைந்து விசாரணையைத் தொடங்கி விசாரித்து வருகின்றனர், இதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னையைச் சேர்ந்த இளைஞர் உட்பட 18 இந்தியர்கள் ஈராக்கில் அரசுக்கு எதிராக போராடிவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதஅமைப்பில்இணைந்துள்ளனர் என்று மத்திய உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் இவர்கள் மராட்டியம், கர்நாடகம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த வாலிபர்கள் என்று தெரியவந்துள்ளது.

அவர்கள் இந்தியா திரும்பியுள்ளனரா என்பது குறித்தான தகவல்கள் வெளியாகவில்லை. (த)



பிரேஸிலுக்குச் செல்லும் வழியில் ஜேர்மனிக்கும் சென்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. ஜேர்மன் தலைநகர் பேர்ளினின் இராணுவ விமான நிலையத்தில் மோடிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. (த)

# நல்ல வாய்ப்பை நழுவவிட்டாயே

## ஸ்டாலினை கண்டித்த கருணாநிதி

சென்னை, ஜூலை 15
தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பேரணியில் மு.க. ஸ்டாலின் உணர்ச்சிகரமாக பேசவில்லை என்று கருணாநிதி கண்டித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

சென்னை மவுலிவாக்கத்தில் 11 மாடி கட்டடம் இடிந்து விழுந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணை வேண்டும்என தி.மு.க. சார்பில் ஆளுநர் அலுவலகம் நோக்கி மாபெரும் பேரணி நடந்தது.

கடந்த, 12ஆம் திகதி சி.பி.ஐ. விசாரணையை வலியுறுத்தி தி.மு.க. நடத்திய மாபெரும் பேரணியில் ஏராளமான தொண்டர்கள் பங்கேற்றுள்ளனர். இந்தப் பேரணியைத் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்த கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் சில நிமிடங்கள் மட்டுமே உரையாற்றியுள்ளார்.

ஆனால், அந்தப் பேச்சும் தொண்டர்களை உற்சாகப்படுத்தும் அளவுக்கு இல்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் இதுபற்றி கருணாநிதி ஸ்டாலினிடம், கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழக ஆட்சியின் அவலத்தினை தொண்டர்கள் மத்தியில் விரிவாக எடுத்துரைத்திருக்கவேண்டும். அவ்வாறு செய்திருந்தால் தேர்தல் தோல்வியால் உற்சாகம் இழந்திருக்கும் தொண்டர்கள் உற்சாகம் அடைந்திருப்பார்கள் என்று வருத்தப்பட்டதோடு தனது அதிருப்தியையும் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது. (த)

# இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தது துருக்கி விமானம்

புதுடில்லி, ஜூலை 15
இந்திய வான் எல்லையில், துருக்கி நாட்டின் இரு பயணிகள் விமானங்கள் ஒரே ரகசிய எண்ணை அளித்துவிட்டு நுழைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சர்வதேச விமானங்கள் ஒரு நாட்டு எல்லையில் இருந்து அடுத்த நாட்டு எல்லைக்குள் நுழையும்போது சந்தேகம் வந்து கேட்டால் அந்த விமானத்தின் அடையாளக் குறியீட்டை கூறவேண்டும்.

நேற்று முன்தினம் பாகிஸ்தான் எல்லையில் இருந்து இந்திய எல்லைக்குள் நுழைந்த ஒரு பயணிகள் விமானம் மீது சந்தேகப்பட்டு ராஜஸ்தான் மாநிலத்தின் ஜோத்பூர் விமானப் படைத் தளத்தில் இருந்து அதன் அடையாள குறியீட்டைக் கேட்டுள்ளனர்.

**சிறிது நேரத்தில் மற்றொரு பயணிகள் விமானம் அதேபோல பாகிஸ்தான் எல்லையில் இருந்து இந்திய எல்லைக்குள் நுழைந்துள்ளது.**




சிறிது நேரத்தில் மற்றொரு பயணிகள் விமானம் அதேபோல பாகிஸ்தான் எல்லையில் இருந்து இந்திய எல்லைக்குள் நுழைந்துள்ளது.

அதன் அடையாள குறியீட்டைக் கேட்டபோது, முந்தைய விமானத்தின் குறியீட்டையே கூறியதால் சந்தேகம் வலுத்துள்ளது.

உடனடியாக இரண்டு மிக்-21 ரக போர் விமானங்கள் அந்த விமானத்தை ஆராய அனுப்பப்பட்டது. (த)

# சூடு பிடிக்கும் ஊவா மாகாண தேர்தல் களம்; முதலமைச்சர் வேட்பாளர்களாக சசிந்ர, ஹரின்

## முஸ்லிம் கட்சிகள் தனி வழிப் பயணம்; அரசுடன் இணைகிறது ம.ம.முன்னணி

கொழும்பு, ஜூன் 15

ஊவா மாகாண சபை வெள்ளி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டதையடுத்து, தேர்தலை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பணிகளில் பிரதான அரசியல் கட்சிகள் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதன்படி வேட்புமனு குழு நியமனம், பரப்புரைப் படையணி தேர்வு, வேட்பாளர்கள் நிய மனம் உள்ளிட்ட ஆரம்பக்கட்ட செயற்பாடுகளை அவை மேற்கொண்டு வருகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசின் சார்பில் முன்னாள் மாகாண முதலமைச்சர் சசிந்ர ராஜபக்ஷவும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி சார்பில் ஹரின் பெர்ணான்டோவும், ஜே.வி.பியின் சார்பில் சமந்த வித்யாரத்னவும் முதலமைச்சர் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அடுத்த நாடாளு மன்ற அமர்வின் போது தமது உறுப்பினர் பதவியை ஹரின் இராஜினாமா செய்யவுள்ளார் என தெரியவருகின்றது.

அதேவேளை, அரச தரப்பு வேட்பு மனு தயாரிப்பு குழுவில் அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா, மைத்திரிபால சிறிசேன, பஸில் ரோஹன ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்த, விஜித் விஜிதமுனி சொய்யா உள்ளிட்டோர் இடம் பெறவுள்ளனர் என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கரு ஜயசூரிய, திஸ்ஸ அத்தநாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோர் அங்கம் வகிக்கவுள்ளனர்என்றும் அறியமுடி கின்றது.

அதேசமயம் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித்த ஹேரத், சுனில் ஹந்துனெத்தி ஆகியோரை வேட்பு மனு தயாரிப்பு பணிகளுக்கென ஜே.வி.பியின் மத்திய குழு நியமித்துள்ளது.

**ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது தமது உறுப்பினர் பதவியை ஹரின் துறப்பார் எனத் தெரியவருகின்றது.**

### அரசுடன் கூட்டு

ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தமட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் அரசுடன்இணைந்தே களமிறங்கவுள்ளன. கடந்தமுறை தனித்து களமிறங்கிய மலையக மக்கள் முன்னணி இம்முறைகூட்டுப்பொறி முறையை கையாள்வதற்கு முடிவெடுத்துள்ளது. பதுளை மாவட்டத்தில் மூன்று ஆசனாங்கள் குறைக்கப் படவுள்ளமையே இதற்கு காரணமென அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம், முன்னாள்பிரதிக்கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் ஆகியோர் தமிழ் வேட்பாளர்களாக பதுளை மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அதேவேளை, ஜே.வி.பியின் சார்பில் தமிழ் வேட்பாளராக இராமலிங்கம் சந்திரசேகரன் களமிறங்கவுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஒகஸ்டில் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துக் களமிறங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை முஸ்லிம் கட்சிகளை இணைத்துக் கொண்டு கூட்டாக களமிறங்குவது சம்பந்தமாக பரிசீலித்து வருகின்றது எனவும், இந்த முயற்சி கைகூடாத பட்சத்தில் தனிவழிப் பயணத்தை மு.கா. தொடரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஊவா மாகாண சபைத் தேர்தலில் எத்தகையதொரு பொறிமுறையைக் கையாள வேண்டும் என்பது பற்றி மு.கா. மாகாண முஸ்லிம் மக்களிடம் கருத்துகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## மாற்று மக்கள் முன்னணியை அமைக்கும் பணியில் ஜே.வி.பி.



விஜித ஹேரத்

கொழும்பு, ஜூன் 15

மாற்று மக்கள் முன்னணியை அமைப்பது தொடர்பில் அரசு மற்றும் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தப் பட்டு வருவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

தற்போதுள்ள அரசியல் முறைமைக்கு மாறான மாற்று அரசியல் முறையொன்று நாட்டுக்கு அவசியம் என்று ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கூறினார்.

"மாற்று மக்கள் முன்னணி ஒன்றின் தேவை உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் முன்னணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னணியும் அழுகிய மோசமான முதலாளித்துவ கொள்கைகளையே பின்பற்றுகின்றன.

இந்த ஆட்சிமுறையினால் நாட்டு மக்களின் பிரச்சினை களை தீர்க்க முடியாது. புதிய அரசியல் முறை ஒன்றை மக்கள் எதிர் பார்த்துள்ளனர். மக்களின் இந்த எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய மாற்று மக்கள் சக்தி ஒன்று தேவைப்படுகிறது. இந்த மாற்று மக்கள் சக்தியை உருவாக்கும் பொறுப்பை ஜே.வி.பி. ஏற்கனவே ஆரம் பித்துள்ளது. இதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் உட்பட அனைத்து சமூக மக்களை இணைக்கும் கூட்டமைப்பு ஒன்றைஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றார்.(ஒ)







கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் 4 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசியாவின் மிகப் பெரிய பெரஹர கொழும்பு மஹாமாயா வித்தியாலயத்திலிருந்து ஹுனுப்பிட்டி கங்காராமை விகாரை வரை வீதி வலம் வந்தது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அலரி மாளிகை முன்றிலிலிருந்து இந்த மாபெரும் பெரஹராவைக் கண்டு களித்தார்.
அமைச்சர்களான பந்துல குணவர்த்தன .ஏ.எச்.எம்.பௌஸி மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் உட்பட பிரமுகர்கள் பலரும் ஜனாதிபதியுடன் பெரஹராவை பார்வையிட இணைந்து கொண்டனர்.
நாட்டின் பல பாகங்களில் இருந்தும் 200க்கும் மேற்பட்ட நடனக்குழுக்களும், சுமார் 15,000 மாணவர்களும் இந்த பெரஹர ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். (ஒ)

## பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினார் ரமபோஷ



கொழும்பு, ஜூன் 15

இலங்கைக்குக் கடந்தவாரம் பயணம்மேற்கொண்ட தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷ பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினார் என்று ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதிகளவு எதிர்பார்ப்புடனும் முழுமையான நம்பிக்கையுடனும் இலங்கைக்குப் பயணம்மேற்கொண்ட ரமபோஷா, அரச தரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களின் பின்னர், ஏமாற்றத்துடனும், வெறுப்புடனும் நாடு திரும்பியதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர் எனவும் அந்த செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய நீண்ட பேச்சுக்களின் போது, சிறில் ரமபோஷ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார். (ஒ)

## மக்களுக்கு முன்னுதாரணமாக அரசியல்வாதிகள் நடக்க வேண்டும்

### புத்திமதியைக் கூறுபவர் மேர்வின்தான்



மேர்வின் சில்வா

கொழும்பு, ஜூன் 15

அரசியல்வாதிகள் மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இரண்டு அரசியல்வாதிகள் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் ஒருவரை ஒருவர் கடித்துக்கொண்டனர்.

இவ்வாறு கடித்துக் கொள்வது மிருகங்களுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கும். மனிதர்களுக்கு இது பொருத்தமாகாது.

அரசியல்வாதிகள் மக்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். எனினும், இந்த அரசியல்வாதிகளின் நடவடிக்கை இழிந்த நிலையில் காணப்பட்டது.

நான் ஒரு சிறந்த சிங்கள பௌத்தன். நான் சகல இனத்துக்கும் சகல மதத்துக்கும் கௌரவமளிக்கின்றேன்.

பௌத்த மத வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றினால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்பில்லை என்றும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடுவத்த விகாரை ஒன்றில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வட மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும், பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல் தொடர்பில் அமைச்சர் மேர்வின் சில்வா இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ஒ)


## 'பாதிரிமார் திருமண தடையை தளர்த்துவதற்கு வழிதேடுவேன்'

கத்தோலிக்கத் திருச்சபையில் பாதிரியார்கள் திருமணம்செய்துகொள்ள இருந்து வரும் தடையை காலப் போக்கில் தளர்த்த முடியும் என்று தான் நம்புவதாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

பாதிரியார்கள் பிரம்மச்சாரிகளாகவே வாழ வேண்டும் என்று 11 நூற்றாண்டு கால முதல் இருந்துவருகின்ற விதி முறையை மாற்றுவதற்கான தீர்வுகள் உண்டு என்றும், அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பது தனது வேலை என்றும் பாப்பரசர் கூறினார்.

இத்தாலிய செய்தித்தாளான லாரிபப்ளிக்காவுக்கு அளித்த ஒரு பேட்டியில், பாதிரியார்களின் சிறார் பாலியல் துஷ்பிரயோக விவகாரம் கத்தோலிக் கத் திருச்சபையை பீடித்துள்ள தொழு நோய் என்று பிரான்சிஸ் கூறினார். (ஒ)

# உலகின் உயரமான ரயில்வே மேம்பாலம் இமயமலையில்




இமயமலையில் ஈபிள் டவரை விட 35 மீற்றர் உயரமுள்ள உலகின் உயரமான ரயில்வே மேம்பாலத்தை இந்தியா கட்டுகிறது. இதன் கட்டுமானப் பணி 2016 இல் நிறைவடையும் என்று தெரிகிறது. வில்வளைவாகக் கட்டப்படும் இந்த மேம்பாலம் கட்டிமுடிக்கப் படும்போது 359 மீற்றர் உயரத்தை எட்டிவிடும். தற்போது சீனாவில் உள்ள பைபெஞ்சியாங் ஆற்றில் உள்ள ரயில்வே மேம்பாலம் 275 மீற்றர் உயரம் கொண்டதாக உள்ளது. இந்தியாவில் இந்த மேம்பாலம் கட்டி முடிக்கப்படும் போது சீனா தானாகவே இரண்டாவது இடத்துக்குச் சென்றுவிடும். இந்த மேம்பாலம் பொறியியல் அற்புதமாகவும் காட்சியளிக்கும் என்று இந்திய ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

2002 இல் தொடங்கப்பட்ட இதன் கட்டுமானப் பணி மோசமான வானிலை காரணமாக 2008 இல் நிறுத்தப்பட்டது. ஆனால் இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் கட்டுமானப் பணி ஆரம்பிக்க பச்சைக் கொடி காட்டப்பட்டது. கொங்கன் ரயில்வேயால் கட்டப்படும் இந்த மேம்பாலத்தை கட்டி முடிக்க 92 மில்லியன் டொலர் செலவாகும் என்று கூறப்படுகிறது. இப்பணி முடி வடையும்போது, பாரமுல்லாவிலிருந்து ஜம்மு செல்லும் தற்போதைய நேரத்தை விட அரைவாசி நேரமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முப்பரிமாண அச்சாக்கத்தில் கிற்றார் உருவாக்கம்



இந்தக் கிற்றார் பண்டைய இசைக் கருவிகளைப் போன்ற இசையை வழங்கும் வகையில் வடி வமைக்கப்பட்டுள் ளது. தெரிவு செய் யப்பட்ட லேசர் வெப்பப்படுத்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இது தயாரிக்கப்பட்டுள்ளது.



முப்பரிமாண அச்சாக்கத்தின் மூலம் சுவீடனைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் கிற்றார் ஒன்றைத் தயாரித் துள்ளார். இந்தக் கிற்றார் பண்டைய இசைக்கருவி களைப் போன்ற இசையை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட லேசர் வெப்பப்படுத்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இது தயாரிக்கப்பட்டுள்ளது. இது கலை ஞர்களுக்குக் கிடைக்கக் கூடிய விலைகுறைந்த கிட்டாராக அமையும் என்கின்றார் இதனைத் தயாரித்த சுவீடன் பேராசிரியர் ஓலாஃப் டைஜெல். சாதாரண கிற்றார்களில் காணப்படுவதைப் போன்று ஆறு கம்பிகளைக் கொண்டிராதபோதும் தனது கிற்றாருக்கான கம்பிகளை தானாகவே அவர் உரு வாக்கியுள்ளார்.

இந்தக் கிற்றாரின் உடற்பகுதியும் அதன் உட்பகுதியும் ஒரே பகுதியாக முப்பரிமாண அச்சாக்கத்தின் மூலம் அச்சிடப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டும் ஓலாஃப் டைஜெல், இதில் காணப்படும் உந்துதண்டுகள் மற்றும் பிஸ்டன்கள் எந்தவிதான பிரத்தியேக தொழிற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. அவை சிறந்த சத்தத்தை வழங்குகின்றன என்கின்றார்.

மிகவும் குறைந்த செலவில் உருவாக்கக் கூடிய இந்த கிற்றாரைத் தயாரிப்பதற்கு முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

# கண்பார்வை இழந்தவர்களும் புத்தகங்களை வாசிக்க முடியும்



மோதிரம் போன்று விரல்களில் அணியக்கூடிய இந்தச் சிறிய கருவியின் உதவியுடன் கண்பார்வை யற்றவர்கள் புத்தகங்களை வாசிக்க முடியும். விரலில் அணியக்கூடிய இந்தக் கருவியை அணிந்து புத்தகத் தில் உள்ள சொற்களின் மேல் விரல்களைக் கொண்டு சென்றால் சொற்களை ஒலிவடிவில் அது வெளியிடும்.

கண்பார்வை இழந்தவர்களுக்கு புத்தகங்களை வாசிக்கக்கூடிய புதியதொரு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. மோதிரம் போன்று விரல்களில் அணியக்கூடிய இந்த சிறிய கருவியின் உதவியுடன் கண்பார்வையற்றவர்கள் புத்தகங்களை வாசிக்க முடியும். விரலில் அணியக்கூடிய இந்தக் கருவியை அணிந்து புத்தகத்தில் உள்ள சொற்களின் மேல் விரல்களைக் கொண்டு சென்றால் சொற்களை ஒலிவடிவில் அது வெளியிடும். குறித்த கருவியில் பொருத்தப்பட்டிருக்கும் சிறிய கமரா மூலம் சொற்கள் படம் பிடிக்கப்பட்டு அவை ஒலி வடிவத்துக்கு மாற்றப்படுகிறது.

'பிங்கர் ரடர்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தக் கருவி 3டி பிரிண்டர் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்டிருக்கும் மென்பொருள், குறித்த கருவியால் படம்பிடிக்கப்படும் சொற்களை உடனடியாக ஒலி வடிவத்துக்கு மாற்றுகிறது. சரியான முறையில் விரல்களை சொற்களின் மீது கொண்டு செல்வதற்கும் இதில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சொற்களைவிட்டு வெளியே விரல்கள் செல்லும் பட்சத்தில் அந்தக்கருவி வைபிரேட் ஆகி சரியான இடத்துக்கு விரலைக் கொண்டு செல்வதற்கு வழிவகுக்கும்.

இந்தக்கருவி மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்கிறார் பிறவியி லேயே பார்வையை இழந்த 62 வயதுடைய ஜெரி. இந்தக் கருவியை சந்தைப்படுத்துவதன் மூலம் பார்வை இழந்தவர்களும் எந்தவித சிரமமும் இன்றி புத்தகங்களை வாசித்தறிய முடியும்-என்கிறார் அவர்.

# டெங்கைக் கட்டுப்படுத்த வந்துவிட்டது தடுப்பூசி

உலகில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்தொன்று பிரான்ஸ் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் பெரிய மருந்துத் தயாரிப்பு நிறுவனமான சனோபி பஸ்டர் என்ற நிறுவனம் இந்தத் தடுப்பு மருந் தைக் கண்டுபிடித்துள்ளது.

குறிப்பாக ஆசிய வலய நாடுகளில் நுளம்பு களால் பெருமளவில் பரவும் நோயாக டெங்கு நோய் காணப்படுகின்றது. கண்டுபிடிக் கப்பட்ட தடுப்பு மருந்து ஆசிய பிராந்தியத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்குச் செலுத்தி பரிசோதிக் கப்பட்டுள்ளது. இந்தச் சோதனை வெற்றி யளித்திருப்பதாக மருந்துத் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்தொன்றை குறித்த நிறுவனம் ஏற்கனவே தயாரித்திருந்த நிலையில் தற்போது டெங்குக்கான தடுப்பூசி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. டெங்கு நோயானது உலகில் பெரியதொரு அச்சுறுத் தலாக உருவெடுத்திருப்பதுடன் டெங்கு நோயாளர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இதுவரை டெங்கு நோய்க்கு தடுப்பு மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்க வில்லை என்று மருந்துத் தயாரிப்பு நிறுவ னத்தைச் சேர்ந்த ஜக்சன் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் உலகளாவிய ரீதியில் 100 மில்லியன் பேர் டெங்கு நோயால் பாதிக்



கப்படுவதுடன் 20 ஆயிரத்துக்கும் அதிக மான மக்கள் உயிரிழப்பதாக உலக சுகா தார நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது. இந்த நிலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக் கும் டெங்கு நோய் தடுப்பூசி 90 வீதம் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்தி நோயாளர்களைக் குணமாக்குவதாக குறித்த தடுப்பு மருந்தைத் தயாரித்த நிறு வனம் சுட்டிக்காட்டுகிறது. மோசமான நிலை யில் காணப்படும் டெங்கு நோயை இந்தத் தடுப்பு மருந்து 88 வீதத்துக்கும் அதிகமான பங்கு குணப்படுத்துகிறது. இதன்மூலம் டெங்கு நோயால் பாதிக்கப்படும் சிறுவர் களைப் பெருமளவு காப்பாற்ற முடியும் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

தயாரிக்கப்பட்ட டெங்கு தடுப்பூசியை இது வரை 27000 சிறுவர்களும் பெரியவர்க ளும் பயன்படுத்தி நோயைக் குணப்படுத் தியிருப்பதாக அந்த நிறுவனத்தின் பிரதம மருத்துவ அதிகாரி மெலானி கூறுகின்றார்.

# அல்சைமர்ஸ் நோய் தாக்குமா? கண்டறிய இரத்தப் பரிசோதனை

அல்சைமர்ஸ் எனப்படும் மூளை அழுகல் நோய் ஒருவருக்கு வரவிருப்பதை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறியக்கூடிய வழிமுறை ஒன்றைத் தாங்கள் நெருங்கிவிட்டதாக பிரிட்டனில் இருக்கும் விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள்.

இரத்தப் பரிசோதனை மூலம் அல்சைமர்ஸ் நோயைக் கண்டறிய முடியும். ஒருவரின் இரத்தத்தில் இருக்கும் குறிப்பிட்ட பத்து புரதங்களை கொண்டு அவருக்கு அடுத்ததாக அல்சைமர்ஸ் நோய் தோன்றக்கூடும்-என்று கணிக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அல்சைமர்ஸ் என்பது அடிப்படையில் நினைவிழப்பு நோயின் அதி தீவிர வடிவம். தற்போதைய நிலையில் இந்த அல்சைமர்ஸ் ஒருவருக்கு வந்திருக்கிறது என்பதைக் கண்டறிவது என்பது அந்த நோய் ஏற்கெனவே ஒருவருக்குத் தாக்கத்தொடங்கிய பின்னரே சாத்தியமாகிறது. அதற்குள் அவருக்கு அல்சைமர்ஸ் நோயின் தாக்கம் என்பது ஏறக்குறைய முற்றிய நிலையில் இருக்கும். எனவே அதைக் கட்டுப்படுத்துவதோ குணப்படுத்து வதோ இயலாத காரியம். எனவே இந்த அல்சைமர்ஸ் ஒருவரைத் தாக்குமா என்பதை அதன் ஆரம்பகட்டத்திலேயே கண்டறிய முடிந்தால் அதன் அடுத்தகட்டமாக அல்சைமர்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டறிவது சாத்தியப்படும் என்பது மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்தாக இருந்து வந்திருக்கிறது.


அல்சைமர்ஸ் நோய் ஒருவரைத் தாக்கத் தொடங்கியதன் ஆரம்ப அறிகுறி என்பது நினைவு இழத்தல். ஆனால் எல்லா நினைவு இழப்புக்களும் அல்சைமர்ஸில் போய் முடிவதில்லை. எனவே, நினைவிழப்புக்கு உள்ளாகும் ஒருவருக்கு அது அல்சைமர்ஸ் நோயாக முற்றுமா என்பதைக் கண்டறிவதற்கு அவரது இரத் தத்தில் இருக்கும் குறிப்பிட்ட பத்துப் புரதச் சத்துக்களைத் தொடர்ந்து கண்காணித்தால் அதைக் கண்டறிய முடியும் என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள். சுமார் ஆயிரம் பேரிடம் செய்யப்பட்ட இந்தப் பரிசோதனைகளில், 87 சதவீதமானவர்களுக்கு அல்சைமர்ஸ் வருமா, வராதா? என்று துல்லியமாகக் கணிக்கமுடிந்துள்ளது என்று இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# மீள்சுழற்சி செய்யக் கூடிய கடதாசிக் கோப்பைகள்

உலகில் வருடாந்தம் பல பில்லியன் கடதாசிக் கோப்பைகள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. பிரிட்டனில் மாத்திரம் வருடாந்தம் 2.5 பில்லியன் கடதாசிக் கோப்பைகள் பயன்படுத்தப்படுகின்றபோதும் இவற்றுள் பல மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதில்லை. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கடதாசிக் கோப்பைகளின் உற் பகுதியில் காணப்படும் கடுமையான பிளாஸ் ரிக் பூச்சு மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதில் சிக்கல்களை ஏற்படுத்து கின்றது. இலகுவில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கடதாசிக் கோப்பையைத் தயாரித்துள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர்.

கடதாசிக் கோப்பைகளில் காணப்படும் காட்போட் பகுதியையும் அதன் உற்பகுதியில் உள்ள பலமான பிளாஸ்ரிக் பகுதியையும் பிரிப்பதிலேயே சிரமம் உள்ளது. எனவே காட்போட்டைப் பயன்படுத்தி கடதாசிக் கோப்பை களைத் தயாரித்து மெல்லிய பிளாஸ்ரிக்கைக் கொண்டு உருவாக்கப்பட்ட மற்றுமொரு பகுதியை குறித்த காட்போட் கோப்பைக்குள் செலுத்தக் கூடிய வகையில் புதிய கோப்பையொன்றை அவர் வடிவமைத்துள்ளார்.

தான் தயாரித்திருக்கும் இந்தப் புதிய கடதாசிக் கோப்பையை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவது இலகுவானது. காட்போட் பகுதியையும் பிளாஸ்ரிக் பகுதியையும் இலகுவில் வேறுபடுத்தி அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியும். இதன் மூலம் குப்பைக்குள் சேர்க்கப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறுகின்றார். பிரிட்டனில் விற்பனை செய் யப்படும் கோப்பிகள் மூலம் சுமார் 2.5 மில்லியன் கடதாசிக் கோப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா வில் 50 மில்லியன் கோப்பைகள் அவ்வாறு பயன்படுத்தப்படு கின்றன. இந்த நிலையில் இலகு வில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய 500 பில்லியன் கோப்பை களை ஒவ் வொரு வருடமும் உற் பத்தி செய்வதற்கு கண்டுபிடிப் பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.



# ‘களனி சக்தி’ திட்டத்தில் யாழ்ப்பாணமும் உள்வாங்கல்

களனி சக்தி சேவைகளை யாழ்ப்பாணப் பகுதிக்கும் விஸ்தரிக்கும் வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் பிரதம




நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழ கத்தின் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் ஆகி யோரிடையே களனி கேபிள்ஸ் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.
இந்த உடன்படிக்கையில் சாட்சிகளாக களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் சந்தைப் படுத்தல் பொது முகாமையாளர் அனில் முனசிங்க மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ஏ.அற்புதராஜன் ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.
பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்வதில் இலங்கையின் முன்னோடியான வர்த்தக நாமமாகத் திகழும் களனி கேபிள்ஸ் பி.எல்.சி. 2007 ஆம் ஆண்டு முதல் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது.
இந்தத் திட்டம் தொழில் புரியும் இலத்திரனியல் நுட்பவியலாளர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்தவர்களுக்கும் பொறியியல் நுட்பவியலாளர்களாக திகழ்வதற்கு அவசியமான ஆளுமைகளை விருத்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. களனி சவிய பயிற்சி திட்டத்துடன் இணைந்து கொள்வதற்கு அவசியமான ஒரே தகைமையாக க.பொ.த சாதாரணதர தகைமையை கொண்டிருக்க வேண்டும்.
களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால, இந்தக் களனி சவிய திட்டத்தை நாட்டின் சகல பாகங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு அதிகளவு ஆர்வம் கொண்டிருந்தார். நாட்டின் வடக்கு தெற்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையை பிரகாசமாக்குவதற்கு இதன் மூலம் திட்டமிட்டிருந்தார். இந்தத் திட்டத்துடன் இணைந்து கொள்ளுமாறு நாட்டின் சகல பல்கலைக்கழகங்களுக்கும் இவர் அழைப்பு விடுத்திருந்தார். (நு)

# உயர் வட்டி வீதத்துடன் கூடிய புதுமையான சேமிப்புக் கணக்கு




நாட்டின் முன்னணி நிதி சார் சேவைகளை வழங்கும் நிதி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் சிட்டி சன்ஸ் டிவலப் மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி., அண்மையில் தனது புதுமையான சேமிப்புக்கணக்கை அறிமுகம் செய்திருந்தது.
உள்நாட்டின் பிரபல அறிவிப்பாளரான விஸ்வநா தன் அவர்களின் மூலம், இந்த சேமிப்புக் கணக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந் தது.
பாரம்பரிய வங்கிக் கணக்கில் வழங்கப்படும் அனுகூலங்களுக்கு மேலதிகமான கவர்ச்சிகரமான அனுகூலங்களை வழங்கும் வகையில் இந்த கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.
இந்த புதிய சி.டி.பி. சேமிப்பு கணக்கின் மூலம் நிபந்தனைகளற்ற 7.5 வீத வட்டி வீதம் வழங்கப்படுவதுடன், எஸ்.எல்.ஐ.பி.எஸ். வசதியும் வழங்கப்படுகிறது.
நாடு முழுவதும் உள்ள முன்னணி ஏ.ரி.எம். இயந்திரங்களிலிருந்து பணத்தை இலகுவாக மீளப்பெற்றுக் கொள்ளும் வகையில் சி.டி.பி. குறிக்கப்பட்ட டெபிட் அட்டையும் வழங்கப்படுகிறது.
நிலையியற் கட்டளைகள், தனிநபர் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகள் போன்றனவும் இந்த கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.
மேலும், இந்தச் சேமிப்பு கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் எந்தவிதமான நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டியதில்லை.
சி.டி.பி. நிறுவனத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மல்கெம் வீரசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "வாடிக்கையாளர்களின் சேமிப்புகளுக்கு புதுமையான தனித்துவமான தீர்வுகளை அறிமுகம் செய்வது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.
வாடிக்கையாளர்களின் சேமிப்பு அனுபவத்துக்கு

**நிலையியற் கட்டளைகள், தனிநபர் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகள் போன்றனவும் இந்த கணக்கு வைத்திருப் பவர்களுக்கு வழங்கப் படவுள்ளன.**

பெறுமதி சேர்ப்பதுடன், அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் எமது புதிய சேமிப்புக் கணக்கு அமைந்துள்ளது என நாம் நம்புகிறோம்" எனவும் தெரிவித்தார்.
இந்தக் கணக்கானது பல தரப்பட்ட சலுகைகளை வழங்குவதோடு, இன்றைய வாடிக்கையாளரின் தேவைக் கேற்ற தனித்துவமான கணக்காகும் என மேலும் தெரிவித்தார்.
சி.டி.பி. நிறுவனத்தின் நோக்கங்களுக்கமைய வாடிக்கையாளர்களின் மாற்றமடையும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், நாட்டினுள் சேமிப்பு கலாசாரத்தை ஊக்குவித்து, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சி.டி.பி. ஆதரவு வழங்கி வருகிறது.
சி.டி.பியின் உள்நாட்டு சேமிப்பு இயக்கியின் ஓர் அங்கமாக, நகரத்தின் பிர தான பகுதிகள் இனங்காணப்பட்டு, இந்தச் சேமிப்புக் கணக்கு தொடர்பான தகவல்கள் விளம்பரப் பலகைகள் ஊடாக வழங்கப்பட்டிருந்தன.
மேலும் இலங்கையர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் சி.டி.பியின் நடமாடும் வங்கிச்சேவை பிரிவு நாடு முழுவதிலும் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டிருந்தது. (நு)

# அலியன்ஸ் லங்கா வருடாந்த நிகழ்வில் சிறந்த சாதனையாளர்களுக்கு விருதுகள்




அலியன்ஸ் லங்கா விருதுகள் 2014 நிகழ்வு சமீபத்தில் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்றது. 2013ஆம் ஆண்டில் இடம் பெற்ற தனிநபர் சாதனைகள், கூட்டான சிறந்த முயற்சிகள் வலுவான பங்காளித்துவம் என்பவற்றைப் பாராட்டும் வகையில் விருதுகள் வழங்கப்பட்டன.
இந்த வைபவத்தில் அலியன்ஸ் நிறுவனத்தின் ஆசிய பசிபிக் பிராந்திய பிரதம நிறைவேற்று அதிகாரி ஜோர்ஜ் சார்டோரல் பிரதம அதிதியாகவும், அலியன்ஸ் லங்கா பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேக்கா அலஸ் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர். நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகள், ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி விற்பனை அலுவலர்கள், விருது வென்றவர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.
போர்முலா 1 மோட்டார் பந்தயத்துக்கு உலகளாவிய அலியன்ஸ் நிறுவனம் வழங்கும் அனுசரணையைப் பின்னணியாகக் கொண்டு விருது வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போர்முலா 1 மோட்டார் வாகன ஓட்டப் போட்டிகளில் வெற்றியீட்டுவதற்கு அவசியமான உந்து சக்தியைப் போலவே சவால்கள் நிறைந்த நிதிச் சேவைகள் உலகில் வெற்றியீட் டுவதற்கும் உந்துசக்தியாக அமைவது அவசியம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.
பேரார்வம், விடாமுயற்சி, நேர்மையான விளையாட்டுத்துறை ஒழுக்கம், செயற்றிறன் வாய்ந்த திறமையான அணி போர்முலா 1 என்பன போட்டிகளில் வெற்றியீட்டுவதற்குத் தேவையான பண்புகளாகும். அலியன்ஸ் நிறுவனம் தனது செயற்பாடுகளில் இதே பண்புகளைப் பிரதி பலிக்கின்றது. வெற்றி இலக்கை நோக்கித் தெளிவான மூலோபாயங்களுடன் ஓடுவதால் 8 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அலியன்ஸ் லங்கா இன்று முன்னணியில் திகழ்கிறது.
தொழிற் செயற்பாடுகளில் உயர்ந்த தராதரங்களைக் கடைப்பிடித்து மெச்சத்தக்க சாதனைகளைப் புரிந்த அலியன்ஸ் லங்கா அலுவலர்கள் விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்.
நிகழ்வின் மிகவுயர்ந்த விருதான தலை சிறந்த அலியன்ஸ் விற்பனை அலுவலர் 2013 என்ற விருதை நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த சமில் வசந்த பெற்றுக் கொண்டார். அவர் எம்.டி.ஆர்.ரி (மில்லியன் டொலர் றவுண்ட் டேபிள்) புகழ்பெற்றோர் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.
ஆகக்கூடிய வருடாந்த புதிய வியாபார தொடர்பில் உன்னத சாதனையாளருக்கான பிளாட்டினம் விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. 2013ஆம் ஆண்டின் மிகச் சிறந்த அலியன்ஸ் கிளைக்கான விருதை திருநெல்வேலிக் கிளை பெற்றுக்கொண்டது.
யாழ்ப்பாணம் கிளையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி நிதர்சன் ஆண்டின் மிகச் சிறந்த வியாபார விநியோக முகாமையாளருக்கான விருதையும், கண்டி கிளையைச் சேர்ந்த கே.ஜி. ஹேரத் பண்டா ஆண்டின் மிகச் சிறந்த வெளிக்கள முகாமையாளருக்கான விருதையும் பெற்றுக்கொண்டனர்.
மோட்டார் வாகனப் பிரிவைச் சேர்ந்த லீல் ஆரியசிங்க அசுரக்கொடிக்கு பணிப்பாளரின் விருது வழங்கப்பட்டது. வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதற்கு உதவும் புதுமையான மென்பொருள் ஒன்றை உருவாக்கிய விசேட முயற்சிக்காகவே அவர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.
நிறுவன ரீதியிலான வியாபாரத்திலிருந்து தனிப்பட்ட வியாபாரத்தில் முக்கிய கவனத்தைத் திருப்புவதற்கு அலியன்ஸ் லங்கா சென்ற வருடம் மேற்கொண்ட கொள்கை மாற்றம், நிறுவனத்தின் சிறந்த முன்னேற்றத்திற்கு வழிகோலியுள்ளது. இதனைக் கொண்டாடும் முகமாக ஆயுள் சாராத காப்புறுதித் துறையில் சில புதிய விருதுகள் அறிமுகம் செய்யப்பட்டன.

**வெற்றி இலக்கை நோக்கி தெளிவான மூலோபாயங்களுடன் ஓடுவதால் 8 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப் பட்ட அலியன்ஸ் லங்கா இன்று முன்னணியில் திகழ்கிறது.**

# உரிய முறையில் செயற்படாத முல்லை கிராமிய அமைப்புகள்

## கடும் விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 15
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராமிய அமைப்புக்கள் உரிய முறையில் இயங்காததன் காரணமாக மீளக் குடியமர்ந்த மக்கள் தமக்குரிய வாழ்வாதார உதவிகளைப் பெறுவதில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக புதுக்குடியிருப்பு நகரத்தில் அமைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பன உரிய முறையில் இயங்காததன் காரணமாக வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவு, வாழ்வாதார உதவிகளை வழங்குதல், கடன்கள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் இடர்கள் தோன்றியுள்ளன.

கிராமிய அமைப்புகளுக்கு நீண்ட காலமாக புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்படாமையும் இவற்றின் செயற்றிறன் குறைவுக்கு முக்கிய காரணமாகும்.

மேலும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மிகக் குறைந்த அளவிலான கிராமிய அமைப்புகளின் பிரதிநிதிகளே கலந்து கொண்டனர்.
கிராமிய அமைப்புகளுக்கு நீண்ட காலமாக புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்படாமையும் இவற்றின் செயற்றிறன் குறைவுக்கு முக்கிய காரணமாகும்.
மேற்படி நிலை முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் நிலவுவதன் காரணமாகப் புதிய நிர்வாகங்களைத் தெரிவு செய்து அவற்றை உரிய வகையில் இயங்க வைக்க உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)


மாணவியொருவருக்கு ஏற்புத்தடை மருந்து வழங்கப்படுகின்றது

## வவுனியா வடக்கு மாணவருக்கு ஏற்புத் தடை மருந்து

மாங்குளம், ஜூலை 15
வவுனியா வடக்கு சுகாதாரப் பணிமனையால் பாடசாலைகளில் தரம்-7 இல் கற்கும் மாணவர்களுக்கு ஏற்புத் தடை மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.
இந்த நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
மேலும் மாணவர்களிடையே காணப்படும் போசாக்கு நிலையை அதிகரிப்பதற்காக அயர்ன் மற்றும் போலிக் அமிலக் குளிகைகளும் சுமார் 500 மாணவர்களுக்கென வழங்கப்பட்டன.
தற்போது வவுனியா வடக்கு சுகாதார பணிமனைக்குட்பட்ட சுமார் 3 ஆயிரம் மாணவர்களுக்கென இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு பெற்றோருக்கும் மாணவர்களின் கற்றல் மற்றும் போசாக்குத் தொடர்பான விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. (க-422)


அடிக்கல்லை நடுகிறார் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம்

## அடிக்கல் நடும் நிகழ்வு

மாங்குளம், ஜூலை 15
வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் மஹிந்தோதய ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ச.நித்தியானந்தம் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் கலந்து கொண்டார்.
அண்மையில் இந்தக் கட்டடத்துக்கான அத்திபாரம் வெட்டப்பட்டபோது ஷெல்லொன்று வெடிக்காத நிலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமையால் இதற்கான வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-422)

## பஸ்கள் அதிக நேரம் தரிப்பதால் சிரமம்

ஒட்டுசுட்டான், ஜூலை 15
வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் பஸ்களை ஒட்டுசுட்டான் பஸ் நிலையத்தில் அதிக நேரம் தரித்து நிற்க வைப்பதால் பயணிகள் சிரமங்களையும் வீண் தாமதத்தையும் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


கோப்புப்படம்

மருத்துவமனை நீதிமன்றம் மற்றும் அவசர வேலைகளுக்கெனச் செல்வோர் இதனால் கால தாமதத்தை எதிர்கொள்வதாகவும், குழந்தைகளுடன் பயணிப்பவர்கள் சிரமங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் பஸ்கள் போட்டி போட்டுக் கொண்டு செலுத்திச் செல்லப்படுவதால் தாம் அச்சமடைவதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.
நேரக் கண்காணிப்பாளர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு பயணிகளின் சிரமங்களைப் போக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-500)

## தெரு விளக்குகள் பொருத்தாததால் இருளில் இடர்படும் மக்கள்

துணுக்காய்ப் பிரதேசத்தில் தெரு விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு வேளைகளில் மக்கள் பெரும் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
இங்கு மீள்குடியமர்வு இடம் பெற்று 5 வருடங்கள் கடந்த நிலையிலும் தெரு விளக்குகளை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.
இது தொடர்பாக மக்களால் பல தடவைகள் முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.
ஆனால் தெரு விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரப் பயணங்களை மேற்கொள்வதில் மக்கள் இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக வீதிகளில் விஷ ஜந்துகளின் நடமாட்டம் காணப்படுவதாகவும் சிலர் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கோப்புப்படம்

எனவே பிரதேச மக்களின் நன்மை கருதி தெரு விளக்குகளை அமைத்துத் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், கமக்கார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என்பன பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (க-415)

## மன்னார் மாவட்டத்தில் இயற்கை சேதனமுறை பயிர்ச்செய்கை

மன்னார், ஜூலை 15
மன்னார் மாவட்டத்தில் இயற்கை சேதன முறையிலான பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.
இதற்கென நானாட்டான் மற்றும் முருங்கன் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் செயற்கை முறைத் துண்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
முதற்கட்டமாக முழுமையான சேதன பசளைகளை பாவித்து மடுக்கரை மற்றும் வெள்ளாள கட்டுக் கிராமங்களில் முளைக் கீரை பயிரிடப் பட்டது.
வகை தொகையற்ற விவசாய இரசாயனங்களின் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக மேற்குறிப்பிட்ட செய் முறைத் துண்டங்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவற்றுள் மடுக் கரை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள முளைக்கீரைப் பயிர்ச் செய்கைக்கான செய்முறைத் துண்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வயல் விழா நடைபெற்றது.


பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன், அதிகாரிகள் மற்றும் விவசாயிகள்

குறிப்பிட்ட வயல் விழாவில் குழுமியிருந்த விவசாயிகள் கிராம மக்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பாட விடய உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச விவசாயப் போதனாசிரியர்களாலும் சேதன முறை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.
இதில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்;
சேதன முறையிலான பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள விவசாய உற்பத்தியாளர் சங்கம் மூலம் சேதன முறையிலான மரக்கறிகளை உற்பத்தி செய்யுமாறும் அவ்வாறான திட்டங்களுக்கு விவசாயத் திணைக்களம் ஊக்கமளிக்கும் எனவும் தெரிவித்தார். (க)

## பார்வையற்றோர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சி, ஜூலை 15
கிளிநொச்சி, வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வன்னி பார்வையற்றோர் சங்க மண்டபத்தில் வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் தலைவர் ச.ரூபராசா தலைமையில் இடம் பெற்றது.
முதன்மை விருந்தினராக கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கு.சிவலிங்கம் கலந்து கொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக குடும்ப புனர்வாழ்வு இணைப்பாளர் வி.பிறேம்குமார், பண்டிதர் பரந்தாமன் கலைக் கல்லூரியின் பணிப்பாளர் க.சவுந்தரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.
வன்னிப் பகுதியில் போரினாலும், இயற்கையாகவும், விபத்துக்களாலும் கண் பார்வைகளை இழந்தவர்களின் நலன்களையும், அவர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்ட வன்னி பார்வையற்றோர் சங்கம் பல்வேறு பார்வையற்றவர்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-55-18)


குடும்பப் புனர்வாழ்வு நிறுவனத்தின் உத்தியோகத்தர் பரிசு வழங்குகின்றார்.

CMYK

# திருத்தப்பட்ட மதகினுள் வீசப்படும் கழிவுகள்

## தம்பசிட்டிப் பகுதி மக்கள் விசனம்

பருத்தித்துறை.ஜூலை 15

பருத்தித்துறை - தம்பசிட்டி வீதியில் அமைந்துள்ள புதிதாக புனரமைக்கப்பட்ட மதகினுள் இறந்த பிராணிகளின் உடல்கள். உடைந்த போத்தல்கள் மற்றும் குப்பை கூளங்களைச் சிலர் கொட்டுவதால் அங்கு துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த மதகுக்கு அருகே வட இந்து மகளிர் கல்லூரி, வட இந்து ஆரம்பப் பாடசாலை, பதிவாளர் அலுவலகம், தனியார் கல்வி நிலையம் போன்றவை அமைந்துள்ளன.

இறந்த பிராணிகளின் உடல்களை அந்தப் பகுதிகளில் வீசுவதால் துர்நாற்றம் ஏற்படுகிறது. சுகாதாரச் சீர்கேடு நிலவும் பகுதியாகவும் அது மாறி வருகின்றது.

இது தொடர்பாக பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை பிரதேச செயலகம், பருத்தித்துறை பொலிஸார் என பலதரப்பினருக்கு அறிவித்தும் பயனில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரி விக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (வ-422)



திருநெல்வேலி பரவைக்குளம் பகுதியில் கிராம உத்தியோகத்தர் எஸ்.யோகானாதசிவம் தலைமையில் மக்கள் பாதீனியம் ஒழிப்பில் ஈடுபட்டனர். (வ-7)

# போதையில் நண்பனைக் கொல்ல முயன்றவர்களில் இருவர் கைது

வலி.வடக்கு. ஜூலை 15

மது போதை என்ற போர்வையில் நண்பனைக் கடலில் தூக்கி வீசிக் கொலை செய்ய முயன்றதாகக் கூறி இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலையில் காரைநகர் கசூரினா கடற்கரையில் இருந்து ஐந்து பேர் மதுபானம் அருந்தியுள்ளார்கள். இதனைக் கடற்கரைக் கண்காணிப்பில் இருந்த பொலிஸாரும் மற்றும் கடலில் ஆபத்தில் மாட்டுபவர்களைக் காப்பாற்றும் ஊழியர்களும் அவதானித்துள்ளனர்.

குறித்த இந்த ஐந்து பேரும் கடலில் இறங்கிய வேளையில் நால்வர் ஒன்றிணைந்து ஒருவரைக் கடலில் அமிழ்த்தி விட்டு கரைக்கு வருவதை அவதானித்த கடலில் ஆபத்தில் மாட்டுபவர்களை காப்பாற்றும் ஊழியர்கள் இருவரும் உடனடியாகக் கடலினுள் சென்று கடலினுள் அமிழ்த்தப்பட்டவரை நீரில் இருந்து மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்ததுடன் அயலில் உள்ள பொலிஸாரிடம் விவரத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

கடலினுள் அமிழ்த்தியவரைக் கரைக்குக் கொண்டு வருவதை அவதானித்த மற்றைய நால்வரும் தப்பி ஓடியுள்ளார்கள். இருவர் ஒரு பற்றைக்குள் மறைவதை அவதானித்த ஐஸ்கிறீம் வியாபாரியொருவர் இருவரையும் பிடித்துள்ளார். மற்றைய இருவரும் தலைமறைவாகியுள்ளார்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் இருவரையும் கைது செய்து கொண்டு சென்றதுடன் கடலினுள் அமிழ்த்தப்பட்டவரை சங்கானை மருத்துவமனையில் அனுமதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த இளைஞர்கள் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)

# யாழ்ப்பாணத்தில் காளான் தட்டுப்பாடு


## மக்களின் பாவனை அதிகரிப்பை அடுத்து

அச்சுவேலி, ஜூலை 15

யாழ்.மாவட்டத்தில் காளான் பாவனை அதிகரித்துள்ளதால் காளானை பொருத்தமான அளவுக்கு கொள்வனவு செய்ய முடியாமல் இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான தட்டுப்பாடு அதிகரித்திருப்பதால் காளான் விலையும் கிலோ 300 ரூபாவுக்கு மேல் உயர்ந்துள்ளது.

வீடுகளில் விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் காளான் தாவர உணவில் நோய்களைக் கட்டுப்படுத்தும் இயல்பு கொண்டது. மற்றும் புரதச்சத்து, உயிர்ச் சத்துக்கள் நிரம்பியது என்று கூறப்படுவதால் காளான் நாளாந்தம் சமையலில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் செயற்படும் உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களிலும் கணிசமான அளவு காளான் பயன்படுத்தப்படுகின்றது.



உள்ளூரில் இலகுவாக உற்பத்தி செய்து நல்ல விலைக்கு விற்பனை செய்யக் கூடியதும், நாளாந்தம் அறுவடை செய்வதன் மூலம் தினசரி வருமானம் பெறக்கூடியதுமான காளான் செய்கை யாழ்.மாவட்டத்தில் பொருத்தமான அளவு மேற்கொள்ளப்படுவது இல்லை என்று சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஹோட்டல்கள், உணவு விடுதிகளுக்கு தேவையான காளான் வெளி மாவட்டங்களில் இருந்தே எடுத்துவரப்படுகின்றது. அறுவடை செய்து குளிரூட்டிகள் மூலம் பேணப்பட்டு பயன்படுத்த வேண்டிய காளானை வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்து வருவதால் ஹோட்டல் மற்றும் உணவுவிடுதி உரிமையாளர்கள் தாம் எதிர்பாராத மேலதிக செலவை எதிர்கொள்ள வேண்டி இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் மரக்கறி வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் தாவர உணவான காளான் பாவனை அதிகரித்துள்ளது. காளானில் மருத்துவக் குணங்கள் நிரம்பி இருப்பதால் காளானை விருப்பத்தோடு உணவில் பயன்படுத்தி வருகின்றனர்.

திருநெல்வேலி விவசாயப் பண்ணை விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வரும் காளான் காலையில் குறிப்பிட்டநிமிட வேளையில் விற்றுத் தீர்ந்து விடுவதையும் பாவனையாளர்கள் காத்திருந்து கொள்வனவு செய்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (வ-11)

### அயலாரின் பொறுப்பற்ற செயலால் தலையில் காயமடைந்த சிறுவன்

வலி. வடக்கு, ஜூலை 15

அயலவரின் பொறுப்பற்ற நடவடிக்கையால் பத்து வயதுச் சிறுவன் தலையில் காயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் தனது தாயாருடன் கடைக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் அயல் வீட்டார் ஒருவர் தமது வீட்டினுள் இருந்து உடைந்த பீங்கான் பொருள்களை வேலிக்கு மேலால் வீதியோரத்தில் போட்டுள்ளார்.

வீதியோரமாகச் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவனான சசினேஸ்வரன் தனுசன் என்ற 10 வயதுச் சிறுவனின் தலையில் உடைந்த பீங்கான் கழிவுகள் வீழ்ந்தமையால் அச்சிறுவன் மண்டை உடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் ஊரெழு வடக்கில் இடம்பெற்றுள்ளது. வைத்தியசாலைப் பொலிஸார் சம்பவம் குறித்துப் பதிவை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

# கழிவு நீர் வடிகால் உடைந்து சேதம்

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையின் அருகில் உள்ள வீதியிலுள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலொன்று உடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதன் மேலுள்ள கல் அகற்றப்பட்டு அந்த வாய்க்காலினுள் சைக்கிள் ரயரும், மரக் கொப்பும் அடையாளமாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த வடிகாலை விரைவில் திருத்தி அமைத்துத் தருமாறு மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ஒ-51)

# காப்பெற்றாக மாற்றப்படும் சேதமடைந்த பிரதான வீதிகள்

கொழும்புத்துறை, ஜூலை 15

யாழ்.நகரில் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட பிரதான வீதிகளை காப்பெற் வீதிகளாக அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். விக்ரோறியா வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நடைபெற்று வருவதுடன் கச்சேரி, நல்லூர் வீதியின் காப்பெற் இடும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதேவேளை யாழ்.மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, புங்கன்குளம் வீதி, நவீன சந்தை கிழக்குப் புற வீதி என்பவற்றை காப்பெற் வீதியாக அமைக்கும் வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை அதிகாரியொருவர் தெரிவித்தார். (வ-135)



# இளைஞருக்கான உளத்தாக்கங்களை ஆற்றுப்படுத்தக் கிளினிக் ஆரம்பிக்குக

## சாவகச்சேரி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 15

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறி உயர் கல்வியைத் தொடர முடியாமல் தவிக்கும் இளைஞர்களுக்கு ஏற்படும் உள, உடல் தாக்கங்களை ஆற்றுப்படுத்தும் கிளினிக் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இளம் யுவதிகளுக்கு ஏற்படும் உள, உடல் தாக்கங்கள் தொடர்பான கிளினிக் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கிளினிக் 12 இற்கும் 23 வயதுக்கும் இடைப்பட்ட இளம் யுவதிகளுக்கு ஏற்படும் மாதவிடாய்ச் சிக்கல், இளவயது கர்ப்பம், பாலியல் நோய் போன்றவை தொடர்பாக நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் வயது பரிமாற்றம் காரணமாக உள உடல் நிலைகளில் மாற்றம் காணும் இளைஞர்களுக்கு (17 தொடக்கம் 25 வயது வரை) ஏற்படும் உள உடல் தாக்கங்களை ஆற்றுப்படுத்தும் கிளினிக்கொன்று நடத்தப்படல் வேண்டும்.

குறித்த பருவத்தில் இளைஞர்களுக்கு ஏற்படும் பருவ மாற்றங்களால் பாதிக்கப்படுவோர் அது தொடர்பான விளக்கங்களையோ ஆலோசனைகளையோ கேட்கக்கூடிய எவரும் இல்லாததால் நண்பர்களிடம் ஆலோசனை கேட்கின்றனர். அவர்களும் பியர், சிகரட், கள் போன்றவற்றைப் பருகுமாறு கூறுகின்றனர். இதனை நம்பி பாவிக்கும் இளைஞர்கள் அதன் தாக்கம் அதிகரித்து உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபடுவதுடன் பல்வேறு தீய பழக்கங்களையும் பழகி வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன் தராத நிலைக்கு மாறி விடுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பருவ இளைஞர்களின் எதிர்கால நலன் கருதி மருத்துவமனைகளில் ஆலோசனை மையங்களை மற்றும் ஆற்றுப்படுத்தும் நிலையங்களையும் அமைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ...ல்லிணக்கத்துக்கான ...ரு படிக்கல்லாக ஏன் ...ருதக்கூடாது?

...டமாகாண ஆளுநராக மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்கு ...வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ...ஏ.சந்திரசிறியே நியமிக்கப்பட்டிருப்பதை தெற்கில் சில ...ர்க் கட்சிகளும் அரசியல் பிரமுகர்களும் அழுத்தமான ... கருத்துக்களின் அடிப்படையில் ஆட்சேபித்திருக்கிறார் ... இது, வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் ...லவர்களுக்கு குறிப்பாக வடமாகாண சபை உறுப்பி ...களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளதுடன் ...ர்கள் மத்தியில் இருந்து விரக்தி மிக்க எதிரொலிப்புகளும் ...ளியாகியுள்ளன.

...சின் தரப்பில் பொருளாதார அமைச்சரும் ஜனாதிபதி ...றிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ ...பல தர்க்க ரீதியான கருத்துகளை முன்வைத்து, ஜனாதி ...யின் உரிமைகளை வலியுறுத்தும் வகையில் கொழும்புப் ...திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் வாதிட்டி ...கிறார்.

... மாகாண சபைக்கான தேர்தலானது, அரசின் பலகால ...த்தடிப்புகளுக்குப் பின்னர் சர்வதேச மற்றும் இந்திய ...சுகளின் வற்புறுத்தல்களின் பேரிலேயே வேண்டா ...றுப்புடன் அரசினால் நடத்தப்பட்டது.

...தத் தேர்தலிலும்கூட தில்லு முல்லுகள், அழுத்தங்கள், ...டுபிடிகள், புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் என்று ...வேறு இடைஞ்சல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இருந் ...லும் வடக்கு மக்கள் பெரும்பான்மையாக நின்று தமிழ்த் ...சியக் கூட்டமைப்பை பதவியில் அமர்த்தினார்கள்.

...த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல ...ச்சர் பதவிக்காக போட்டியிட்டு மிக பெரும்பான்மை ...நப்பு வாக்குகளைப் பெற்றிருந்தவரான மதிப்பு மிக்க ...னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ...திய அரசுக்கும் மாகாண அரசுக்குமிடையில் புரிந்துணர் ... நல்லிணக்கமும், நேசபாசமும் நிலவ வேண்டியதன் ...வசியத்தை உணர்ந்து, கூட்டமைப்பிலுள்ள சிலர் விரும் ...த நிலையிலும், ஜனாதிபதி ராஜபக்ஷவின் முன்னிலை ... மாகாண முதலமைச்சராக பதவி ஏற்றுக்கொள்ள ...மானித்து அதன்படி செய்திருந்தார். இதை நாடு அறியும். ...கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

...பகுதி மக்களின் சார்பிலான அந்த பெருந்தன்மையின் ...வளிப்பாட்டை ஜனாதிபதி அவர்களும் பெருந்தன்மை ...ன் ஏற்றுக்கொண்டார் என்றே கருதப்பட்டது. அந்த ...கையிலேயே விக்னேஸ்வரன் முன்வைத்த சில கோரிக் ...கைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருந்தார். அதில் மிக ...க்கியமான ஒன்று வடமாகாணத்துக்கு இராணுவ பின் ...னி இல்லாத ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் ...ற விநயமான கோரிக்கையாகும். அதனை நிறை ...ற்றுவதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்திருப்பதாக ...ழ்ச்சியுடன் கூட்டமைப்பினருக்கும் வடபகுதி மக்களுக் ... முதலமைச்சர் தெரிவித்திருந்தார். பிறகு என்ன நடந் ...? விக்னேஸ்வரன் காட்டிய பெருந்தன்மைக்கு பயன் ...ன்ன? ஜனாதிபதி மீண்டும் வாக்குறுதியை மீறிவிட்டார் ...பதுதானா? இந்தக் கோரிக்கை எந்த வகையில் ஜனாதி ...யின் அதிகாரத்தில் தலையிடுவதாக இருந்திருக்கும்?

...ராணுவ பின்னணி கொண்ட ஆளுநர் மாற்றப்பட ...வண்டும் என்பது தேர்தல் காலப் பின்னணியாக இருந்தி ...க்கலாம். ஆனால் ஒரு மாகாணத்தின் மக்கள் ஆதரவை ...ரும் பின்புலமாகப் பெற்றுள்ள கௌரவமான ஒரு ...தலமைச்சருக்கு அளித்த வாக்குறுதியை இவ்வாறு ...றுதலிப்பது, நிராகரிப்பது நியாயமாகாது. நல்லிணக்கத் ...க்கும் உதவமாட்டாது.

...ளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியுடன் வடக்கு மாகாண ...பையிலுள்ள எவருக்கும் அமைச்சர் பஸில் கூறியிருப் ...துபோல தனிப்பட்ட முரண்பாடு கிடையாது.

...னால் இது ஒரு கொள்கை ரீதியிலான கோரிக்கை. எவ ...க்கும் பாதகமில்லாத கோரிக்கை. அது நிறைவேறினால் ...மிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு வெற்றி கிட்டியதாக ...வர்கள் வீறாப்படைவார்கள் என்று கருத வேண்டியதில்லை. ...ரு முதலமைச்சருக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப் ...டுகிறது. அது வடக்கு தெற்கு மக்களின் எதிர்கால நல்லி ...க்கத்துக்கான ஒரு படிக்கல்லாக ஏன் கருதப்பட முடியாது! இதைப் பற்றி அரசு ஆலோசித்தால் என்ன?

# தலையீடுகள்

## பிரச்சினையைத் தீர்ப்பதற்கானவையா?

தம்பி



இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு நாடுகள் அறிமுகமாகியிருக்கின்றன. பலமுள்ள நாடுகள் நேரடியாகத் தலையிடுவதைத் தவிர்த்து, தமது நட்பு நாடுகளைக் களமிறக்கும் நடவடிக்கையின் விளைவுகளாகவே இந்த அறிமுகங்கள் நடந்திருக்கின்றன. முதலில் இந்தியா, அதற்கு அடுத்து நோர்வே தற்போது தென்னாபிரிக்கா என அவைகளின் பட்டியல் வகைப்படுத்தப்படுகின்றன. இலங்கை, சர்வதேச சூழலில் வலுவாக சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான அந்நியத் தலையீடுகள் இடம்பெறுகின்றன.

இந்த நாடு காலனிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த பின்னர் நிகழ்ந்த முதல் நேரடியான தலையீடு இந்தியாவினுடையதாகும். இலங்கைக்கு மிக அண்மையிலிருப்பதாலும், பூகோள அரசியலில் இந்தியாவுக்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கும் மிக முக்கிய கேந்திர நிலையமாக விளங்குவதனா லும், இந்தியாவே முதலில் இலங்கை மீதான நேரடித் தலையீடுகளை ஏற்படுத்திக் கொண்டது. ஜே.ஆர் மற்றும் ராஜீவ் காந்தி காலத்தில் அது நிகழ்ந்தது. இலங்கையின் உள்நாட்டுப் போரும், இனப்பிரச்சினையும் உச்சமான நிலையை எட்டியிருந்த வேளையில், அதனைத் தீர்வுக்குக் கொண்டுவரும் வகையில் இந்தத் தலையீட்டை இந்தியா மேற்கொண்டது. அதன் விளைவு மிகமோசமான பாடத்தை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அந்தக் காலத்தில் கொடுத்தமையையும் இந்த இடத்தில் நினைவு கூர வேண்டும்.

இன்னொரு நாடொன்றின் மீதான தலையீட்டின் உச்சம் இராணுவ ஆக்கிரமிப்புத்தான். இலங்கை மீது இந்தியா அதையும் செய்ததோடு இல்லாமல், அந்த நாட்டின் மக்களையே கொன்றொழித்தது. தனது நாட்டுக்குள் உள்நுழைந்து இந்தப் பெரும் உயிர்ச் சூறையாடல் நடந்து கொண்டிருக்கையில் இலங்கை இராணுவத்தால், இந்திய இராணுவத்துக்கு எதிராக எதுவும் செய்ய இயலவில்லை. விடுதலைப் போராளிகளே மக்களைக் காப்பாற்றினார்கள். இராணுவம் தலையிட்டால், அது இரு நாடுகளுக்கும் இடையிலான போராகும் என்கிற பீதியில், இராணுவ மோதல்கள் தவிர்க்கப்பட்டன. போராளிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது இந்தியா-இலங்கையை விட்டு வெளியேறிய தருணத்தில், இன்னொரு தேசத்தின் நேரடித் தலையீட்டின் மொத்த விளைவையும் இலங்கை தெளிவாகக் கற்றுக் கொண்டது. அதன் விளைவில் கற்றுக் கொண்ட பாடங்களை வைத்துத்தான் இன்றளவும், இயலுமானவரை நேரடித் தலையீடுகளை இலங்கை தவிர்த்துவருகின்றது. பிரச்சினைகள் தவிர்க்க முடியாதபடி சர்வதேச சூழலில் சிக்கிக்கொள்ளும் வேளைகளில், பேரினவாத, அடிப்படைவாத சக்திகளை வைத்தாவது, அந்நிய தலையீடுகளுக்கு எதிரான அரசியலொன்றை முன்னெடுப்பதற்கு எப்போதும் தயாராகவே இருக்கின்றது. அதற்காக காலத்துக்குக் காலம், பௌத்தத்தின் பெயராலும், ஒருமித்த இலங்கை என்கிற எண்ணக் கருவின் அடையாளத்தோடும் அமைப்புகள் தோன்றி மறைவதை அவதானிக்கலாம்.

இந்திய- இலங்கை தலையீடுகளில் அதிகம் பங்கெடுத்துக் கொண்டவராக டிக்ஸிற் இருந்தார். அவர் தனிப்பட்ட ரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் இலங்கையுடன் கொண்டிருந்த உறவையும், அவரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளையும், இலங்கையிடம் இந்தியா பெற்றுக் கொண்ட வெற்றி தோல்விகளையும் கொழும்பு அசயின்மென்ட் ( Colombo Assignment) என்ற தனது நூலில் குறிப்பிட்டிருப்பார். போராளிகளிடம் முறையாக வாங்கிக் கட்டியதுடன் இந்தியத் தலையீடு குறையத் தொடங்கியது. அதற்குப் பின்னர் இந்தியாவின் ஆட்சிபீடத்தை நிறைத்த ஆட்சியாளர்கள் இலங்கையைப் பகைத்துக் கொள்ளாமல், இங்கு பலம்பெற்றுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான தலையீடுகளையே அதிகம் மேற்கொண்டனர். இலங்கையில் நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்குவது, மற்றையது, ராஜீவ் படுகொலைக்குப் பழியெடுப்பது ஆகிய இரு காரணங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக, இலங்கையுடன் ஒத்து ஓட ஆரம்பித்தது இந்தியா. இவ்வாறு இந்தியாவின் இலங்கை தொடர்பிலான வெளியுறவுக் கொள்கை மாற்றம் பெற்றிருந்த வேளையில், அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய தேசங்களுக்கு, பசுபிக் பிராந்தியம் மீதான அக்கறை ஏற்பட்டது. செப்ரெம்பர் 11 தாக்குதல் உலகம் முழுவதும் இருக்கின்ற போராட்ட அமைப்புக்களை நேரடி கண்காணிப்புக்கு உட்படுத்துவதும், தனக்குத் தேவையற்ற அமைப்புக்களை இல்லாதொழிப்பதுமான வேலைத்திட்டமொன்றை அமெரிக்க முன்னெடுத்தது. கொழும்பு, கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதலோடு புலிகள் அந்தத் திட்டத்துக்கு அவல் கொடுத்தார்கள். மற்றொரு புறம் ஆசியாவை மையப்படுத்திய சீனாவின் எழுச்சியைக் கட்டுப்படுத்தும் தேவையும் அமெரிக்காவுக்கு இருந்தது. என்வே, விடுதலைப் புலிகளையும், இனப்பிரச்சினையையும் காரணம்காட்டி இலங்கை ஆட்சியாளர்களுடன் உறவைப் பேணவும், உள் நுழையவும், மேற்குநாடுகள் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டன.

அதன் பிரதான தூதர்களாக முதலில் கோடன் வைஸும் பின்னர் எரிக் சொல்ஹெய்மும் மாறினர். விடுதலைப் புலிகளுடனும், அப்போதிருந்த ரணில் தலைமையிலான இலங்கை அரசுடனும் இவர்களது பணிகள் ஆரம்பித்து, ராஜபக்ஷ அரசு வாயிலாகப் புலிகள் நந்திக் கடல் வெளியில் மௌனிப்புச் செய்யப்படும் வரைக்கும் இவர்களது பணிகள் நீடித்தன. இப்போதும், இடையிடையே எரிக் இலங்கை விடயம் தொடர்பில் பேசுகின்றார். சமூக வலைதளங்களில் கருத்திடுகின்றார். அண்மையில்கூட இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் நடத்தப்படவுள்ளதாக சொல்லப்படுகின்ற போர்க் குற்ற விசாரணைகளில் சாட்சியமளிக்கப் போவதாகக் கூறியிருந்தார்.

மேற்கு நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இந்தத் தூதுவர்கள் இலங்கை தொடர்பிலானதும், ஈழப்போராட்டம் தொடர்பிலானதும் ஓரளவுக்கு சரியான விளக்கத்தையும், அதன் முடிவிடத்தையும் அறிந்து வைத்துள்ளவர்களாகவே இருக்கின்றனர். அத்துடன் உள்நாட்டு விவகாரங்களையும், ஈழப் போராட்டத்தையும் திசைதிருப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர். அதில் முக்கியமானது புலிகளைச் சர்வதேச பொறியில் நேர்த்தியாகச் சிக்கவைத்து, அவர்களின் கைப் பொம்மையாக மாறாதவிடத்து அழித்துவிடும் செயற்றிட்டத்தை முன்னெடுத்தமையாகும். கோடன் வைஸின் 'கூண்டு' என்கிற இலங்கையின் அனுபவங்கள் தொடர்பிலான புத்தகம் இதற்கு தகுந்த சான்றாகும். இலங்கையின் இறுதிப் போர் வேளையில், இயங்கிய மேற்கு சார்ந்த இந்தத் தரப்பினரிடம், உண்மையில் நடந்த விடயங்கள் தொடர்பிலான சான்றுகள் கூட இருக்கின்றன. வெள்ளைக் கொடி விவகாரத்தோடு இவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புபட்டிருக்கின்றனர். எனவே சர்வதேச விசாரணை என்று வந்தால் அதில் இந்தத் தலையீட்டாளர்களின் பங்கு கணிசமானதாக இருக்கும்.

இப்போது, போர் முடிந்து நல்லிணக்க காலம். தென்னாபிரிக்கா பக்கமிருந்து சிறில் ரமபோஸா வந்திருக்கிறார். வேறு எந்த அந்நிய தலையீட்டாளர்களையும் போலில்லாமல் இவர் இலங்கையில் எதிர்நோக்குவது புதியதொரு சூழலை. நல்லிணக்கம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகின்ற போருமற்ற, சமாதானமுமற்ற ஒரு காலத்தில் இவர் வந்திருக்கிறார். முதல், இரண்டாம் பயணங்களிலேயே தனது சலிப்பை வெளிப்படுத்தி விட்டார். ஆக இவரது அனுபவமும் ஏற்கனவே இரண்டு நாடுகளின் தலையீட்டாளர்களுக்கும் ஏற்பட்டதைப் போலத்தான் இருக்கும். இறுதியில் இவரது இலங்கை நிலவரம் தொடர்பிலும்; இனச்சிக்கல் குறித்தும் நூலொன்றை எழுதும் வாய்ப்பைப் பெறுவார்.

அந்நியத் தலையீடுகளால் பிரச்சினைகளை மேலும் பிரச்சினையாக்கித் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமே தவிர, அதற்குச் சரியான தீர்வை வழங்க முடியாது என்பதே இது குறித்து அனைவரும் கற்றுக் கொண்ட பாடம். ஆயினும் இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில், இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அந்நிய தலையீடுகள் அவசியப்படுகின்றன. ஏனெனில் கால நீடிப்பை ஏற்படுத்துவதில், அந்நியத் தலையீடுகளுக்கு மிக முக்கிய பங்கிருக்கின்றது. கால நீடிப்பு, பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்து மறைத்துவிடும் என்பதில் இலங்கை அரசு அசையாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகின்றமை இங்கு அனைவரும் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகும்.


**ரமணன்**

# படுகுழிக்குள் வீழ்த்தும் போதைப் பொருள்கள்

மது, மாது, பொன், புலால் இதில் எது நல்ல மனிதரையும் படுகுழியில் தள்ளுகிறது என்பதை ஒரு நல்ல மனிதனை வைத்து சோதனை செய்தனராம்.
உழைத்து சம்பாதிக்காத பணம் வேண்டாம் என்று பொன்னை மறுத்து, மற்ற உயிர்களை அழித்து நமக்கு எதற்கு உணவு என்று புலால் மறுத்து, வன்புணர்ச்சி மகா பாவம் என்று பெண் சபலத்திற்கும் இடம் கொடாத அந்த நல்ல மனிதன் மதுவைப்பார்த்து இதனால் மற்றவருக்கு தீங்கில்லை. உட்கொண்டால் நல்லது கெட்டதெல்லாம் தனக்கு மட்டும் தானே என்று மதுவில் மயங்கினான். போதை பசியைத் தூண்ட, புலால் உணவு ருசித்து, மயக்கம் தலைக்கேற வன்புணர்ச்சியில் திளைத்து, இவையனைத்தையும் பெற பணத்தை அப கரித்தான். போதைப் பொருள் அத்தகைய அழிக்கவல்லதொரு தீய சக்தி.
உள்நாட்டுக் கிளர்ச்சி, பொருளாதாரப் பின்னடைவால் பாதிக்கப்பட்ட நாடுகள்தான் சர்வதேச அளவில் போதைப் பொருள் கடத்துவோருக்கு தளம். உலகெங்கிலும் மனித உரிமைகளை நிலைநாட்ட முயற்சி எடுத்து வரும் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் முக்கிய பணி, இத்தகைய நாடுகளை அழிவிலிருந்தும், கடத்தல்காரர்களின் பிடியிலிருந்தும் காப்பாற்றி அமைதியை நிலை நாட்டுவது' என்று ஐக்கிய நாடுகள் அமைப் பின் தலைவர் பான் -கீ மூன் அறிக்கை விடுத்துள்ளார்.
போதைப் பொருள்களுக்கு எதிராக பல நாடுகள் பல்வேறு கட்டங்களில் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. 1842ஆம் ஆண்டு சீனா, இங்கிலாந்து நாடுகளுக்கிடையில் போதைப் பொருளான ஓபியம் எனப்படும் அபினை சீனாவில் புழக்கத்தில். விடுவதில் ஏற்பட்ட பிரச்சினை போரிடும் அளவுக்குச் சென்றது. ஓபியம் போர்' என்று இந்நிகழ்வு வரலாற்றுப் பதிவுகளில் இடம்பெற்றுள்ளது.
இந்தியாவில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஹிமாசல பிரதேசம், பஞ்சாப் பகுதிகளில்



கஞ்சா பயிரிடுதல், பண்டிகை கொண்டாட்டங்களின்போது கஞ்சா புகைப்பது, சோம பானம், பங்க் போன்ற போதைப் பொருள் கலந்த மது ரஸங்களைக் அருந்துவது வழக்கமாக இருந்து வருகி றது.
அபின் உள்நாட்டு மருந்து தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. கொடிய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலி நிவாரணியாக அபின் கலந்த மருந்துகள் நாட்டு வைத்தியத்தில் காலங்காலமாக உபயோகத்தில் உள்ளன. நூறு வருடங்களுக்கு முன்பு மருத்துவரின் சான்றோடு அபினை மருந்தகங்களில் வாங்கும் முறை இருந்தது.
பெத்திடின் போன்ற ஆங்கில மருந்து, வலியைக் குறைப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. மருந்தை மருந்தாக உட்கொள்ளாமல் விருந்தாக அதிலேயே திளைத்தால் விபரீத விளைவுகள் ஏற்பட்டு அது ஒருவரை அழித்துவிடும்.
1908இல் இருந்து முனைப்பாக சீனா, ஆப்பிரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் போதைப் பொருள்க்ள் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1909இல் இருந்து சர்வதேச அளவில் போதைத் தடுப்பு குற்றங்களுக்கு முத்தாய்ப்பு வைத்தது போல் 1987இல் ஐக்கிய நாடுகள் சபை பிரத்தியேக போதை தடுப்பு கூட்டத்தொடரை நடத்தியது.
அதில் போதைப் பொருள்கள் தயாரித்தல், கடத்தல் மற்றும் விற்பனை செய்தல் பன்மடங்காக பெருகி வருவதையும் அதன் விளைவாக கிளைத் தெழும் குற்றங்களை தடுக்கப் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் விவாதித்தது.
சீன மாகாணங்களான ஹியூமென், ஹூவாடோங் பகுதி ஆட்சியரான லின் செக்சு என்பவர், அபின் புழக்கத்தை முடக்க கடும் நடவடிக்கை எடுத்தார். அவர் சுமார் 200 அபின் வியாபாரிகளைக் கைது செய்து 12 லட்சம் கிலோ அபினைக் கைப்பற்றினார்.
1839ஆம் வருடம் ஜூன் மூன்றாம் திகதி தொடங்கி, 23 நாள்கள் 500 பணியாளர்கள், கைப்பற்றிய அபினை, உப்பு, சுண்ணாம்பு கலந்து அழித்து கடலில் கரைத்தனர். அந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளைப் போற்றும் வகையில் ஜூன் 26ஆம் நாளை போதைப் பொருள் ஒழிப்புத் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.
1988ஆம் வருடத்தில் இருந்து இது அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் 2007ஆம் ஆண்டின் அறிக்கைப்படி சட்டத்துக்குப் புறம்பான போதைப் பொருள் வணிகத்தின் மதிப்பு ஆண்டொன்றுக்கு சுமார் 320 மில்லியன் டொலர்.
பல ஆயிரம் கோடி ரூபாய் பணம் புரள்வதால் கடத்தல்காரர்களின் பலமும் அதிகம் என்பதை சொல்ல வேண்டியதில்லை. சர்வதேச காவல் அமைப்புக்கு போதைப் பொருள் கடத்தல் மிகப்பெரிய சவால்.
சமூக நிலைப்பாடுகளின் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருவது கண்கூடாக தெரிகிறது.
மேலை நாட்டு கலாசாரத்தில் கடுமை யாக உழைப்பது, மற்றவர் உரிமைகளை மதிப்பது போன்றவைகள் போற்றப்பட வேண்டியவை.
சுதந்திரம் என்ற பெயரில் மது, போதைப் பொருள்களை பயன்படுத்தும் மேல் நாட்டு கலாசாரம் மிகப் பெரிய அழிவுக்கு வழி வகுக்கிறது. போதைப் பொருள் கலர்சாரம் நாட்டில் பரவி வருவதைத் தடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணமிது.
இரண்டும்கெட்டான் பருவத்தில் போதைப் பொருள் பாவனையால் உடல் ரீதியாகவும், உணர்வுகளிலும் பல மாற்றங்கள் ஏற்படும். புதிய சுதந்திரம் கிடைத்துவிட்டதாக உணரும் பருவத்தில் சரியாக கவனிக்கப்பட வில்லை என்றாலும், சீரிய வழிகாட்டுதல் இல்லாத நிலையிலும் இளைஞர்கள் கெட்ட பழக்கங்களின் பிடியில் சிக்க வாய்ப்புண்டு.
எல்லாமே சேர்க்கை தோஷத்தால் ஏற்படுகிறது. சகவாசம் நன்றாக அமைவதும் ஒரு கொடுப்பினை. நல்லியல்புகள் பொருந்திய குடும்பத்து இளைஞர்களும் கெடுவது தீயவர்களின் சகவாசத்தால் என்பது உண்மை.
பள்ளிப்பருவத்திலேயே புகை பிடிக்கும்பழக்கம் ஆரம் பித்து விடுகிறது. புகை வலையில் சிக்க



**சுதந்திரம் என்ற பெயரில் மது, போதைப் பொருள் களைப் பயன்படுத்தும் மேல் நாட்டு கலாசாரம் மிகப் பெரிய அழிவுக்கு வழி வகுக்கிறது. போதைப் பொருள் கலாசாரம் நாட்டில் பரவி வருவதைத் தடுத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணமிது. இரண்டுங் கெட்டான் பருவத்தில் போதைப் பொருள் பாவனையால் உடல் ரீதியாகவும், உணர்வுகளிலும் பல மாற்றங்கள் ஏற்படும்.**

வைப் பதில் சிலருக்கு ஆனந்தம். அதுவே சுதந்திரம், வீரம், ஆண்மையின் அடையாள மாக விவரிக் கப்படுகிறது. புகையிலையில் உள்ள நிக்கோடின் மூளை நரம்புகளை ஆட் கொண்டு பழக் கத்தை பற்றிக் கொள்ள வைக்கிறது.
அதோடு தொற்றிக் கொண்ட பழக்கம் மது வகைகள். அந்த போதையும் போதாது என்று ஹெராயின், கஞ்சா, கோக்கெய்ன் போன்ற நச்சுப்பொருள்களை நாடும் நிலை ஏற்படுகிறது. போதை வலையில் சிக்கினால் மீள்வது கடினம்.
பெற்றோருக்கும் கல்வி நிர்வாகத்திற்கும் போதைப் பழக்கத்தை கண்காணிப்பதில் பொறுப்பு இருக்கிறது. நல்லது நடப்பது கடினம், கெடுதல் கச்சிதமாக பரவும் என்பதை பல நிகழ்வுகளில் பார்க்கலாம். கெடுதலை தடுத்தலே முதல் கட்ட நிவாரணம்.
போதைப் பொருள் ஆண் - பெண் பேதமின்றி இருபாலாரையும் ஆட்கொள்ளும். அவர்களது நடவடிக்கை வித்தியாசமாக இருக்கும், பசியிருக்காது, சோம்பிருப்பார்கள், குற்றவு ணர்வு முகத்தில் தெரியும். போதைப் பொருளை பெறுவதற்காக எது வேண்டுமானாலும் செய்வார்கள். வீட்டிலேயே திருடுவார்கள். தெரிந்தவர்களிடம் கடன் கேட்பார்கள். திடீரென்று கோபப் படுவார்கள். சரியான வேளையில் போதைப் பொருள் கிடைக்கவில்லையென்றால் எதையோ இழந்து விட்டதைப் போல உருகுலைந்து தத்தளிப்பார்கள். தற்கொலைக்கும் துணிந்துவிடுவார்கள். போதைப் பொருளுக்கு அடிமையான பெண்கள் பாலியல் கொடுமைக்கு தள்ளப்படும் அவல நிலையு முண்டு.
பள்ளி, கல்லூரி, வீடுகளில் கண்காணிப்பு சீராக இருந்தால் போதைப் பொருள் கொடுமையிலிருந்து இளைஞர்களைக் காப்பாற்ற முடியும்.
போதைப் பொருள் அதிகமாக தயாரிக்கும் இடம் தங்க வளையம் எனப்படும் ஆப்கானிஸ்தான், ஈரான், பாகிஸ்தான். அதுபோல கம்போடியா, வியட்நாம், பர்மா, தாய்லாந்து தங்க முக்கோணம் என்று வர்ணிக்கப்படும் போதை பொருள்கள் புழங்கும் நாடுகள்.
போதைப் பொருள் கடத்தப்படுவதற்கு இடைப்பட்ட நிலம் இந்தியத் துணைக் கண்டம். ஆனால் இப்போது முக்கிய உட்கொள்ளும் தளமாக மாறி வருகிறது. போதைப் பொருள் தடுப்பு ஒரு தொடர் நடவடிக்கை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதை தடுப்பு சங்கங்கள் அமைத்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். போதைப்பொருளுக்கு மறுப்பு தெரிவிப்பது தனி மனித உரிமை என்பதை இளைய சமுதாயம் உணர வேண்டும்.
இலங்கையின் அதிகரித்த குற்றச்செயல்களில் மிகப் பிரதானமானதாக போதைப்பொருள் பாவனை உள்ளது. அண்மைக் காலத்தில் சில அரசியல்வாதிகளுக்குக்கூட போதைப்பொருள் கடத்தல் மற்றும் வியாபாரத்தில் தொடர்புகளாக செய்திகள் வந்தன. பொதுவாக இலங்கை வாழ் இளைஞர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு போதைப்பொருளுக்கு இலக்காகி இருக்கின்றனர்.
இந்த நிலையில் இலங்கையில் வடபாகத்தில் உள்ள சில பாடசாலைகளிலும் இளைஞர்கள் கூடும் இடங்களையும் இலக்காக வைத்து போதைப்பொருள் விநியோகம் இடம்பெறுகின்றது. இதனை சட்ட அதிகாரம் உள்ளவர்கள் கண்டும் காணாமலும் இருப்பது கவலைக்குரியதொன்று.

---

# பயனில்லாத கட்டடங்கள்

**வாசகர் திருமுகம்**

யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலும் புதிய, புதிய கட்டடங்கள் அமைக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. போர் ஓய்ந்து அமைதியான சூழல் ஒன்று நிலவ ஆரம்பித்ததால் வர்த்தகம் அபிவிருத்தியடையும் என்ற நம்பிக்கையுடன் வர்த்தக நிலையங்களுக்கான கட்டடங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டன. ஆனால் இவற்றில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாத நிலையில் பூட்டிக் கிடக்கின்றன. தற்போது குடாநாட்டின் வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் காணப்படுகின்றது. வர்த்தகர்கள் பலரும் செய்வதறியாத நிலை யில் கைகளைப் பிசைந்தவாறு நிற்பதைக் காண முடிகின்றது. ஏனென்றால் அவர்கள் எதிர்பார்த்த அபிவிருத்தி இங்கு ஏற்படவில்லை. தென்பகுதி வர்த்தகர்களின் படையெடுப்பு இவர்களின் வர்த்தக முயற்சிகளை வெகுவாகப் பாதித்து விட்டது. மக்களின் தேவைகளுக்குரிய சகல பொருள்களும் வாகனங்களில் ஏற்றி வரப்படுவதுடன் வீதிகளில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் இங்குள்ள் கடைகளை விடுத்து இத்தகைய வீதியோரக் கடைகளையே நாடி நிற்கின்றனர். இதனால் பெரும் முதலீடு செய்து கடைகளை நடத்திவரும் குடாநாட்டு வர்த்தகர்கள் கொள்முதல் செய்த பொருள்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.
இதனால், வர்த்தக நிலையங்களுக்கென அமைக்கப்பட்ட கட்டடங்கள் பல தேடுவாரற்ற நிலையில் காணப்படுகின்றன. ஆனால் இந்த நிலையிலும் புதிய புதிய கட்டடங்கள் அமைக்கப்படுவதைக் காண முடிகின்றது. வங்கிகளில் கடன்களைப் பெற்று அமைக்கப்பட்ட கட்டடங்கள் பாவனையில் இல்லாததால் அவற்றை அமைத்தவர்களும் பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
ஆகவே, கண் மூடித்தமான வகையில் வகைதொகையின்றிக் கட்டடங்களை அமைப்பதில் பயனொன்றும் இல்லையென்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். தவறினால் குடாநாடு மீள முடியாததொரு பொருளாதாரச் சிக்கலில் மூழ்க வேண்டியதுதான்.

*க.துவாரகன், கோப்பாய்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மன நிம்மதியும், சந்தோஷமும் உண்டாகும். கடின உழைப்பும் முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் அடைவீர்கள். நீண்ட நாள்களாக போட்டிருந்த திட்டம் முழுவதுமாக செயற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்த்து செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

**இடபம்**: நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். புத்திக் கூர்மையுடன் செயற்படுவீர்கள். தைரியம் உண்டாகும். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**மிதுனம்**: உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம். கவனம் தேவை. வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரவேண்டியவை தாமதப்படும்.

**கடகம்**: மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். எந்த ஒரு செயலையும் சிந்தித்துச் செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிங்கம்**: இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் விவாதம் ஏற்படலாம். கவனம் தேவை. மனதில் இருந்த குழப்பம் நீங்கி துணிச்சல் உண்டாகும். கௌரவ பங்கம், வீண் அலைச்சல் ஏற்படலாம்.

**கன்னி**: எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். நீங்கள் அவசரமாக எதையும் செய்யக்கூடாது. வீண் கவலை, வீண் வாக்குவாதங்கள் ஆகியவை ஏற்படும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். திருமண முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சாதகமான பயன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**விருச்சிகம்**: நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்ப்புகள் அகலும். கடினமான வேலைகளை யும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் சார்ந்த விடயங்களில் முடிவு எடுப்பதற்கு முன் ஒரு தடவைக்கு இரு தடவை யோசிப்பது நல்லது.

**தனுசு**: மனதில் தைரியம் உண்டாகும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். உங்கள் இஷ்டத்துக்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**மகரம்**: வேற்றுமொழி பேசுபவர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவி அல்லது கூடுதல் பொறுப்புகள் கிடைக்கப் பெறுவார்கள்.

**கும்பம்**: பெண்களுக்கு மனதில் வீண்குழப்பம் உண்டாகும். உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்களை நாடிச் சிலர் வரக்கூடும். உத்தியோகத்தில் உயர்வு பெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பயன் தரும். சக ஊழியர்களின் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்**: பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது. தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்குவன்மையால் இலாபம் அதிகரிக்கும். அரசு தொடர்பான காரியங்கள் சாதகமான பயன்தரும்.

## நாளை
**ஆனி-32 புதன்கிழமை | 16.07.2014**

திதி: பஞ்சமி பி.இ.05.59 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப.12.59 வரை
சுபநேரம்: 04.30-06.00 வரை
இராகுகாலம்: 12.00-01.30 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உனது இயல்பை முதலில் நிச்சயப்படுத்து

ஒருதலைச் சார்பாக நடப்பது, உலகுக்குத் தீமையை விளைவிக்கிறது. பல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதன் மூலம் பல வகையில் பிரபஞ்சத்தை உன்னால் அனுபவித்து மகிழ முடியும். ஞானி என்ற முறையிலும் பக்தன் என்ற முறையிலும் இன்னும் பல்வேறு முறைகளிலும் உன்னால் உலக அனுபவத்தைப் பெற முடியும். உனது இயல்பை முதலில் நிச்சயப்படுத்திக்கொண்டு, பிறகு உறுதியாகப் பற்றி நில். தொடக்க நிலையில் இருப்பவனுக்கு நிஷ்டையே (இஷ்ட தெய்வம் ஒன்றிடம் பக்தி) ஏற்ற நெறியாகும். ஆயினும் பக்தியும் சிரத்தையுமே அனைத்துக்கும் வழிகாட்டி ஒருவனை அழைத்துச் செல்லும். கோயில்கள், கொள்கைகள், உருவங்கள் இவை அனைத்தும், இளம் செடியைப் பாதுகாக்க அமைந்த வேலி போன்றவை. செடி வளர்ந்து மரமான பின்னர், வேலிகளை வெட்டி எறிந்துவிட வேண்டும். பல்வேறு மதங்களும், பைபிள்களும், வேதங்களும், கொள்கைகளும் சிறிய செடிகளைப் பாதுகாக்கப் பயன்படும் தொட்டிகள் மட்டுமே. தொட்டிக்குள்ளே இருப்பதை விடுத்து, செடிகள் வெளி வந்துவிட வேண்டும். நிஷ்டை என்பது செடியைத் தொட்டியில் வைப்பதற்கு நிகராகும். தனது நெறியில் செல்லப் பாடுபடும் ஆன்மாவுக்கு இது ஒரு பாதுகாப்பு ஆகும்.

## பாலத்தைக் காதலித்து திருமணம் செய்துகொண்ட பெண்




Supplied by WENN.com

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரான்ஸில் உள்ள பாலம் ஒன்றைத் திருமணம் செய்து கொண்டுள்ளமை அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ரோஸ் என்ற பெண் பாலத்தில் இருந்து வரும் அதிர்வுகளை வைத்து இசை உருவாக்கம் என்ற பெயரில் உலகம் முழுவதும் பயணம் செய்து வந்துள்ளார்.

இதனை அடுத்து பிரான்ஸில் உள்ள லீ பாண்ட் டு டியாமல் பாலத்தின் மீது மிகுந்த காதல் கொண்டுள்ளார். இந்த நிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் விருந்தினர்கள் முன்னிலையில் அந்தப் பாலத்தைத் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

அவர் தற்போது, கணவனான பாலத்துடன் முதலாம் ஆண்டு திருமண நாளை கொண்டாடியுள்ளார்.

இதுகுறித்து ரோஸ் கூறுகையில்; 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்தப் பாலத்தைப் பிரிந்து தம்மால் வாழ முடியவில்லை என்றும், இதனால் பிரான்ஸில் வாழ முடிவு செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 8 | | | 3 | | |
| 8 | | | | | 7 | | 2 | 1 |
| | 9 | | | | | 4 | 5 | 8 |
| 9 | | | | | | | | |
| 1 | 7 | | 2 | 3 | 9 | | 6 | 5 |
| | | | | | | | | 2 |
| 2 | 3 | 1 | | | | | 7 | |
| 6 | 8 | | 5 | | | | | 9 |
| | | 9 | | | 6 | 2 | 8 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 9 | 8 | 6 | 2 | 7 | 4 |
| 2 | 8 | 6 | 1 | 4 | 7 | 3 | 5 | 9 |
| 9 | 7 | 4 | 3 | 5 | 2 | 6 | 8 | 1 |
| 6 | 9 | 5 | 8 | 3 | 1 | 4 | 2 | 7 |
| 3 | 2 | 7 | 6 | 9 | 4 | 5 | 1 | 8 |
| 4 | 1 | 8 | 2 | 7 | 5 | 9 | 6 | 3 |
| 8 | 6 | 2 | 4 | 1 | 3 | 7 | 9 | 5 |
| 5 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 | 4 | 2 |
| 7 | 4 | 9 | 5 | 2 | 8 | 1 | 3 | 6 |

## கரவைச் சுடர் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 15
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் ரெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
சிவானந்தா விளையாட்டுக் கழக அணிக்கும் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகஅணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
பிறைட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(த-23)



முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 147 புள்ளிகளைப் பெற்று கரைதுறைப்பற்று இளைஞர் அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றனர். (த)

## யாழ். பிரதேச இளைஞர் அணி உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.
இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் யாழ்.பிரதேச இளைஞர் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டுபிரான்ஸ்பழைய மாணவர் சங்கம் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்றுவருகின்றன.
இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## யூனியனை வீழ்த்தியது கலைமகள்

யாழ்ப்பாணம் ஜூலை 15
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றிய ரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## விமானப் படையணி வெற்றி

வலி வடக்கு, ஜூலை 15
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய மட்டத்தில் நடைபெறும் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி ஆட்டம் ஒன்றில் இலங்கை விமானப் படையணி வெற்றி பெற்றுள்ளது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஆட்டத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியும் இலங்கை விமானப் படை அணியும் மோதிக் கொண்டன.
முதல் பாதி ஆட்ட நிறைவில் விமானப் படையணி மூன்று கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.
இரண்டாம் பாதியில் விமானப் படையணி மேலும் நான்கு கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.
ஆட்ட நிறைவில் விமானப் படை அணி 7: 0 என்ற கோல் கணக்கில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கை வெற்றி பெற்றது. (த-86)



## கனகபுரம் வி.கவின் உதைபந்தாட்டம் ; வெற்றிக்கிண்ணம் உருத்திரபுரம் வசம்

கிளிநொச்சி, ஜூலை 15
கனகபுரம் விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி லீக்கின் அனுசரணையுடன் அணிக்கு 7 பேர் கொண்ட சுற்றுப் போட்டியை நடத்தியது. இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்றது. இதில் உருத்திரபுரம் பச்சை, ஜெயந்திநகர் 'ஏ' அணிகள் பலப்பரீட்சை நடத்தின.
போருக்கு முன்னர் வருடாவருடம் நடத்தப்பட்ட இந்தப் போட்டி கைவிடப்பட்டு மீண்டும் இந்த வருடமே ஆரம்பமாகியிருந்தது. இதனால் பெருமளவிலான ரசிகர்கள் மைதானத்தில் குழுமியிருந்தனர்.
ஆட்டம் ஆரம்பமானதுமே இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. ஆனால் ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் உருத்திரபுரம் பச்சை அணிக்காக பிரதீஸ் கோல் போட அந்த அணி முன்னிலை பெற்றது. இந்நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது முதல் பாதியில் 1:0 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் பச்சை அணி முன்னிலை பெற்றது.
இரண்டாவது பாதியாட்டம் தொடங்கியதுமே உருத்திரபுரம் பச்சை அணி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இதில் 9 ஆவது நிமிடத்தில் ஹரிஸ் கோல் அடிக்க உருத்திரபுரம் பச்சை அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. ஜெயந்திநகர் அணி கடுமையாகப் போராடிய போதும் பதில் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஆட்டத்தை 2:0 என்ற கணக்கில் வெற்றி கொண்ட உருத்திரபுரம் பச்சை அணி அமரர் சண்முகலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.
கனகபுரம் விளையாட்டுக்கழகத் தலைவர் அ.றெஜிஅலோசியஸ் தலைமையில் நடந்த பரிசளிப்பு நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனரூபன் உருத்திரபுரம் பச்சை அணிக்கும் சிறப்பு விருந்தினராக்கலந்துகொண்ட மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஜெயந்திநகர் அணிக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கினர்.
இந்தப் போட்டியின் நாயகனாக பிரதீஸ் (உருத்திரபுரம் பச்சை), தொடர் நாயகனாக் மொறீஸ் ஹறிஸ் (உருத்திரபுரம் பச்சை), சிறந்த கோல் காப்பாளராக க.பிரதீபன் (ஜெயந்திநகர் ஏ) தெரிவாகினர். தொடரில் சிறந்த அணியாக பூநகரி தம்பிராய் அண்ணா அணி தெரிவானது. (த)



வெற்றி பெற்ற அணியினர்

# 24 ஆண்டுகளுக்குப் பின் மகுடம் சூடியது ஜேர்மனி




கோட்ஸேயின் அபார கோலின் துணையுடன், கூடுதல் நேர ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, 24 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஜேர்மனி.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஐரோப்பாவின் பலம் வாய்ந்த ஜேர்மனியும், தென் அமெரிக்காவைச் சேர்ந்த வலுவான ஆர்ஜென்ரீனாவும் மோதின.

கடந்த 4 உலகக் கிண்ணங்களில் அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றில் தோல்வி கண்ட ஜேர்மனி, மரக்காணா மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி 4ஆவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

### *மாறியது வரலாறு*

இந்த வெற்றியின் மூலம், உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாறு ஒன்றை மாற்றி எழுதியது ஜேர்மனி. தென் அமெரிக்கக் கண்டத்தில் இதற்கு முன்னர் நடைபெற்ற 4 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அக்கண்டத்தைச் சேர்ந்த (உருகுவே இருமுறை, பிரேஸில், ஆர்ஜென்ரீனா தலா ஒரு முறை) அணிகளே வாகை சூடியுள்ளன.

ஆனால் இந்த முறை ஜேர்மனி கிண்ணத்தை வென்று அமெரிக்க கண்டத்தில் ஐரோப்பாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. அமெரிக்க கண்டத்தில் அக்கண்ட அணிகள் தான் வெற்றி பெற முடியும் என்ற வரலாற்றை ஜேர்மனி மாற்றியிருக்கிறது.

### *பரபரப்பான ஆட்டமும் கூடுதல் நேரக் கோலும்*

பரபரப்பான 90 நிமிட நேர ஆட்டத்தில் கோல்கள் எதுவும் விழாததால், ஆட்டம் கூடுதல் நேரத்துக்குச் சென்றது. கூடுதல் நேரத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் மாறி மாறி செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

பிறகு, கூடுதல் நேரத்தின் இரண்டாவது பாதியில், 113ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் சுயர்லி, இடப்புறமாக பாதி மைதானத்தில் இருந்து பந்தை படுவேகமாக கடத்தி வந்து, அங்கிருந்து கோல் கம்பம் அருகே நின்றிருந்த மாரியோ கோட்ஸேக்கு பாஸ் செய்ய, அவர் அதை அருமையாக தன் நெஞ்சில் தடுத்து, பந்து கீழே இறங்கியவுடன் இடது காலால் அற்புதமான கோலை அடித்தார். அதிர்ச்சியடைந்தது ஆர்ஜென்ரீனா.

அதன்பிறகு, மீதமிருந்த 7 நிமிட நேர ஆட்டத்தில், ஆர்ஜென்ரீனா ஓரிரு முறை ஜேர்மனியின் கோல் பகுதிக்குச் சென்றது. ஆனால், ஜேர்மனியின் தடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டு, அரண் போல் நின்று ஆர்ஜென்ரீனாவின் முயற்சிகளை முறியடித்தனர்,

## ஆர்ஜென்ரீனாவின் கண்ணீர்

பிரேஸிலில் நடைபெற்ற விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, 24 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஜெர்மனி.

### *ஆர்ஜென்ரீனாவின் இதயத்தை நிறுத்திய அந்தக் கணம்*

ஜேர்மனி 4ஆவது உலகக் கிண்ணத்தை வெல்லும் அந்தத் தருணம் எங்கிருந்தோ வந்தது. களமிறங்கியது முதல் ஆர்ஜென்ரீனா தடுப்பாட்ட வீரர்களை சுறுசுறுப்பாக வைத்திருந்த ஜேர்மனி வீரர் ஷுயர்லி 113ஆவது நிமிடத்தில் இடது ஓரம் பந்தை வாங்கி அதிவேகமாக ஆர்ஜென்ரீனா பகுதி நோக்கி இடது புறமாகவே முன்னேறினார். அவரது வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஆர்ஜென்ரீனா வீரர்கள் அவர் பின்னால்தான் வர முடிந்தது. பந்தை எடுத்து இடதுபுறமாகவே கடைசி வரை வந்த ஷுயர்லி மிக அருமையாக பந்தை ஆர்ஜென்ரீனா கோல் கம்பம் அருகே நின்றுகொண்டிருந்த மரியோ கோட்ஸேக்கு பாஸ் செய்தார். மேலே வந்த அந்தப் பந்தை நெஞ்சில் வாங்கி அபாரமாகக் கட்டுப்படுத்தி, பந்து காலுக்கு இறங்கும்போது தரையைத் தொடுவதற்கு முன்பாகவே இடது காலால் வலது மூலையில் கோலுக்குள் அடிக்க, கோல் வலை வெளியே கொஞ்சம் அதிகமாகவே பிதுங்கி, பின் தன் நிலைக்கு வந்தது. அந்த அளவுக்கு சக்தி வாய்ந்த உதை ஆகும் அது.

கோட்ஸே என்பவர் மீது அதிக கவனம் இல்லாததால், அவரை ஆர்ஜென்ரீனா தடுப்பு வீரர்கள் கவனிக்கவில்லை. அவரை அவ்வளவு அபாயகரமானவராக அவர்கள் கருதாமல் இருந்தது ஆர்ஜென்ரீனாவுக்கு உலை வைத்தது.

ஆர்ஜென்ரீனாவின் பேரழகிகளில் சிலர் வாயடைத்துப் போயினர். சிலர் அந்த புகழ்பெற்ற தென்

(19 ஆம் பக்கம் பார்க்க)



### *ஏமாற்றினார் மெஸ்ஸி*

மெஸ்ஸி தனது தலைமையின் கீழ் உலகக் கிண்ணத்தை வெல்வார் என்று ஆவலுடன் எதிர்பார்த்த ஆர்ஜென்ரீனா ரசிகர்களுக்கு, அவரது ஆட்டம் கூட திருப்தியளிப்பதாக இல்லை.

120 நிமிட நேர ஆட்டத்தை, நான்கைந்து முறை அவர் பந்தை எடுத்துச் சென்றார். கடைசியில், ஆட்டம் முடியும் தருவாயில் ஒரு நேரடி உதை கிடைத்தது. அதைக் கோலாக மாற்றி நிச்சயம் சமன் செய்வார் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த நேரத்தில், அவரது உதை கோல் கம்பத்துக்கு மேலே சென்று, ஆர்ஜென்ரீனா ரசிகர்களின் கண்ணீருக்குக் காரணமானது.

ஜேர்மனி அணியின் தற்போதைய வீரர்களில் பெரும்பாலானோர் தங்கள் அணி கடைசியாக (1990) உலகக் கிண்ணத்தை வென்றபோது குழந்தைகளாக இருந்துள்ளனர். மிரோஸ்லவ் குளோஸ் (12 வயது) உள்ளிட்ட ஒரு சிலர் மட்டுமே உலகக் கிண்ணத்தை வென்றபோது ஓரளவுக்கு விவரம் தெரிந்தவர்கள். ஜேர்மனி இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்வதற்கான வெற்றிக் கோலை அடித்த கோட்ஸே அப்போது பிறக்கவே இல்லை.

ஆர்ஜென்ரீனா - ஜேர்மனி அணிகள் இறுதிப் போட்டியில் மோதியது இது மூன்றாவது முறை. இதற்கு முன்னர் 1986, 1990 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டங்களில் இவ்விரு அணிகளும் மோதியுள்ளன. அதில் 1986 இல் ஆர்ஜென்ரீனாவும், 1990 இல் ஜெர்மனியும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

(த)

## ஆர்ஜன்ரீனாவின் கண்ணீர்... (18 ஆம் பக்கத் தொடர்ச்சி)



அமெரிக்க அழுகை நிலைக்கு வந்தனர். இருந்தாலும் பேரழகிகளை அழவைத்த ஜேர்மனி மீது ஜேர்மனி ரசிகர்களே கூட கோபப்பட்டிருக்கலாம். ஆர்ஜென்ரீனா வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர். சற்றும் எதிர்பாரா ஒரு தருணத்தில் எங்கிருந்தோ வந்த கோல் அது.

### இடைவேளைக்கு முன்

ஆட்டம் ஆரம்பித்தவுடன் இரு அணிகளும் விறுவிறுப்பாக ஆடின. உண்மையிலேயே இரு அணிகளும் ஒருவரைக் கண்டு மற்றொருவர் அச்சப்பட்டே விளையாடினர். தாக்குதல், எதிர்த் தாக்குதல் என்றே முதல் 15 நிமிட ஆட்டம் பெரிய ஒரு முடிவுக்காக வெள்ளோட்டம் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் 113ஆவது நிமிடம் வரை ஆட்டம் வெறும் வெள்ளோட்டமாகவே இருக்கும் என்பதை ஒருவரும் அப்போது அறிந்திருக்கவில்லை.

அன்று பிரேஸில் அடைந்த படுதோல்வி ஆர்ஜென்ரீனாவின் மனதில் நிலை கொண்டது போலவே தெரிந்தது. தாக்குதல் தொடுத்தாலும் பந்து ஜேர்மனி வீரர் கால்களுக்குச் சென்று விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வினால் தடுமாறியது ஆர்ஜென்ரீனா.

அப்படிப்பட்ட ஒரு தருணத்தில்தான் 4ஆம் நிமிடத்தில் சபலேட்டா வலது புறம் வேகம் காட்டி பந்தை எடுத்து வர, அது சில கால்களைத் தாண்டி ஹிகுவேய்னிடம் வந்தது. ஒரு நெருக்கமான கோணத்திலிருந்து அவர் கோலை நோக்கி அடித்தார். அது இடது கோல் கம்பத்தை ஒட்டிச் சென்றது. ஆரம்ப கோலாக முடிந்திருக்க வேண்டிய அது விரயமானது.

9ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பந்தைப் பெற்று ஜேர்மனி வீரர் ஹமெல்ஸிற்கு ஆட்டம் காண்பித்தார். ஹமெல்ஸிற்கு அது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. பந்தை மெஸ்ஸி உள்ளே கொண்டு சென்றார். பின்னர் பந்தைச் சற்றே பின்னுக்கு இழுத்து லாவேசியிடம் கொடுத்தார். அதற்குள் ஷ்வெய்ன்ஸ்டெய்கர் பந்தை உதைத்து வெளியே அனுப்பிவிட்டார். மெஸ்ஸி செய்த ஒரு 3 அல்லது 4 முயற்சிகளில் இதுவும் ஒன்று.

### 20ஆவது நிமிடத்தில் மிகப் பெரிய தவறு

ஜேர்மனி வீரர் குரூஸ் ஒரு மிகப் பெரிய தவறு செய்தார். பிரேஸில் இந்தத் தொடர் முழுதும் வாங்கிய கோல்களின்போது செய்த அதேவகைத் தவறுதான் இது. கோல் காப்பாளர் நூயருக்கு கொடுக்கிறேன் என்ற நினைப்பில் நடுவில் ஆர்ஜென்ரீனா வீரர் ஹிகுவெய்ன் இருந்ததைக் கவனிக்கவில்லை. பந்தை ஹிகுவெய்ன் எடுத்துக் கொண்டு சென்றார். அவர் சுதந்திரமாக செயல்பட்டார். அவரைத் தடுக்க ஆளில்லை. ஒரு நேரத்தில் அவரும் கோல் காப்பாளரும் மட்டும்தான் இருந்தனர். பின்னால் ஜேர்மனியின் குரூஸ் நெருக்கடி கொடுக்க அவரை ஒட்டி ஓடி வந்து கொண்டிருந்தார். இன்னும் கொஞ்ச தூரம் சென்று அடித்திருந்தால் அபாரமான கோலாகியிருக்கும். ஆனால் கொஞ்சம் பின்னாலிருந்து இடதுபுறம் கோலுக்கு வெளியே அடித்தார் ஹிகுவெய்ன். அங்கு தூரத்தில் மஸ்சரானோ தலையைக் கையால் பிடித்தபடி ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

### 30ஆவது நிமிடம் ஆர்ஜென்ரீனா ஓப் சைட் கோல்

ஆட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் லாவேசி வலது புறம் சுதந்திரம் பெற்றார். நிறைய இடமும் நேரமும் அவருக்கு அனுமதிக்கப்பட்டது. அவர் பந்தை மிக அழகாக வெட்டி எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார். அங்கு நடுவில் நின்று கொண்டிருந்த ஹிகுவெய்னுக்கு துல்லிய பாஸ் ஒன்றைச் செய்தார். அவர் பக்கவாட்டுப் பாதத்தினால் கோல் வலையின் வலது மூலைக்கு அடித்த கோலாக மாற்றியதாக நினைத்து தனது இடது மார்பை வலது கையால் தொட்டுக் காண்பித்தபடியே ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் இருக்கும் பகுதிக்கு ஓடி வந்த வேகத்தில் ஓப் சைட் என்று நடுவர் கொடியைத் தூக்கியதை அவர் கவனிக்கவில்லை. மறுக்கப்பட்ட கோல் ஆனது அது.

பிறகு 37ஆவது நிமிடத்தில் தோமஸ் முல்லர் இடதுபுறமாக பந்தை சுதந்திரமாக எடுத்துச் சென்று அபாய வீரர் ஷுயர்லியிற்கு அடிக்க அவர் ஆர்ஜென்ரீனா கோல் கம்பத்தின் இடது மேல் மூலைக்கு அடித்தார். ஆனால் ரொமேரோ அபாரமாக பந்தை வெளியே தட்டி விட மூலை உதை வாய்ப்பு ஜேர்மனிக்குக் கிடைத்தது. மூலை உதை ஜேர்மனி அடிக்கும் போது அங்கு ஓஸில் ஓப் சைட்டில் இருந்தார். முடிந்தது கோல் வாய்ப்பு. 40ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மீண்டும் சுதந்திரம் எடுத்துக் கொண்டார். அவர் வலது புறமாக வேகமாகப் பந்தை எடுத்து சென்றார். ஜேர்மனி சற்று கண் அசந்திருக்கும் போல் தெரிந்தது. ஆனால் மெஸ்ஸி அடித்த உதையில் வலுவில்லை அதனை போடெங் எளிதில் பாதியிலேயே முறியடித்தார்.

இடைவேளைக்கு முன் ஆட்டத்தில் குரூஸ் ஒரு உதையை அருகில் இருந்த போஸ்ட் நோக்கி அடிக்க திரும்பி வந்த பந்தை பெனெடிக்ட் ஹோவிடேஸ் தலையால் கோல் நோக்கி அடிக்க பந்து கம்பத்தில் பட்டது. ரொமேரோ பந்தை பிடித்தார். ஆனால் அதற்குள் அங்கே முல்லர் ஓப் சைட் என்றார் நடுவர், விறுவிறுப்பான முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

### இடைவேளைக்குப் பிறகு

47ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் பிக்ளியா சறுக்கியபடியே செய்த பாஸை இடது உள்புறம் வாங்கிய மெஸ்ஸி கோல் அடிக்க அருமையான வாய்ப்பைக் கோட்டைவிட்டார். ஜேர்மனி கோல் காப்பாளர் நூயரைத் தாண்டி அடிக்க வேண்டியதுதான் மிச்சம், ஆனால் இலக்கை விட்டுத் தள்ளி அடித்தார் மெஸ்ஸி.

59ஆவது நிமிடத்தில் இதேபோல் ஜேர்மனி அபாய வீரர் தோமஸ் முல்லர் வலது புறம் நிறைய இடம் கிடைக்க பந்தை எடுத்து வந்து குளோஸிற்கு பாஸ் செய்ய கோலுக்கு 6 அடியிலிருந்து அவர் அடிக்க அது மிகவும் பலவீனமான உதையாக அமைய கோல் வாய்ப்பு வீண்.

இப்படியே மாறி மாறி இரு அணிகளும் வந்து வந்து கோல் அடிக்க முடியாமல் திரும்பினர். இடையில் ஆர்ஜென்ரீனா வீரர் அகுரேயிற்கு மஞ்சள் அட்டைக் காண்பிக்கப்பட்டது மற்றபடி ஒன்றும்பெரிதாகநடக்கவில்லை. ஆனால், ஒரு கட்டத்தில் ஜேர்மனி கோல் காப்பாளர் நூயருக்கு பவுல் கொடுத்திருக்க வேண்டும். உயரத்தில் வந்த பந்தை ஹிகுவேய்னும் இவரும் எழும்பி எதிர்கொள்ள முயன்ற போது பந்தை கையால் தள்ளிய கோல்காப்பாளர் நூயர் ஹிகுவெய்னை காலால் உதைத்தார். இது நிச்சயம் மஞ்சள் அட்டை காண்பிக்கக் கூடிய ஒரு பவுல். ஆனால் நடுவர் கண்டு கொள்ளவில்லை.

முழு நேர ஆட்டமும் ஒன்றும் பயனளிக்காத நிலையில், ஆட்டம் கூடுதல் நேரத்திற்குச் சென்றது. கூடுதல் நேரத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் ரோஜோ ஒரு அருமையான பாஸை பலாசியோவுக்குச் செய்ய ஆபத்தை உணர்ந்த நூயர் முன்னே வர பலாசியோவுக்கு அருமையான வாய்ப்பு ஆனால் இலக்கு தவறிய உதையானது அது.

அதன் பிறகு கூடுதல் நேரத்தின் 2ஆவது பாதியில், 113ஆவது நிமிடத்தில்தான் ஷுயலி துல்லியமாகப் பாஸை கோட்சேயுக்கு அடிக்க, அவர் அருமையாக அதனை நெஞ்சால் தடுத்து பிறகு கீழே இறங்கிய பந்தை இடது காலால் கோலுக்குள் சக்தியுடன் அடித்தார். ஆர்ஜென்ரீனாவின் இருதயம் நின்றது. கடைசி தருணத்தில் அர்ஜென்ரீனாவுக்கு நேரடி உதை ஒன்று கிடைக்க, மெஸ்ஸி அதனை அபூர்வமாகக் கோலாக மாற்றுவார் என்று பார்க்க பந்து கோல் கம்பத்துக்கு வெகு மேலே சென்றது.

அவ்வளவுதான்! விசில் ஊதப்பட்டது. ஜேர்மனி கொண்டாட்டம் தொடங்கியது. ஆர்ஜென்ரீனாவின் பேரழகிகளின் கண்களில் கண்ணீர் வரத் தொடங்கியது. கோல் அடித்த கோட்சேயையும் அதற்குக் காரணமான ஷுயர்லியையும் ஜேர்மனி வீரர்கள் மொய்த்தனர்.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் கடைசி வரை உத்வேகத்தைக் கைவிடாமல் ஆடியதற்கான பரிசே ஜேர்மனிக்கு இந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டி வெற்றி. (த)

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 85 ஆண்டு விசாகம் நட்சத்திரம் 33 கிரகபாவம் செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. மரக்கறி போசனம். தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.

077 236 7508 (49985) (10)

**விற்பனைக்கு**

NP PG-xxxx இலக்கமுடைய MITSUBISHI/ DOUBLE CAB விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

[illegible]களுக்கு:

077 012 9597 (49989) (10)

**MANOJ Express Services**

எமது நிறுவனத்துக்கு கீழ்க்காணும் வேலைகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

வயது : 18 - 30 வரை

1. விற்பனையாளர்
2. சந்தைப்படுத்தல் முகாமையாளர்

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதரம் சித் ஆங்கிலம் எழுத தெரிந்திரு[illegible] வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது.

நேர்முகத்தேர்வு 15.07.2014/ 16.07.2014 10 a.m - 3 p.m

80/30, JMC Shopping Complex
Kasthuriyar Road, Jaffna.
T.P: 077 229 3206 / 077 751 7019 (49939)(10)

## மரண அறிவித்தல்



### சின்னப்பா தெய்வதவபாலன்

(இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்-யாழ்ப்பாணம்)

அராலியைப் பிறப்பிடமாகவும் (செட்டியார் மடம்), துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னப்பா தெய்வதவபாலன் (14.07.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா-இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகசபை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் திலீபன் (ஆசிரியர்) தெய்வசக்தி (ஆசிரியர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), சுதர்சனா, யாதவன் (பிரான்ஸ்) யமுனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலசிங்கம் (J.T.I. நிர்வாகி) வில்வநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை), சம்சா, மதிவண்ணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், தனுசன் (மாணவன்- யா/இந்துக் கல்லூரி), நிதர்சன் (மாணவன்- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), தரன்யா (மாணவி-யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனார்த்தனி, தனுகரன், உமாகரன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), அபர்ணா, அபிமன்யு (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் கோண்டாவில் வடக்கு, அன்னங்கை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு. (49987)(10) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சிவக்கொழுந்து சிவராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஊழியர்- ஆனையிரவு உப்புக் கூட்டுத்தாபனம், தற்போது ஆளுநர் அலுவலக ஊழியருமாகிய சிவக்கொழுந்து சிவராசா நேற்று (14.07.2014) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து-பெருமாள் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தியாகராசா-நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கராணியின் அன்புக் கணவரும், சுசிலா, கலா, றஞ்சி, சிறிதரன் (வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற லிங்கம் மற்றும் ஆனந்தன், கண்ணன், கோமதி, அம்பி, கிளி, றேணுகா ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பாக்கியலட்சுமி, ரத்தினசிங்கம், மற்றும் குமாரவேலு, செல்லமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசநாயகம், நவரத்தினராசா, புஸ்பமலர், திலகம், சறோ, பரமசிவம், காலஞ்சென்ற கமலாம்பிகை, சபாபதி மற்றும் கதிரேசர், தவமணி ஆகியோரின் மைத்துனரும்,யசோ, ராசன் ஆகியோரின் சிறிய தந்தையும், சத்தியதாஸ், சுஜிதரன், சுஜிகரன், மீருஜன், வினித்தா, சத்தியா, சோபனா, சாரங்கா, சந்திரவதனி, ரட்ணாயக்கா, ரிஷாந்தினி, ரதன், மயூரன், துயிவன், பவிப்பிரியா, சர்மிளா, தர்சிகா, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும், சந்துனி, சுதுபோ[illegible] ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று ([illegible]5.07.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் இல.172, மாம்பழஞ்சந்தி அரியாலையில் உ[illegible]ள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவின[illegible]கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49988)(10) தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் இளையவி சுப்பிரமணியம்

எமது கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி சுமதி சந்திரகுமார் அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.

(சி/15000) (10)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### வல்லிபுரம் குலசேகரம்

மண்ணில் 23 . 06 . 1936



விண்ணில் 01 . 06 . 2014

நாள்கள் நகர்ந்து நாற்பத்தைந்து சென்றதுவே
நாளை வருவீர்களென நாளை எண்ணுகின்றோம்
நல்வாழ்வு எமக்களித்து நானிலத்தில் வாழவைத்து
நாங்கள் இங்கு கதறியழ நாதனடி தேடி சென்றீரோ

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியதுடன் இன்றுவரை எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோர் மற்றும் தொலைபேசிகளிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (15.07.2014) செவ்வாய்க் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உசன், மிருசுவில். (J/15402)(10)

மனைவி - கமலாதேவி
மகள் - வினோஜா


# ஆளுநரை நியமிக்கும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கே உண்டு

## அது குறித்து எவரும் கேள்வியெழுப்ப முடியாது என்கிறார் பஸில்

கொழும்பு, ஜூலை 15

வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல நாட்டின் எந்த மாகாணத்துக்கும் ஆளுநர்களை நியமிப்பதற்கு அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதியே. வடக்கு மாகாணம் நாட்டிலிருந்து பிரிபட்ட ஒன்றல்ல, இலங்கையின் ஒரு மாகாணமே வடக்கும். அந்த வகையில் வடமாகாண சபைக்கான பிரதிநிதியாக எவரையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இது தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு சட்ட உரிமையோ அதிகாரமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை.

-இவ்வாறு கூறியிருக்கிறார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.



வடக்கின் ஆளுநராக மீண்டும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நியமிக்கப்பட்டுள்ளமை அதற்கு கூட்டமைப்பு மற்றும் அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே பஸில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பஸில் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாண ஆளுநர் என்பவர் மத்திய அரசினால் நேரடியாக நியமிக்கப்படுகின்றவர். கூட்டமைப்புக்குத் தேவையான ஒருவரை ஆளுநராக ஒருபோதும் நியமிக்க முடியாது. ஆளுநர் என்பவர் மத்திய அரசுக்கு விசுவாசமாக செயற்படக்கூடிய அரசின் பிரதிநிதியாக இருக்கவேண்டும். இந்தியா மட்டுமன்றி முழு உலகிலும் இதுதான் நடைமுறையாகும்.

பல மாநிலங்கள் உள்ள இந்தியாவில்கூட இவ்வாறு மத்திய அரசுக்கு வேண்டப்பட்டவர்களே ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

எமக்குத் தேவையானவர்களையே நாங்கள் ஆளுநராக நியமிப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அவர்களுக்கு வடமாகாண சபை நிர்வாகம் கிடைத்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர். வடமாகாண சபையின் அமைச்சரவை உள்ளது. முதலமைச்சர் பதவி ஆகியவை உள்ளன.

**ஜனாதிபதிக்கு விசுவாசமானவரே ஆளுநர்**

இந்த நிலையில் ஆளுநர் பதவியிலும் கூட்டமைப்புக்குத் தேவையானவர்களை நியமிக்க முடியாது. ஜனாதிபதிக்கு விசுவாசமான, வடக்குப் பற்றித் தெரிந்த தெற்கைச் சேர்ந்த ஒருவரே ஆளுநராக நியமிக்கப்படுவார். அதனை யாராலும் எதிர்க்க முடியாது.

கூட்டமைப்பு எதிர்க்கின்றது என்பதற்காக அவர்கள் கூறுகின்றவரை ஆளுநராக நியமிக்க முடியாது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஜனாதிபதி தனக்குத் தேவையானவரையே ஆளுநராகநியமித்துள்ளார். அதுதான் சம்பிரதாயமாக உள்ளது. அதனை மாற்ற முடியாது -என்றார். (ஒ)

## தென்மாகாண முன்னாள் செயலாளரால் ஓய்வூதியத்தில் 62 லட்சம் ரூபா மோசடி

கொழும்பு, ஜூலை 15

தென்மாகாண சபையின் திணைக்களம் ஒன்றின் முன்னாள் செயலாளர் ஒருவர் 23 வருடங்களாக நடத்தி வந்துள்ள 62 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட ஓய்வூதியச் சம்பள மோசடி ஒன்றை ஓய்வூதியத் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

மாகாண சபையின் கணக்காய்வாளராகவும் பணியாற்றியுள்ள இந்தச் செயலாளர் போலியான கடிதக் கோவையைத் தயாரித்து ஒரே பெயரில் 1992 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு ஓய்வூதியச் சம்பளங்களைப் பெற்று வந்திருப்பதாக திணைக்களத்தின் தரவுத் தொகுதி பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டபோது கண்டறியப்பட்டுள்ளது.

இவர் இந்தப் போலியான கடிதக் கோவையின் மூலமாக ஓய்வூதியச் சம்பளப் பணிக்கொடையையும் கூடப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த (ஜூலை) மாதத்துக்கான ஓய்வூதியச் சம்பளத்தை தயாரித்தபோதே இந்த ஓய்வூதியச் சம்பள மோசடி வெளிப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பண்டாரகம மற்றும் பொல்ஹாவெல பிரதேச செயலகங்களில் இருந்தே அவர் இவ்விதம் இரண்டு ஓய்வூதியச் சம்பளங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக ஓய்வூதியத் திணைக்களம் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளதை அடுத்து விசாரணைகள் இரகசியப் பொலிஸாருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-22)

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Swiss Agency for Development and Cooperation SDC**
Swiss Cooperation Office Sri Lanka

**JOB ANNOUNCEMENT**

The Swiss Agency for Development and Cooperation (SDC) is looking for a qualified Technical Officer for our Reconstruction Programme in Jaffna and Killinochchi Districts.

**Position Title:** Technical Officer
**Profile:** Degree in NCT Civil Engineering
**Purpose:** Assist the Project Engineer to supervise and monitor the quality of the construction activities and monitor the progress of the reconstruction and rehabilitation of the owner driven housing programme according to program's goals and objectives in Jaffna and Kilinochchi Districts. Advise, support and mobilize beneficiaries in their effort of reconstruction
**Experience:** Experience in planning and implementation, supervision of community (housing development) projects
**Contract Period:** Yearly renewable, max. up to 30 Sept. 2015, including 3 months probation period.
**Duty Station(s):** Kilinochchi and Jaffna District

Qualified applicants are welcome to send applications (CV and motivation letter) to **jaffna@sdc.net** until **21st July 2014** via e-mail. Only short listed applicants will be contacted.

(C/14999)(10.6.3)

# நாட்டுக்கு எதிராகச் செயற்படுகிறது அரசு

## ராவணா பலய அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

அரசு நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாக ராவணா பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேபானே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்த காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆகியோரை நாட்டுக்கு வருகை தருமாறு அரசே அழைத்திருந்தது.

தற்போது தென் ஆபிரிக்க துணை ஜனாதிபதியை இலங்கைக்கு வருமாறு அழைத்திருந்தது. இவ்வாறான அழைப்புக்களின் மூலம் நாட்டுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாடாளுமன்றில் ஒன்றாக பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றால், இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தைகளையும் ஒன்றாக நடத்த முடிந்திருக்க வேண்டும். வடக்குக்கும் தெற்குக்கும் தனித் தனியான இராஜதந்திர சந்திப்புக்கள் அவசியமில்லை. நாட்டின் பிரச்சினைகளில் தலையீடு செய்யாது இலங்கைக்கு எவரும் வருவதில் தவறில்லை.

நாட்டில் முஸ்லிம் கடும்போக்குவாதம் தலைதூக்கியுள்ளது. முஸ்லிம் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும்போக்குவாதத்தின் பின்னணியில் செயற்பட்டு வருகின்றனர். இதனை நாம் பொறுப்புடன் கூறுகின்றோம். நாட்டில் சட்டம் ஒழுங்கு உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் கடும்போக்குவாதம் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை.

ஞானசார தேரர், மதுமாதவ அரவிந்த ஆகியோரிடம் மட்டும் விசாரணை நடத்துவது போதுமானதல்ல. அசாத் சாலி, முஜீபுர் ரஹ்மான் உள்ளிட்டவர்களிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும். தற்போதைய பௌத்த சாசன அமைச்சர், பௌத்த மதத்துக்காக எதனையும் செய்யவில்லை. அரச பொம்மலாட்டக் குழுவின் தலைவராகவே பௌத்த சாசன அமைச்சர் பிரதமர் டி.எம். ஜயரட்ன செயற்படுகின்றார் என்றும் சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ஒ)

**சேவை நலன் பாராட்டு**



எமது வைத்தியசாலையில் கடந்த 36 வருட காலமாகத் தாதிய உத்தியோகத்தராக கடமை புரிந்து 07.07.2014 இல் ஓய்வுபெற்றுச் சென்ற எமது சங்க அங்கத்தவர்
திருமதி
**யோகேஸ்வரி தங்கராஜா**
அவர்கள் மேலும் நீண்ட காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulation

தாதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை மணிவிழாக் காணும் எமது ஆசிரியையை வாழ்த்துகின்றோம்.
திருமதி **ஜெயசிந்தா ஞானம் சகாயநாதன்**
(ஆங்கில ஆசிரியை, SLTS-I)

ஆசிரிய சேவை விவரம்
1) கொழும்பு புனித அன்னம்மாள் ம.வி
2) யா/இந்து மகளிர் கல்லூரி
3) மு/மாத்தளன் றோ.க
4) யா/உடுத்துறை ம.வி
5) மு/மாத்தளன் றோ.க
6) மன்/நானாட்டான் ம.வி
7) யா/சென்ஜேம்ஸ் ம.வி

Congratulations
Best Wishes

ஆசிரியர் கழகம்
யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
குருநகர், யாழ்ப்பாணம்.
(49932)(7.5.3)

முல்லை வலயத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளராய் நியமனம் பெற்ற
திருமதி **உதயராணி முனீஸ்வரன்**
அவர்களை



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

முல்லை மண்ணில் பிறந்து நல்லபணி செய்து
வல்ல எம் வலயத்திற்கு பணிப்பாளராய் வந்த
சொல்ல வல்ல அம்மணியே! சோராத கல்விமானே!
எல்லாவளமும் கிட்டும் என்று வாழ்த்துகின்றோம்.

இடம்பெயர முன்பும் இடம்பெயர்ந்த பின்பும்
நடையாக நடந்துநம் கல்வியை வளர்த்தீர்கள்
முடமான வேளையிலும் முன்னுதாரணமாய் நடந்து நம்
இடத்தில் கல்விவளர இதயத்துடன் உழைத்தீர்கள்

எல்லாப் பயனும் கூட எம் வற்றாப்பளையாளின் அருளுடன்
நல்லதோர் காலத்தில் நம் பணிமனையினை ஏற்கின்றீர்
கல்விப்புலம் வளரும் கல்வியில் சாதனைகள் வரலாறாகும்
எல்லாச் சிறப்பும் கிடைக்குமென்று எம் பணிமனை வாழ்த்துகின்றது.

Congratulations
Best Wishes

கோட்டக் கல்விப் பணிப்பாளர், பணியாளர்கள்.
கோட்டக் கல்விப் பணிமனை,
கரைதுறைப்பற்று, முல்லைத்தீவு.
(49931)(7.6.3)

**ஒத்துமாறல்**

யாழ்ப்பாணத்தில் தேசிய பாடசாலையில் இருந்து கொழும்பு தேசிய பாடசாலைக்கு ஒத்துமாற (Mutual Transfer) விரும்பும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 078 386 9918 (49934)(5.6.3)

**பசு மாடுகள் விற்பனைக்கு**

நல்ல இன பசு மாடுகள் கன்றுகளுடனும் கன்றுகள் இல்லாமலும் விற்பனைக்கு உள்ளன.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில்
தொடர்பு : 078 880 3483 (சி/14995)(7.6.3)

**மலிவு விற்பனை**
**TVகள், குளிர்சாதனப் பெட்டிகள்**

மிக மலிவு விலையில்Sony, பனசோனிக் TVகள் 21" 15000/=, 29" - 16000/=, இரட்டைக்கதவு - குளிர்சாதனப் பெட்டிகள் - 23000/= முதல், DVD - 2950/=, DTS அம்பிளிபயர், பைனியர் செற் அப்
தொடர்பு: 021 568 9344/077 044 0570
சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
(49821)(12.5.6) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

**A/L வரலாறு 2014**
**மாபெரும் கருத்தரங்கு**

இடம்: D.M.I யாழ்.நகர்
காலம்: 19.07.2014 சனிக்கிழமை
20.07.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.00 மணி முதல்
மாலை 4.00 வரை
விரிவுரையாளர்கள்: (49976)(4.6.3)
M.பத்மன் M.A (History) / M.சுஜீகரன் B.A (SL)
வெளி மாணவர்களுக்கான கட்டணம் ரூபா 550/=

**இடமாற்றத்தை முன்னிட்டு.....**

யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393
(49911)(10.6.3)

# வீட்டு பணியாளர்களாக எவரும் மத்திய கிழக்குக்குப் போகக்கூடாது

## அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 15
"இந்தப் பிராந்தியத்திலிருந்து வறுமைக்குட்பட்ட எந்தப்பெண்களும் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்குக் குப் போகக் கூடாது என்பதே இலக்கு. அவ்வாறு வேறேதும் தொழில் வாய்ப்புப் பெற்றுப் போவதாக இருந்தால் அது பயிற்றப்பட்ட உயர் தொழில் ஆற்றல்களோடு கூடிய தொழில் வாய்ப்புக்களுக்காகவே அவர்களை அனுப்ப வேண்டும்."- இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி சுற்றுலாத்துறை அமைச்சர் நஸீர் அஹமட்.

ஏறாவூர் சிறு கைத்தொழில் பேட்டையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"கல்வியலாளர்களாக அல்லது மருத்துவத் தாதிகளாகவே இனி வரும் காலங்களில் மத்திய கிழக்கு செல்வதற்கு நாம் இங்குள்ளவர்களை உருவாக்க வேண்டும். வெறுமனே அடுப்பங்கரை வேலை செய்யும் அடிமைகளாக அரபு தேசங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. இன அடிப்படையில், முஸ்லிம்கள் என்ற வகையில் கடந்த காலப் பயங்கரவாதத்தின் இலக்காக இந்த ஏறாவூர் இருந்தது.


தொழிலுக்குச் செல்ல முடியாத அகதி முகாம் வாழ்க்கையாக நாள்கள் நகர்ந்தன. அதனாலேயே பல பெண்கள் இங்கிருந்து தமது வாழ்வாதாரத்தைத் தேடி வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்குக்குப் புறப்பட்டார்கள்.

இனிமேல் இந்த நாட்டில் இந்த இரண்டு சூழ்நிலைகளும் உருவாகக் கூடாது.

எங்களது கடமை பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் தமிழ் முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடில்லாமல் அவர்களை பாதிப்புக்களிலிருந்து மீட்டெடுப்பதே யாகும்.

எதிர்காலத்தில் இந்த ஊரை ஒரு நவீன தொழிலுற்பத்திப் பேட்டையாக மாற்றுவதே நோக்கமாகும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

> **"கல்வியியலாளர்களாக அல்லது மருத்துவத் தாதிகளாகவே இனி வரும் காலங்களில் மத் திய கிழக்கு செல்வதற்கு நாம் இங்குள்ள வர்களை உருவாக்க வேண்டும்.**



# செங்கலடி பிரதேசத்தில் வர்த்தகர் கடையடைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 15
செங்கலடி பிரதேச வர்த்தகர்கள் நேற்றுக் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் பிரதேச செயலாளர் உ.உதய சிறிதரின் இடமாற்றத்தை கண்டித்தும், அதனை தடுத்து நிறுத்தக் கோரியுமே மேற்படி கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றறை வருடங்களாக செங்கலடி ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் பிரதேச செயலாளர் ஏறாவூர்பற்று பிரதேச செயலகம் உள்ளிட்ட பல இடங்களை புனரமைப்பு செய்துள்ளதுடன், ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே முதலிடம் பெறக்கூடிய பிரதேச செயலகமாக மாற்றியுள்ளார்.

அதனால் இவரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரியே வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ற)


## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கணபதி செல்வராசா

(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர், காங்கேசன்துறை)



பிறப்பு
19.05.1936

இறப்பு
15.07.1991

கருணையின் கடலைக் காணோம்
கனவிலும் கனதி கொண்டோம்
காலத்தின் சக்கரத்தில் அகவைகள்
இருபத்து மூன்று உருண்டோடினாலும்
விழிகளில் உணர்வுபொங்க நாங்கள்
நினைந்துருகும் தெய்வம் நீங்கள்

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

51, ராஜஸ்தான், காளி கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கோண்டாவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49937)(10.6)


# ஸாஹிரா தேசிய கல்லூரியில் அடிக்கல் நடும் நிகழ்வு

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் 25 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மஹிந்தோதய விஞ்ஞான உயர்தர தொழில்நுட்ப பீடத்திற்கான மூன்று மாடி கட்டிடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை கல்லூரி வளா கத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் பீ.எம்.எம். பதுறுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கல்முனைத் தொகுதி அபிவிருத்திக்குழு தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும், கல்லூரியின் பழைய மாணவர்களுமான ஏ.எம்.ஜெமீல், சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (ற)


## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# பணிநிலை வெற்றிடம்

**களஞ்சிய முகாமையாளர் (கிளை முகாமையாளர்)**

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1) சம்பள அளவுத்திட்டம் :
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 208/13 ஆவது சம்பளக் குறியீடு)

9950 - 11700
85 × 10 - 90 × 10

இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

2)வயது 18 தொடக்கம் 45 வரை.
(சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)

3)பிணை
தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப் பிணை என்பவற்றை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் :

அ) கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம்/க.பொ.த. (சாதாரண தரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம்/சிங்களம்/தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும், தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 2014.07.28

4)விண்ணப்பிக்கும் முறை
மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்திப் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "களஞ்சிய முகாமையாளர் 208/13 பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு "தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு 2014.07.28ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

மு.ஜெ.சுஜீந்திரன்
(சி/14998)(7.6.3) தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)



## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

### பதவி வெற்றிடம்

### பதவி -எழுதுநர் 302/13

**மேற்படி பணிநிலைக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. சம்பள அளவுத்திட்டம்: (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 302/13 ஆவது சம்பளக்குறியீடு)

9950-11700
85×10-90×10

காலத்திற்குக் காலம் சுற்று நிருபங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

02. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)

3. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவியலாளர்/ எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

கூட்டுறவுச் சங்க ஊழியர் 15ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் 4வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. க.பொ.த(சாதாரணம்) கணிதம்/ தமிழ்/ வர்த்தகம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன்,6 பாடங்களில் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுது வினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

குறிப்பு: கணினி அறிவு மேலதிக தமைமையாகக் கருதப்படும்.


விண்ணப்ப முடிவு திகதி : 28.07.2014

**விண்ணப்பிக்கும் முறை:**
மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 ஐ செலுத்திப் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்டு, சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'எழுதுநர்,302/13 பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு 'தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127,கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பா ணம்' என்னும் முகவரிக்கு 28.07.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப தாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத் தினூடாகவே விண்ணப்பிக் கப்படல் வேண்டும்.

மு.ஜெ.சுஜீந்திரன்,
தலைவர்,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வு-து)

(சி/14997)(5-6)

## தொடர்ச்சிகள்



### திட்டமிட்டவாறு

அதனாலேயே போராட்டங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இம்முறை தென்னிலங்கையில் இருந்துவருபவர்களும்போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். எவ்வாறான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் நாம் போராட்டத்தை நடத்துவோம்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறித்த பேரணி இன்று முற்பகல் 10 மணிக்கு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மாச்ஸிச லெனினிச புதிய ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஏற்பாடாகியிருந்த இந்தப் பேரணி யாழ். பஸ் நிலையத்தில் ஆரம்பித்து, யாழ்.மாவட்ட செயலகத்தில் மனுக் கையளிப்பதுடன் நிறைவுறும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அனைவரையும் இந்தப் பேரணியில் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்தப் பேரணிக்கு எதிராக யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அதற்கு யாழ். நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. (ந-14)

### காணி

இரு காணித் துண்டுகளை, கடற்படையினர் தமது முகாம் அமைப்பதற்குத் தேவை எனக் கோரி காணி சுவீகரிப்பு அறிவித்தலை விடுத்துள்ளனர். அந்த நடவடிக்கைக்கு எதிராக இந்தக் காணி உரிமையாளர்கள் சார்பில், எதிர்வரும் 18 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

கீரிமலை, நகுலேஸ்வரத்தில் காணி அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று அங்கு மக்கள் கூடியிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா மற்றும் ஈ.சரவணபவன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர். அதன் போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ந-5)

### வடக்குக்கு

னிலங்கை அரசுகள் தமிழ் மக்கள் மீது கெடுபிடிகளை கட்டவிழ்த்து விட்டுள்ளன. இந்த நிலைமையே இப்போதும் தொடர்கிறது. இராணுவ அதி காரியான வடக்கு ஆளுநர் வட பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறார். அவரை மாற்ற வேண்டும் என்பதற்குப் பதிலாக வடக்குப் பகுதிக்கு இப்படியொரு ஆளுநர் தேவைதானா என்று நாம் சிந்திக்க வேண்டும் - என்றார். (ஐ-14)

### மீண்டும்

களை முன்னெடுத்துள்ளீர் கள். அதற்காக எமது மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின் றேன்.

கல்வி, விளையாட்டு, சுகாதா ரம் உள்ளிட்ட துறைகளின்முன்னேற்றங்களுக்கு தாங்கள் ஆற்றிவந்த பணிகள் மகத் தானவை. எனவே, எதிர்காலத்திலும் மஹிந்த சிந்தனைக்கு அமைய அரசின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் தயாராக இருக்கின்றேன். அதேவேளை, உங்கள் சேவை மூலம் வட மாகாணம் சகல துறைகளிலும் மேலும் முன் னேற்றமடைய வேண்டும் என நான் எதிர் பார்க்கின்றேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் வாழ்த்தினார் என்றும் தெரி விக்கப் பட்டது.

இதேவேளை ஆளுங்கட்சியின் மற்றொரு அமைச்சரான ரவூப் ஹக்கீம், இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநரை வடக்கில் பதவி நீடிப்புச் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

### அபிவிருத்தி

தெரிவித்தனர்.

நாட்டில் அரசு, காலத்திற்கு காலம் வேலையின்மையின் அளவைக் குறைக்கும் நோக்கில் பல்வேறு வேலை வாய்ப்புகளை வழங்கி வந்த போதும் அவற்றுக்கு உரிய முறையில் பதவி உயர்வு மற்றும் சேவைப் பிரமாண குறிப் புகளை வெளியிடாமையால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்த விடயங்கள் தொடர்பில் பொருத்தமான முடிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே அமைப்பை உருவாக்குகின்றோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சங்கத்தை உருவாக்குவதற்கான பொதுச் சபைக் கூட்டத்தை எதிர்வரும் 29ஆம் திகதி யாழ். மாவட்ட செயல கத்தில் நடத்த தாம் முடிவு செய்துள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஐ-14)

### மக்களின்

களை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத் தினர் சென்ற போது, பொது மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதனால் அன்று அந்தப் பணிகள் கைவிடப்பட்டன. இந்த நிலையில் நேற்று மீளவும் நில அளவை அதிகாரிகள் அங்கு வரவுள்ளனர் என்று தகவல் கள் வெளியான நிலையில் காணி உரிமையாளர்கள் கீரிமலை கடற்படை சோதனைச் சாவடியில் கூடினர். அத்துடன் மக்கள் பிரதிநிதிகளும் அங்கு சென்று கடற்படையினருடன் கலந்துரையாடினர். எனினும் அந்த வழியாக நில அளவை அதிகாரிகள் எவரும் வரவில்லை. ஆனால், காங்கேசன்துறை பிரதான வீதியூடாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பொலிஸ் பாதுகாப்புடன் நிலஅளவைத் திணைக்களத்தினர் அழைத்துச் செல்லப்பட்டு அளவீட்டு நடவடிக்கைகளைமுன்னெடுத்தனர் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. (ஐ-5)

### உள்ளூராட்சி

இணைந்து வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு இந்தக் கலந்துரையாடலை நடத்தவுள்ளன. (ஐ-5

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் ஆறு அறைகளுக்கு மேற்பட்ட சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0779527575

E-mail:susi@yours.com

## மரண அறிவித்தல்

### சின்னப்பு மாணிக்கம் (சின்னத்தம்பி)



சரசாலையைப் பிறப்பிடமாகவும், கல்வயலை நிரந்தர வசிப்பிடமாகவும் இருபாலை வீதி, கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு மாணிக்கம் நேற்று முன்தினம் (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-கதிராசி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற மாங்கத்தின் அன்புக் கணவரும் தம்பிமுத்துவின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவனடி, சின்னத்தங்கம், ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீதரன் (இணைப்பாளர் பனை அபிவிருத்திச் சபை, புத்தளம்), ஸ்ரீரங்கன் (ஒஸ்ரியா), ஸ்ரீகாந்தன் (வடிசாலை, தென்மராட்சி கொத்தணி), ஸ்ரீமதி, ஸ்ரீஈஸ்வரன் (சாரதி, கிளிநொச்சி சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூமணி (கமலா), பொன்னுத்துரை ஆகியோரின் சிறிய தந்தையும் துரைராசா, சந்திரகலா, செல்வதி, லெனடியா (ஒஸ்ரியா), லலிதாதேவி, திலகராசா, வசந்தா (ஆசிரியர், யாழ்.புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுரா, மதுரா, மீரா, விநோத், வினோஜா, விதுனா, கான்ஸ், கஸ்றோ, வாசுகி, கீர்த்தனா ஜெயகீர்த்தனன், கீர்த்திகா, கீர்த்தீபன், திலக்ஷன், திலக்ஷனா, திலக்ஷி, விதுஷன், லேனாநானா தாயோலியான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.07.2014) திங்கட்கிழமை இருபாலை வீதி, கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(0212053816)

*இருபாலை வீதி,*
*கோண்டாவில்.*
(49995)

## தவறிவிட்டது

காரைநகருக்கும் காக்கைதீவுக்கும் இடை யில் I Phone ஒன்று தவறிவிட்டது. கண்ட வர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077 6298478

## வாகனம் விற்பனைக்கு

Lg-XXXX இலக்கமுடைய TATA பட்டா வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 3914555 ,0777 245485

## யாழ்ப்பாணம் — வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் வைரவர் சாந்தி உற்சவம்

இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு விஷேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று வைரவப் பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வரும் திருக்காட்சி இடம்பெறும்.

**மதியம் 12 மணிக்கு அன்னதானம் வழங்கல்**

**மாலை 7 மணிக்கு விஷேட மேளக் கச்சேரி**

- நல்லூர் உதயசங்கர் குழுவினர்
  அதனைத் தொடர்ந்து
- ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினருடன் தென்னிந்திய மன்னார் குடி கலியாண சுந்தரம் குழுவினருடைய விஷேட மேளக் கச்சேரி நடை பெறும்.

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் தொண்டர் சபை

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் குருலிங்கம்

*(ஓய்வுபெற்ற நடத்துநர் இ.போ.ச.)*

பண்டத்தரிப்பு சாந்தையைப் பிறப்பிடமாகவும் பனிப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குருலிங்கம் நேற்று (14.07.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கற்பகம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பானுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும்,ஜெகதீஸ்வரன் (உத்தியோகத்தர் மக்கள் வங்கி, கன்னாதிட்டி), ஆறுமுகசாமி (பனிப்புலம்),ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெயரட்ணம் (ஹொலண்ட்), தேவராசா (ஜேர்மனி), நாகேஸ்வரி (இத்தாலி) , பாலசுப் பிரமணியம் (கனடா), உதயகுமார் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், இரா சையா தேகம்மா,ஆறுமுகம் இராசையா, தம்பித்துரை, காலஞ்சென்ற இராசையா தங்க மலை, செல்லத்துரை இராசமணி, தெய்வேந்திரன்,அழகேந்திரன்,திருநாவுக்கரசு ஆகி யோரின் சகோதரனும்,சுப்பிரமணியம், மகேந்திரனின் மைத்துனரும்,கமலேஸ்வரி, சாரதா, விக்கினராசா, நாகரஞ்சிதமலர், சுனிதா,வேல்முருகன், வதனா,சுகந்தினி ஆகி யோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில் துறை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை, பண்டத்தரிப்பு — தகவல்:கேதீஸ்வரன்

## மரண அறிவித்தல்

### இளையவி சுப்பிரமணியம்



கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையவி சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், தவமணி தேவியின் அன்புக் கணவரும், சுமதி, ஜெயந்தி ஆகி யோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமார், அருணோதயன் ஆகியோரின் மாமனாரும், சங்க வியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.1211 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
சுமதி (மகள்).

## பொது இடங்களில் வெற்றிலை எச்சில் உமிழத் தடை

கொழும்பு, ஜூலை 15
பொது இடங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் மிக்க பகுதிகளில் வெற்றிலை எச்சிலை உமிழ்ந்து சூழலை மாசுப்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்தார்.
இனிவரும் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுப்படுபவர்களுக்கு எதிராக கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (வ)



உலக சனத்தொகை தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்த வைபவம் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் ஜயிக் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இளைஞர் சமூகத்துக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் பெறுபேறுகளை பெறுதல் என்ற தலைப்பிலான நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த நூலின் முதற்பிரதியை இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்கு ஜாதி சான்றிதழ்

சென்னை, ஜூலை.15
நீண்ட போராட்டத்தின் பின்னர், இந்தியாவின் புத்தூர் மற்றும் சுல்லியாவில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளுக்கு ஜாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பிரதேசங்களுக்கு பொறுப்பான தாசில்தார்களின் ஊடாக இந்தச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில், ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
1970களில் இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா

**பிரதேசங்களுக்கு பொறுப்பான தாசில் தார்களின் ஊடாக இந்தச் சான்றிதழ்களைபெற்றுக் கொள்ள முடியும்**

சென்ற 926 குடும்பங்களுக்கு இவ்வாறு ஜாதிச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளதாகத் தெரிகிறது.
இந்தியப் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்க முடியாது என 1994 ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது.
இந்தியாவில் ஜாதிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி பல்வேறு அரச நலன்புரித் திட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேயிலைத் தூளுக்குள் தங்கம் கடத்திய இலங்கையர்கள் கைது



சென்னை, ஜூலை 15
தேயிலைத் தூளில் கலந்து நூதனமுறையில் தங்கம் கடத்திய இரு இலங்கையர்கள் உட்பட மூவர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து அதிகளவில் தங்கம் கடத்திவரப்படுவதாக இந்திய மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.
அதையடுத்து விமான நிலையத்தில் மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தீவிர கண்காணிப் பில் ஈடுபட்டனர்.
இதில் லண்டனில் இருந்து நேற்று முன்தினம் சென்னைக்கு வந்த விமானத்தில் பயணம் செய்த திருச்சியைச் சேர்ந்த ராமன் (வயது-41) என்பவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர்.
அவரிடம் 2 சூட்கேஸ்கள் இருந்தன. அவற்றைத் திறந்து பார்த்தபோது 2 சூட்கேஸ்களிலும் துணிகளுக்கு அடியில் 50 தங்கக் கட்டிகளை மறைத்து கடத்தி வந்திருந்தமை தெரிந் தது. 2 சூட்கேஸ்களில் இருந் தும் தலா 100 கிராம் எடை கொண்ட 5 கிலோ தங்கக் கட்டிகளை அதி காரிகள் கைப்பற்றினார்கள். அவற்றின் மொத்த மதிப்பு ஒரு கோடி (இந்திய ரூபாய்) ஆகும். இது தொடர்பாக ராமன் கைது செய்யப்பட்டார்.
இதேபோல் கொழும்பில் இருந்து சென்னைக்குச் சென்ற விமானத்தில் இலங்கையைச் சேர்ந்த முகமது (வயது 31), காசிம் (வயது 32) ஆகிய இருவர் சுற்றுலா விசாவில் சென்றிருந்தனர்.
அவர்களது உடைமைகளை அதிகாரிகள் சோதனை செய்தனர். அவர்களிடம் ஏராளமான தேயிலைத் தூள் பொதிகள் இருந்தன.
இலங்கையில் தரமான தேயிலை கிடைப்பதால் வாங்கி வந்ததாக அவர்கள் கூறினர்.
ஆனாலும் அதி காரிகள் அந்தத் தேயிலைத் தூளை சோதனை செய்தபோது, 2 பேரும் தலா ஒன்றரைக் கிலோ தங்கத்தை பொடியாக்கி அதில் கலந்து நூதன முறையில் கடத்தி வந்ததைக் கண்டுபிடித்தனர்.
அதையடுத்து இருவரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ரூ.90 இலட்சம் மதிப்புள்ள 3 கிலோ தங்கத்தைப் பறிமுதல் செய்தனர்.
பின்னர் கைதான இலங்கை இளைஞர்கள் உட்பட 3 பேரிடமும், அந்த தங்கத்தை யாருக்காக கடத்தி வந்தனர் என்று அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# மெல்பேனில் ஆர்ப்பாட்டம்

## இலங்கை அகதிகள் 153 பேரையும் ஆஸி. ஏற்றுக்கொள்ளுமாறு கோரி




மெல்பேன், ஜூலை 15
ஆஸ்திரேலியா அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 153 தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்றுகோரி நேற்று முன்தினம் ஆப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
அதிக மக்கள் கூடுகின்ற மெல்பேன் நகரில் Refugee action collective என்ற அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், ஆஸ்திரேலிய மக்கள் பலர் கலந்து கொண்டு அகதிகளை ஆபத்தான இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம், அவர்களை தரையிறங்க அனுமதி, அவர்களை தங்க அனுமதி போன்ற கோஷங்களை எழுப்பினர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் பசுமைக்கட்சி சார்பில் செனற்றர் ஜெனட்ரைஸ் கலந்து கொண்டு உரையாற்றினார்.
இதில் தமிழர்களும் கலந்து கொண்டனர். தமிழ் அகதிகள் சார்பில் 2009ஆம் ஆண்டு மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்ட 254 அகதிகளின் பேச்சாளரான நிமல் கலந்துகொண்டு பேசினார்.
இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கை இன்னமும் ஆபத்தான நாடாக இருந்து வருவதாகவும், இலங் கையில் தமிழர்கள் அரசியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதில்லை என்று கூறிய ஆஸ்தி ரேலிய அமைச்சர் ஸ்கொட் மொரிசனின் கருத்து தவறானது என்றும் அங்கு பேசியவர்கள் சுட்டிக் காட்டினர்.
யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்த அமைச்சர் அங்கு தமிழர்கள் எவரையும் சந்திக்காது இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட மேஜர் ஒருவரையே சந்தித்ததாகவும் அங்கு தமிழர்கள் சார்பில் கலந்து கொண்ட நிமல் எதிர்ப்பு வெளியிட்டார். (வ)

## தென்பகுதிக்குச் சென்று வருவோரால் வடமராட்சியில் டெங்கு பரவும் அபாயம்

வடமராட்சி, ஜூலை 15
வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள போதிலும், கொழும்பு உட்பட தென்பகுதிக்குச் சென்று வரும் பயணிகளால் மாதாந்தம் சுமார் 10 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவற்றில் தலா 5 பேர் வீதம் பயணிகள் இந்த நோய்க்கு இலக்காகி வருவது இனங்காணப்பட்டுள்ளது.



எனவே கொழும்பு உட்பட தென்பகுதிகளுக்குச் சென்று வரும் வடமராட்சிப் பிரதேசவாசிகள் மிக அவதானமாக இருப்பதுடன் சிறு நோய் வந்தால்கூட அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று டெங்கு நோய் ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
டெங்கு நோயால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட அல்வாய் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் இந்தக் கிராமத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-173)


# பிரதம செயலருக்கு வழங்கிய உத்தரவுகளை மீளப்பெறுவதற்கு சம்மதித்தார் முதலமைச்சர்

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் வட மாகாணத்தின் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷுக்கு தான் வழங்கியிருந்த உத்தரவுகளை மீளப் பெறுவதாக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உயர்நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தை விட்டு வெளியே செல்ல வேண்டுமானால் முதலமைச்சரின் முன்னனுமதியைப் பெற வேண்டும் என்பது உட்பட பல ஒழுக்க விதிக் கட்டுப்பாடுகளை விதிக்கும் சுற்றறிக்கை ஒன்றை மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு முதலமைச்சர் வழங்கினார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சுற்றறிக்கை தனது அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கை என்று தெரிவித்து, அதனை ஆட்சேபித்து, உயர்நீதிமன்றத்தில் பிரதம செயலாளர் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கின் ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது முதலமைச்சரோ அல்லது அவரின் சார்பில் அவரது சட்டத்தரணிகளோ நீதிமன்றத்தில் முன்னிலைப்படாத நிலையில் ஒருதலைப் பட்சமாக இந்த சுற்றிக்கையை இடைநிறுத்தி வைத்து ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்தச் சூழலில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதி மன்ற ஆயத்தின் முன்னால் இந்த மனு இன்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே முதலமைச்சர் தனது உத்தரவுகளை மீளப் பெறத் தயாரென அவர் சார்பாக முன்னிலையான வழக்கறிஞர் சுமந்திரன் தெரிவித்தார்.



பிரதம செயலரும் முதலமைச்சரும் இந்த விவகாரத்தை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதையே நீதிமன்றம் விரும்புகிறது எனப் பிரதம நீதியரசர் குறிப்பிட்டதை அடுத்து இந்த இணக்கப்பாடு ஏற்பட்டது என்று மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோமி தயாசிறி கூறினார்.

அதேவேளை பிரதம செயலரை நீக்குவதென்றாலும் இடமாற்றம் செய்வதென்றாலும் அதனை சுமுகமாக மேற்கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை வழங்குமாறு நீதிமன்றம் கோரியுள்ளது என்று முதலமைச்சர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ற)

# ஒருவிடயத்தில் மட்டுமே ஜனாதிபதி ரணிலிடம் தோற்றுப் போயுள்ளார்

*பிரதி சபாநாயகர் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் ஒரு விடயத்தில் மாத்திரமே தோற்றுப் போயுள்ளார் என்று தெரிவித்துள்ளார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி. ரணில் விக்ரமசிங்க தனது அரசியல் வாழ்க்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முந்தி சென்ற ஒரே சந்தர்ப்பம், மகிந்த ராஜபக்ஷவை விட அதிகமான காலம் எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருப்பது மாத்திரமே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நுவரெலியா மாவட்டம் வலப்பனையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்தரங்கொன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"எதிர்க்கட்சிகள் இன்று பொருள்களின் விலை அதிகரிப்பு பற்றி மட்டுமே பேசுகின்றன. எனினும் அன்றிருந்த வாழ்க்கை நிலைமையை விட மக்கள் இன்று உயர்ந்த மட்டத்தில் வாழக் கூடிய சூழல் உருவாகியுள்ளது பற்றி எதிர்க் கட்சிகள் பேசுவதில்லை.

10 வருடங்களுக்கு முன்னர் இருந்த வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், தொலைபேசிகளை விட இன்று எந்தளவுக்கு அவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது?. தொழில் நுட்பம் வளரும் போது புதிய உபகரணங்களின் பயன்பாடுகளுக்கான செலவுகள் அதிகரிக்கும். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஆட்சியில் இருந்தாலும் அதனை தடுத்து நிறுத்த முடியாது.

அரசு கடனை பெற்று அதன் மூலம் மக்களுக்கு தற்காலிமான நிவாரணங்களை வழங்காது, நாட்டின் எதிர்காலத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை நாட்டுக்குள் ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)





கடந்த சனிக்கிழமை இரவு வேளையில் போரதீவுப்பற்று, விவேகானந்தபுரம் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் வீடொன்றை முற்றாகச் சேதப்ப டுத்தியுள்ளன. அத்துடன் பிரதேச செயலகத்தின் கதவுகளை உடைத்துள்ளதுடன், வேலிகளையும் சேதப்படுத்தியுள்ளன. (ற)

# மாகாணப் பாடசாலைகளின் அதிபர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

திருகோணமலை, ஜூலை 15

மாகாண பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றத்துக்காக விண்ணப்பிக்கும் அதிபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க மாகாணக் கல்விச் செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"2014 ஆம் ஆண்டுக்காக தேசியப் பாடசாலைகளுக்கான அதிபர் தரம் கொண்டோரை இடமாற்றம் செய்வது தொடர்பில் எதிர்வரும் தினங்களில் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. அதற்கமைவாக மாகாணப் பாடசாலைகளிலிருந்து தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றத்துக்காக விண்ணப்பிக்கும் அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

மாகாணப் பாடசாலைகளில் தற்சமயம் அதிபர் சேவையில் கடமையாற்றும் விருப்பமுள்ள அதிபர்கள் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து ஜூலை 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "உதவிச் செயலாளர் (அதிபர்), அதிபர் கிளை, கல்வி அமைச்சு இசுறு பாய- பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு மாகாணக் கல்விச் செயலாளர், மாகா ணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

அதேவேளை, இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் 18.07.2014 ஆம் திகதிக்கு முன்னர் தமது பணி மனைகளுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (ற)

# வெற்றிலை துப்புவோர் இனிமேல் அவதானம்

*எச்சரிக்கின்றது பொலிஸ்*



கொழும்பு, ஜூலை 15

பொது இடங்களில் வெற்றிலையை குதப்பி துப்புவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பொது இடங்களில் மது போதையில், மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவோர் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கால்நடைகளை பொது இடங்களில் விடுதல், அவற்றை பொது நீர்நிலைகளில் குளிப்பாட்டுதல், போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் வாகனங்களை கழுவுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மரண அறிவித்தல்



**சிங்கராசா தர்மபாலன் (பாலு)**

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிங்கராசா தர்மபாலன் நேற்று (14.07.2014) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - அன்னலட்சுமி (மரகதம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நவரட்ணம்- லீலாவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், எழில் மதியின் அன்புத் துணைவரும், ஜயந்தன், நியூட்டன், கவிதா, தர்ஷனா, தமிழ்மதி, கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணியின் அன்புத் தம்பியும், சரவணபவன், கலாவதி,சுகுணாவதி, இந்திராவதி, கோமதி, சுரேஷ்வரன், கணேஷ் வரன்,கோகிலா, காலஞ்சென்ற மல்லிகாவதி ஆகியோரின் மைத்துனரும், கபிலராணி, சிவகௌரி, ரஜனிகாந்தன், சர்மிளா, கஜாநிதி, ரஜீவ்காந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,யதுஷா, துஷாந், ஹன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2014) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை வடக்கு ,ஏழாலை** — தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 0774383177, 0779292093

## விருந்தினர் விடுதி தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சகல வசதிகளுடனும் கூடிய விருந்தினர் விடுதி வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவை. (யாழ். நகரில் இருந்து 2K.M. இற்குள் விரும்பத் தக்கது.)

தொடர்பு: 071 872 4058

E-mail: bengamin929@gmail.com

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

A/L -2014
வரலாறு
இறுதிக் கருத்தரங்கு
காலம்:15.07.2014
17.07.2014
நேரம்:- 9.00-12.00
ஆசிரியர்
S.S. தாஸ்
NEC
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட இப் பயிற்சிநெறியில் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்திலும் பேச முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.07.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப் பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்.
SAAMSON Language School
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15 .07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.